Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.




புத்தகம் 11 ஏவிளம்பி ஹு ஐப்பசி மாதம் 11 திகதி 27-10-57 ஞாயிற்றுக்கிழமை ரபி, ஆகிர் பிறை 3 இதழ் 22

# 'வெறும் வாய்ப் பேச்சல்ல : வாக்குறுதியை காப்பாற்றி விட்டோம்'

## தாழ்த்தப்பட்டோரின் நம்பிக்கைக்கு தமிழரசுக் கட்சிதான் பாத்திரமானது

## சிறுபான்மைத் தமிழர் செனட்டரானுர்: டாக்டர் நாகநாதன் மட்டற்ற மகிழ்ச்சி

(சுதந்திரன் நிருபர்)

"சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை, கிடைத்த முதல் தருணத்திலேயே பரிபூரணமாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றி வைத்ததுபற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சி மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதற்குத் தக்க நியாயமிருக்கிறது" என்று சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியும், தமிழரசுக் கட்சியின் செயற்குழு உறுப்பினருமான திரு ஜி. நல்லையாவைச் செனட் சபைக்குத் தெரிவு செய்ததுபற்றிக் கூறுகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்.

டாக்டர் நாகநாதன் தொடர்ந்து கூறியதாவது: "1955ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் சார்பாக ஒரு தூதுகோஷ்டி தமிழரசுக் கட்சித் தலைவர்களைச் சந்திக்க விரும்பியது. இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் ஒரு மகாநாடு கூட்டப்பெற்றது. அம்மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர். சிறுபான்மைத் தமிழர்களுடைய நிலைமைபற்றியும், உயர்வு தாழ்வு, தீண்டாமை ஆகிய சமூக தீங்குகளை ஒழிப்பது சம்பந்தமாகத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் யாவை என்பதுபற்றியும் தமிழரசுக் கட்சியினர் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றவகையில் விளக்கமான தெளிவுரை கூற வேண்டும் என்பதாகச் சிறுபான்மைப் பிரதிநிதிகள் கோரினர்.

### நோக்கங்களில் ஒன்றுதான்

"இக்கோரிக்கைக்குப் பதிலளிக்கையில், தமிழரசுக் கட்சியின் அமைப்புத் திட்டத்திலேயே தீண்டாமை போன்ற சாபத்தீடுகளை எவ்வளவு சீக்கிரம் களைய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் களைந்து தீர்ப்பது என்ற விதி கட்சியின் நோக்கங்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று தமிழரசுத் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

### பகிரங்க சவால்

"அப்படியானால் எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைக் கட்சி சார்பில் அபேட்சகராக நிறுத்த முடியுமா என்ற ஆசங்கை இனப்

பப்பட்டது. இதை ஒரு ஆசங்கை என்று சொல்வதைவிடப் பகிரங்க சவால் என்றே கொள்ள வேண்டும். இதற்குத் தமிழரசுத் தலைவர்கள் பின்வருமாறு பதிலிறுத்தனர்: 'சிறுபான்மைத் தமிழர் ஒருவரை அபேட்சகராக நியமிக்கவோ அல்லது அப்படிப்பட்ட ஒருவரை ஆதரித்து நிற்கவோ தமிழரசுக் கட்சிக்கு எதுவித மறுப்பும் கிடையாது. ஆனால் இன்று இலங்கையில் நிலவி வரும் அரசியல் சமூக சூழ்நிலையில் தமிழ்ப் பிரதேசத்திலும் சரி சிங்களப் பிரதேசத்திலும் சரி, ஒரு



திரு: ஜி: நல்லையா

தமிழரசுக் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய செனட்டர்

தாழ்த்தப்பட்ட மகன், அவன் எவ்வளவு தகுதியும் திறமையும் வாய்ந்தவனுயிருந்தபோதிலும், என்ன கொள்கை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவனுயிருந்த போதிலும், ஜனப்பிரதிநிதி

(9-ம் பக்கம் பார்க்க)

# பதவிக்குளக் குடியேற்றம் : இரண்டாவது கட்டம்

## அரசாங்கத்தின் அளவு மீறிய அவசரத்திற்குக் காரணம்

### திருமலையைச் சிங்கள மயமாக்குவதே அந்தரங்க நோக்கமா?

(சுதந்திரன் நிருபர்)

பதவிக்குளக் குடியேற்றத்தின் இரண்டாவது கட்டத்தைத் துரிதமாக நடத்தி முடிக்கும்படி காணி மந்திரி காரியாலயத்திலிருந்து அந்தரங்கமும் அவசரமுமான கட்டளையொன்று அநுராதபுரம் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பதவிக்குளக் குடியேற்றத்தின் இரண்டாவது கட்டமாக சுமார் 3,500 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு நிலமும் திருகோணமலைப் பிரிவைச் சேர்ந்த நிலமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் பிரதேசத்தில் தற்சமயம் வேலை செய்யும் சிங்களத் தொழிலாளர்களிடையேயிருந்தும், அதிகாரமற்ற முறையில் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்களிடையேயிருந்தும் குறைந்தபட்சம் 500 பேரையாவது இந்த நிலத்தில் குடியேற்றிவிடுமாறு பிரஸ்தாப கட்டளையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம். இப்படிக் குடியேற்றப்படுபவர்களைச் சட்டரீதியாகக் குடியேறியவர்களாக மதித்து சகல வசதிகளும் செய்து கொடுக்கும்படியும் அநுராதபுரம் அரசாங்க அதிபர் பணிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர், உடனடியாக ஒரு நிலக் கச்சேரியை வைத்து வடமத்திய மாகாணத்திலிருந்து 300 குடியேற்றக்காரர்களைத் தேர்ந்தெடுக்குமாறும் 100 குடிகள் கொழும்பிலிருந்து அனுப்பப்படுவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

பதவிக்குளக் குடியேற்றத்தின் இரண்டாவது கட்டத்துள் அடங்கிய தெற்காணிகள் இன்னும் காடு களைந்து களனியாக்கப்படவில்லை. இப்போது குடியேற்றப்படுபவர்கள் மேட்டுப் பூமியிலேயே குடியேற்றப்படவிருக்கிறார்கள். அப்படியானால் அரசாங்கத்தின் இந்த அவசரம் எதற்கு என்ற கேள்வி எழுகிறது. அவசரத்துக்குக் காரணம் திருமலைப் பிரதேசத்தைச் சிங்களக் குடியேற்றத்தினுல் நிறைத்துவிட காணி அமைச்சர் கடுகதி வேகத்தில் வேலை செய்ய விரும்புகிறார் என்பதுதான்.

குடியேற்றம் சம்பந்தமான காரியங்கள் அனைத்தும் இதுகாறும் அநுராதபுரக் கச்சேரியைச் சேர்ந்த மேலதிக அரசாங்க அதிபரால் கவனிக்கப்பட்டுவந்தன. இப்போது அவர் கையிலிருந்து இந்த வேலைகள் பறிக்கப்பட்டு வகுப்புவாத அடிப்படையில் ஒரு எல். டி. ஓ. உத்தியோகஸ்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவருக்கும் அரசாங்க அதிபருக்கும் இனி எதுவித தொடர்பும் இருக்காதென்றும் இந்த எல். டி. ஓ. உத்தியோகஸ்தர் காணி அமைச்சர் காரியாலயத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கடமையாற்றுவார் என்றும் தெரிகிறது.

# வேலை நிறுத்தங்கள் நடைபெற அரசாங்க அமைச்சரே காரணம்?

## பிலிப் குணவர்த்தனு மீது சந்தேகம்

## தன் முக்கியத்துவத்தை உணர்த்த இந்த நாடகம் நடத்துகிருராம்

(சுதந்திரன் நிருபர்)

தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் பற்பல இடங்களிலும் நாளிலும் பொழுதிலும் அதிகரித்து வருவதற்கு காரண கர்த்தராயிருப்பவர் உணவு அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனுதான் என்று கொழும்பில், அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது. இந்த அபிப்பிராயம் இப்போது பிரதமரின் காதுக்கும் எட்டிவிட்டது என்று தெரிகிறது.

அரசாங்க மந்திரிப் பதவியிலிருக்கும் திரு பிலிப் குணவர்த்தனு அரசாங்கத்துக்கு தலையிடியையும் சில சமயங்களில் அதற்கு வீழ்ச்சியையும் கொடுக்கக் கூடியதான தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஏன் ஆதரித்துப் போஷிக்க வேண்டும்? இது பலருக்கும் எழும் சந்தேகமாகும். மந்திரி சபையில் திரு பிலிப் குணவர்த்தனுவுக்கும் சபை முதல்வர் திரு சி. பி. டி. சில்வாவுக்குமிடையில் பதவிப்போட்டி எம். ஈ. பி. மந்திரி சபை தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருவது தெரிந்த விஷயம்.

இந்த நிலையில் பிரதமருக்கும் மந்திரி சபையில் மற்றுமுள்ள தமது சகாக்களுக்கும் தனது முக்கியத்துவத்தை உணர்த்தவே திரு பிலிப் குணவர்த்தனு தன் பிடியிலுள்ள தொழிலாளர்களை வேலைநிறுத்தம் செய்ய இரகசியமாகத் தூண்டி வருவதாகவும் அப்புறம் அது நடைபெறும்போது பகிரங்

(13-ம் பக்கம் பார்க்க)

### திருமணத் தம்பதிகளுக்கு

இல்லறத்தை வெற்றிகரமாய் நடத்துவதற்கு பல அரிய விஷயங்கள் அடங்கிய குடும்ப நூல் விலை ரூ 3-00. லியோன்ஸ், 143/26, ஸ்ரீந்துப் பிட்டிக் கொடு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகலிங்கம் சுருட்டு




கனகலிங்கம் சுருட்டையே பாவியுங்கள்

சுருட்டுஉலகிலேயே
ஓர் புதுமை

உயர்ரக புகையிலையைக்
கொண்டுதயாரிக்கப்படும்
கனகலிங்கம்சுருட்டையே
பாவியுங்கள்.

விநியோகஸ்தர்கள்:

V.கனகலிங்கம்பிள்ளை
& சன்ஸ்,


17, செட் யோன்ஸ் தெரு,
கொழும்பு.

போன்: 5883. தந்தி: "கன்சிகார்ஸ்"

கனகலிங்கம் சுருட்டையே பாவியுங்கள்


யாவரும் அழகு பெற அணிவதற்கு விரும்புவது

## "மெக்ஸ்டோ சேட்டுகளே"



பதினொருவித அழகான நிறங்களில் கிடைக்கும் இச்சேட்டுகளை ஒருமுறை அணிந்தால், பலனை அடைவீர்கள்.

சிறுவர்முதல் முதியோர்வரை அணியக்கூடிய வெவ்வேறு அளவுகளில் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம்:

முதியோரின் கழுத்து சைஸ்

| | |
|---|---|
| 13-13½—14-14½-15 கலரில் ஒன்று விலை | ரூ. 7-00 |
| வெள்ளைக் கலரில் ஒன்று விலை | ரூ. 6-00 |
| சிறியோர் சைஸ் 11-11½—12-12½ கலரில் ஒன்று விலை | ரூ. 5-00 |
| வெள்ளையில் ஒன்று விலை | ரூ. 4-50 |

## மெக்கி ஸ்டோர்ஸ்

265 மெயின் வீதி, கொழும்பு.

டெலிபோன்: 4173

கிளைகள்:—

61, கொழும்பு வீதி, கண்டி.
154, மெயின் வீதி, காலி.
144, மெயின் வீதி, ரத்தினபுரி.
24, பஜார் வீதி, பதுளை.
11, பஜார் வீதி, குருணாக்கலை.


இலக்கியம்:

# "ஓடுகின்ற மேகங்காள் கூடு வருகின்ற தென்று சொல்லுங்கள்"

—o—

# களம் சென்று வாகை சூடி வந்த வீரன் காதலிக்கு அனுப்பும் மேக தூது

—:0:—

## நந்திக் கலம்பகத்திலே நெஞ்சையள்ளும் ஓர் காட்சி

அன்று தமிழகமெங்கும் பல்லியங்கள் ஒலித்தன. பறைமேளங்கள் எட்டுத்திக்கும் கொட்டி முழங்கின. காஞ்சிநகர் மன்னன் நந்திவர்மனின் அன்புக் கட்டளையைக் கேட்டு, அதில் நாட்டங் கொண்ட செந்தமிழ் நாட்டுச் சுந்தர வீரர்களெல்லோரும், அரச அலுவலகத்தை நோக்கி ஓடினர்கள்.

அவர்களில் அவனும் ஒருவன்! நல்ல அழகன். அரும்பு மீசைக்காரன். மாண்புடன் மானிலம் பேணும் மறக்குல மகன். இத்துணை பெட்பு பொருந்திய கட்டழகனுக்குக் கன்னித் தமிழ் நாட்டுக் கட்டழகியொருத்தி, காதற் கிழத்தியாகக் கிடைத்துவிட்டாள்! பின் சொல்லவும் வேண்டுமா? வெட்ட வெளியிலே வட்டமிடும் காதற் சிட்டுக் குருவிகளாகக் காட்சியளித்தார்கள். பொழுது போவதே அவர்களுக்குத் தெரிவதில்லை.

★

"மன்னா! தாங்கள் என்னை அழைத்தீர்களாமே...?"

"யாரது...நீயா...! வந்துவிட்டாயா வீரா? மிக்க மகிழ்ச்சி. ஒரு முக்கிய விஷயமாக உன்னை அழைத்தேன். நம் நாட்டில் மாற்றாரின் கொடுமையால், துன்பம் கவிந்திருக்கின்றது. வீரா இதைப் போக்க வேண்டும்; புகழ் சேர்க்க வேண்டும்"

"மன்னா! கட்டளையிடுங்கள். இக்கணமே வெட்டி வீழ்த்துகின்றேன் அவர்களை—குறுமதியாளர்களின் கொட்டம் அடக்குகிறேன்"

வீர இளைஞனே! நாளைக் காலை வேளையில் புறப்பட இருக்கும் காளையர்கள் கூட்டத்திற்கு, உன்னைத் தலைவனாக நியமித்திருக்கின்றேன். வெற்றியுடன் சென்று வா"

"தங்கள் சித்தம் என்பாக்கியம் மன்னவா, கன்னித் தமிழ் அன்னைக்குத் தொண்டு. இல்லையேல் என் சென்னி துண்டு. வருகின்றேன், வணக்கம்"

★

அமுதைப் பொழியும் குளிர் நிலவு, இதமாகக் காய்ந்தது. தென்றல் குளுகுளுவென்று வீசியது. எழில் பொங்கும் ஏந்திழையாள், தளிர்க்கரத்தால் மண் குழைத்து விளையாடினுள். துளிர்விட்டு முளைக்கும் தன் காதலை—எண்ணிக் களிப்படைந்தாள். புள்ளிமான் போலத் துள்ளினுள். அவன் வந்தான். அவள் மாம்பழக் கன்னத்தைக் கிள்ளினுன். அவள் பேசினுள். "போதும் அத்தான்! உங்கள் விளையாட்டு?"

"என்ன என் மீது கோபமா...?"

"ஹூம்! இவ்வளவு நாழிகை கழித்து வந்தால்...?"

"மாங்குயிலே! காதலைச் சிருஷ்டித்த கடவுள், அதில் கடமையையும் சேர்த்துப் படைத்துவிட்டான் ..என்ன செய்வது? நாளைக் காலை புறப்பட இருக்கும் கூட்டத்தில் யானும் ஒருவனுகப் போக வேண்டும். இது மன்னன் உத்தரவு"

அவள் பெருமூச்செறிந்தாள்..."அவசியம் போகத் தான் வேண்டுமா? [illegible] எனும் வாள்கொண்டு என்னுள்ளத்தைத் தாக்காதே?

சோதனை காலம் வந்துவிட்டது. வேதனைகொள்ளாதே? கடமை முடிந்ததும், விரைவில் திரும்பிவிடுவேன். படை வீரர்கள் என் வரவை எதிர்பார்ப்பார்கள். தடை விதிக்காமல் விடைகொடு"

அவள் அம்புபட்ட பறவையானுள். "எப்படி அத்தான்! விடை கொடுப்பது...?"

"சித்திரப்பாவையே! கார் காலம் வருமுன், கட்டாயம் திரும்பிவிடுவேன். பின் கட்டாணி மண்டபத்தில் கை பிடிப்போம். விட்டுப் பிரியாமல் வாழ்வோம்"

தி. நாகராஜன்

"ஆசை அத்தான்! தாங்கள் கார்காலம் வருமுன் திரும்பாவிட்டால், யான் பித்துப் பிடித்து—கத்தி—செத்துப்போய்விடுவேன் என்பதை மறக்காதீர்கள்?"

"கண்ணே! ககனத்துச் சந்திரன் மேல் ஆணை. உன்னை கனவிலும் மறவேன்"

மின்வெட்டும் நேரத்தில், ஒட்டுமுள்ளத்தினர் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தனர்.

★

நாட்கள் நகர்ந்தன. ஒருவகையாகப் போரும் முடிந்தது. அவன் பக்கம் வெற்றியும் கிட்டியது. கார்காலம் வந்தது. தலைவியின் சபதம் அவன் நினைவுக்கு வந்தது:

"ஆசை அத்தான்! தாங்கள் கார்காலம் வருமுன் திரும்பாவிட்டால், யான் பித்துப்பிடித்து—கத்தி—செத்துவிடுவேன்..."

அவன் பிரக்ஞை இழந்தான். இரு குதிரைகள் இணைக்கப்பட்டுள்ள, ரதத்தை காட்டு வழியில் மிக வேகமாகச் செலுத்தினுன். விண்முகட்டிலே இடியோசை முழங்கிக்கொண்டிருந்தது. தேர் செல்கின்றதே எனும் நினைவு அவனுக்கில்லை! இந்த மேகங்கள் தன் தேரைவிட மிகவும் வேகமாக முன்னேறிச் செல்கின்றனவே எனும் கவலை தான்.

"ஐயகோ! என்ன கொடுமை நிகழ்ந்துவிட்டது? இம்மேகங்கள் என்னை முந்திக்கொண்டு, என் நகரத்திற்குப் போய்விட்டால், பெரும் ஆபத்தல்லவா ஏற்படப்போகின்றது? 'கார்காலம் வருமுன் திரும்பிவிடுவேன்' என்று அவளிடம்; சொல்லிவிட்டல்லவா வந்தேன்? என்னைக் கொல்லாமல்கொல்லும்இந்தப்பொல்லாத மேகங்கள், ஊர் போய்ச் சேர்ந்துவிட்டால், தலைவி என் சொல்லைப் பொய் என்றுஎண்ணி, வேதனை பொறுக்காமல், அல்லற்பட்டு இறந்துவிட்டால்...?"

அவன் நெஞ்சம் துடித்தது.

"ஒடுகிற மேகங்காள்! நீங்கள் எல்லோரும் நல்லவர்கள். எனக்கு தூதொன்று சொல்வீர்களா? என் காதலியைச் சந்தித்தால், கூடு வருகின்றதென்று கூறுங்கள்;" என்று ஓடுகின்ற மேகங்களிடம் தூது சொல்லி அனுப்புகின்ருன் அவன்.

இத்துணை இனிய கருத்தை இங்கிதமாகத் தரும் பாடலை நந்தமிழரின் அகவாழ்வுக் காவியமான, நந்திக் கலம்பக இலக்கியப் பூங்காவிலே நாம் பார்க்கலாம். இதோ அந்தப் பாடல்:

"ஒடுகிற மேகங்காள்!
 ஓடாத தேரில் வெறும்
கூடு வருகுதென்று
 கூறுங்காள்—நாடறிய
நந்தித் திருவாளன்
 மாநகரில் நன்னுதலைச்
சந்தித் திடுவீரேல் தான்"

## அறியாள் போலும்

— முருகையன் —

இன்னுசெய் யாமை எனும்அந் நெறிமுறையை
என்னே! அறியாள் இவள்போலும்;
மின்னூர்
இடையும், சிவந்த இதழும், விழியின்
கடையும் உடைய இவள்.

வீதி பொது;இவ் விதியை அறியாது
தீது புரிதல் சிறப்பாமோ?
நீதி
இதுவோ? விழிவேல் இணைகொண்டுமற்றோர்
இதயம் கிழிப்பள் இவள்.

மற்றவரும் வாழ வழிவிடுதல் என்பதனை
இற்றைவரைஅறியாள் போலும் இவள்;
சுற்றுகிற
கண்ணின் படைக்கலத்தாற் காலன்
எண்ணம் படைத்த இவள். [தொழில்பார்க்கும்

தன்னை விடஇச் சகத்திற் பிறர்உள்ளார்
என்னும் இதைஅறியாள் போலும் இவள்;
தின்னுகிற
நோக்கைப் படையாக்கி நோய்செய் திருநயத்தை
தாக்கித் தகர்க்கும் இவள்.

அயலாரும்வாழ அனுமதித்தல் என்னும்
செயலே தெரியாது போலும்;
ஒயிலான
பார்வைகொடு நெஞ்சகத்தைப் பாதிபடச் சூழுகிற
கூர்விழிகள் கொண்ட கொடிக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என். எம். கந்தசாமி
பண்டத்தரிப்பு

கே: தமிழர்கள் இருபெண்களை மணப்பது தமிழ்ப் பண்பாட்டிற்கு பொருந்தாதெனில் தமிழ்க்கடவுள் முருகன் எப்படி இரண்டு மனைவிகளைக் கட்டிக்கொண்டார்?

ப: முருகனை விட்டுத் தள்ளுங்கள். பெரிய பகுத்தறிவுச் செம்மல் என்று தி. மு. க. பத்திரிகைகள் எல்லாம் கரியாக்கப்படும் கலைவாணர் என். எஸ். கே. மட்டும் எப்படி மூன்று மனைவிகளைக் கட்டிக் கொண்டு பகுத்தறிவாளர் ஆனார்?

ஃ

வ. பாலசிங்கம், மட்டக்களப்பு

கே. நீர் காதல் திருமணம் செய்து கொண்டதேன்?

ப: ஐயர் போடும்புகையில் மூன்று மணித்தியாலம் உட்கார்ந்து வெம்பிப் பழுக்க முடியாமல்!

ஃ

எஸ். பஞ்சலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: விபசாரி எப்படி வாழ்கிறாள்?

ப: படுக்கையின் கொதிப்பிலே தன் கும்பியின் கொதிப்பை அடக்கிக் கொள்கிறாள்.

ஃ

எம். செல்வமணி, கரவெட்டி

கே: தமிழ்ப் பகுதிகளில் கொம்யூனிஸம் பரவுமா?

ப: எப்படிப் பரவ முடியும். ஒரு கதாநாயகனுக்கு வேண்டிய கலைதான் தோழர் கந்தையாவிடம் இல்லையே.

ஃ

செ. புவனேந்திரன்,
மட்டக்களப்பு

கே: கம்பன் ஆரியனா? திராவிடனா?

ப: ஆரியத்தால் அடிமைப்படுத்தப்பட்ட திராவிடன். ஆனால் ஈடிணையற்ற தமிழ்க் கவிஞன்.

ஃ

எஸ். குணம், பளை

கே: அனாதியான ஆறும் எவை?

ப: மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் இவற்றை ஒன்று சேர்த்து சிருஷ்டித் தொழில் புரியும் இயற்கை சக்தியும் சேர்ந்து அனாதியான ஆறாகும்.

ஃ

மனோ-ராதா, மட்டுவில்

கே: அழகும் பொருளுமற்ற பெண்களை மணக்க மறுக்கும் இன்றைய 'சீர்திருத்தவாதி' களை என்னென்றழைப்பது?

ப: போதனைகளைச் சாதனையில் காட்டாத இடதுசாரி இளஞ் சிங்கங்கள் என்று அழைக்கலாம்.

ஃ

சி. என். மாரிமுத்து, அராலி

கே: தங்களுடைய பேனாவை எதற்கு ஒப்பிடலாம்?

ப: செஞ்சந்திரனை ஏந்திச் சென்ற மூன்று படி ருஷிய ரொக்கட்டிற்கு ஒப்பிட்டுப் பாரும்.

ஃ

எம். கிருஷ்ணபிள்ளை,
வாழைச்சேனை

கே: பணம் படைத்த பிரபுக்கள் ஏழைகளை வாட்டி வதைக்கிறார்களே ஏன்?

ப: ஏழைகள் பணம் படைத்தவர்களாக இல்லாததால்!

எம். எஸ். ராசா,
எட்டியாந்தோட்டை

கே: எனக்கு ஒரு காதலி உண்டு. அவளிடமிருந்து ஒரு பொருளை எடுத்தேன். அதைத் திருப்பிக் கேட்கிறாள். என்ன செய்வது?

ப: அவளிடமிருந்து நீர் எடுத்த பொருள் முத்தாகத்தான் இருக்கவேண்டும். கேட்டாலும் கேட்காவிட்டாலும் திருப்பிக்கொடுத்து விடுவதுதான் அழகு.

ஃ

ஜி. ஏ. ஆனந்தம்,
யாழ்ப்பாணம்

கே: ருஷியாவிலும் அமெரிக்காவிலும் விஞ்ஞானம் மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. ஆனால் இலங்கையில் என்ன வளர்ந்து வருகிறது?

ப: தினப் பத்திரிகையொன்றைப் பார்த்தாலே தெரியுமே! முன் பக்கத்தில் முதல் செய்தி ருஷிய சந்திரனைப்பற்றியது. இரண்டாவது காணப்படுவது நாத் தமிழ்க் கலாமணி நடராஜ பாகவதரின் ''பெண்ணுருப் பெற்ற எலும்பு'' என்பது பற்றி நான்கு மணித்தியாலக் கதாப் பிரசங்கத்தின் நாலு கலச் செய்தி!

> மிஸ்டர் குயுக்தியார்
> C/O சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு—12.

ஃ

பி. நியாகராஜன்,
பண்டத்தரிப்பு

கே: கவலைக்கு மருந்து உண்டா?

ப: கவலைக்குப் பலரும் பல வித மருந்துகளைச் சிபார்சு செய்கிறார்கள். பாட்டி துவைத்த வெற்றிலை பாக்கை மருந்தாகக் கொண்டு குதப்புகிறாள். காலேஜ் மாணவி துப்பறியும் நாவலைப் புரட்டுகிறாள். பக்கத்து வீட்டு அப்புசிங்கோ சாராயப் புட்டியைத் திறக்கிறான். அம்பிப் பயல் ''யார் பையனுக்கு?'' ஓடுகிறான். ஸ்ரீமதி குயுக்தியார் அலமாரியைத் திறந்து தன்னிடமுள்ள அத்தனை பட்டுச் சேலைகளையும் ஒருமுறை புரட்டிப் பார்க்கிறாள். நான் மட்டும் புத்தரின் போதனைகளை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். அதில் ''பற்றைவிட்டவனுக்கு கவலை இல்லை'' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஃ

''சிஜீயார்'' நல்லூர்

கே: என் வீட்டிற்கு எதிர்ப்புறமாக இருக்கின்ற வீட்டினுள்ள வனிதை யொருத்தியை நான் என் ஜன்னலூடாகக் காணும்போதெல்லாம் இளநகை பூத்து மறைந்து விடுகின்றாள். இதற்கு நான் என்ன செய்வது?

ப: என்ன செய்வது-பேசாமல் ஜன்னல் கதவை அடித்துப் பூட்டிவிட்டு மறுகாரியம் பாரும்.

கே: கன்னி பொருத்தியைக் காதலிப்பது நல்லதா கல்யாணமான பெண்ணைக் காதலிப்பது நல்லதா?

ப: கன்னியைக் [illegible] தால் அது கலி[illegible] முடிந்தாலும் முடியலாம். கலியாணம்ஆன பெண்ணைக் காதலித்தால் அவள் கணவனின் இரும்புக் கரம் முதுகை ருசி பார்த்தாலும் ருசி பார்க்கலாம்.

ஃ

கே. வரதன், பேலியாகொடை

கே: அழகு அவலட்சணமாகத் தெரிவது எப்பொழுது?

ப: பாவம், அழகு என்பது கொழும்பு 7ல் சிக்குண்டு அமெரிக்க மேக் அப்பினால் தாக்கப்படும்போது.

ஃ

எஸ். கணேஷ்,
தொண்டமானாறு

கே: தமிழரசுக் கட்சியின் திருமலை யாத்திரையையும் யு. என். பி. கட்சியின் கண்டி யாத்திரையையும்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ருஷியாவின் சந்திர ரொக்கட் யாத்திரையைப் போல் வெற்றி தந்தது திருமலை யாத்திரை. அமெரிக்காவின் சந்திர ரொக்கட் யாத்திரையைப்போல் தோல்வி கண்டது கண்டி யாத்திரை.

ஃ

சி. சுந்தரம், அம்பத்தனை

கே: தற்காலப் பெண்கள் தங்கள் கூந்தலைப் பின்னி முன்னுக்குத் தொங்கவிடுகிறார்களே அதன் காரணம் என்ன?

ப: தங்கள் முன் அழகையும் பின்னழகையும் ஒரே பார்வையில் தாங்களே கண்ணாடியில் பார்த்துக் கொள்வதற்காகவும், ஒரே 'ஷொட்டில்' அவற்றைப் பிறருக்குக் காட்டிக்கொள்வதற்காகவும் செய்யப்படும் ஏற்பாடு இது.

ஃ

கு. ராசு, வத்துகாமம்

கே: ''சமரச உடன்படிக்கையை ரத்துச் செய்யுங்கள் அதன் பின் தமிழ் சமூகம் சுதந்திரம் அடையக்கூடிய எனது திட்டத்தை வெளிப்படுத்துவேன்'' என்று பறைசாற்றும் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கூற்று எப்படிப் பட்டது?

ப: பிள்ளை வரம் கேட்டு நின்ற பெண்ணிடம் ''நீ முதலில் உன் கணவனுக்கு நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு வா. பின்னர் நான் பிள்ளை வரம் தருகிறேன்'' என்று கூறிய கபட சாமியாரின் ஹிதோபதேசத்தைப்போல் இருக்கிறது இந்தக் கூற்று.

ஃ

அ. சந்திரவாமன்,
வெல்லம்பிட்டி

கே: சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், ஜெமினி கணேசன் — இவர்களில் சிறந்த நடிகர் யார்?

ப: நீங்களே சரியாக வரிசைக்கிரமப்படுத்தி விட்டீர்கள். நான் வேறு என்ன சொல்ல வேண்டியிருக்கிறது!

ஃ

தையல், கந்தகட்டியா

கே: நடுத்தர வயது உள்ள நான் வாசிப்பதற்கு ஏற்ற தமிழ் ஆங்கிலப் புத்தகங்கள் இரண்டைச் சிபார்சு செய்ய முடியுமா?

ப: தமிழ் புத்தகம்: ஆசிரியர்மார்த்தாண்டன் எழுதிய ''மரணத்தை வெல்வது எப்படி?'' ஆங்கிலப் புத்தகம்: [illegible] இரு புத்தகங்களையும் வாசியுங்கள்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி. அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், ''ஆனந்தா தைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர்.174, செட்டியார் தெரு, கொழும்பு-11




# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்



தையல் வேலைக்கு இன்பம் தருவன

# 'டொலர்' மெஷின்கள்



**DOLLAR**

அழகு, வேலைத் திறன், உழைப்புக்கு இணையற்றன. முன்பின் தையல், விசித்திர பூ வேலை செய்யவல்லன. உப-உறுப்புக்கள் எங்களிடமும், ஏஜண்டுகளிடமும் எப்போதும் உண்டு. ஏனைய பிரசித்த மெஷின் உறுப்புகளும் உதவும்.

விலை சகாயம்:

| | |
|---|---|
| மடக்கும் 5 லாச்சி கால் மெஷின் | ரூ. 350-00 |
| கை மெஷின் | ரூ. 195-00 |
| டெயிலர் மெஷின், பலத்த, விரைவு தையல் | ரூ. 475-00 |

இன்னும் பல இன மெஷின்கள் பல விலைகளிலும் உண்டு.

மாகாண ஏஜண்டுகள்:

பதுளை: R. வைத்திலிங்கம் லிமிட்டெட், 38,பசார்வீதி
கண்டி: வில்லியம் பேனிசிங்ஹவுஸ், 38, கொழும்புவீதி
கம்பளை: A. M. P. சைமன் சில்வா & Co., பெரிய தெரு
தெரனியகலை: S. பாலரத்தினம், பெரியதெரு
இங்கிரியா: K. D. குணேரிஸ் அப்புகாமி, பெரியதெரு
ஹொரணை: K. D. குணேரிஸ் அப்புகாமி, பெரியதெரு
மஹரகமை: A. A. விஜயரத்தின, பெரியதெரு
பொலநறுவை: லேக் வியூ ஸ்டோர்ஸ், பெரியதெரு
லத்பந்துற: G. கோவிஸ் & பிரதர்ஸ்
மத்துகமை: சென்ட்ரல் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்
பாணந்துறை: D. S. திசாநாயக, 6ம் குறுக்குத் தெரு
கம்பஹா: K. N. C. ஜினசேன, 18, பெரியதெரு
எஹலியகொடை: கானட் ஸ்டோர்ஸ்
சண்டலங்காவை: சண்டலங்காவை ஐக்கிய சங்க கடை
டிவுலபிட்டிய: C. E. D. ஜயசிங்க
எட்டியாந்தோட்டை: சிவகுருநாதன் & சன்ஸ்
றக்வானை: அகமது பிரதர்ஸ், பெரியதெரு
கங்வெல்லை: P. C. மரைக்கார் & சன்ஸ், பெரியதெரு

ஏக விநியோகஸ்தர்கள்:-

**டொலர் கோர்ப்பரேஷன்,**

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.
போன்: 6910.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனிக்குளக் குடியேற்றத் திட்டம்

## வடமாகாணத்தவர்களுக்கு வாய்த்த வகையான திட்டம்

### தமிழ் மக்கள் சென்று குடியேறத் தவறினால் சிங்களக் குடியேற்றம் அங்கும் நடக்கலாம்

### குடியேற்றத் திட்டங்கள் பிறந்து வளர்ந்து இடையில் இலக்குத் தப்பிச் சென்ற கதை

சுதந்திரன் 20-10-57 இதழ் "குடியேற்றத் திட்டங்களிற் சென்று குடியேறத் தமிழ்குடும்பங்கள் தயக்கம்" என்ற தலைப்பில் முற்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டது. அந்தச் செய்தியில் குறிப்பிட்ட தமிழ்த் தலைவரின் கூற்றைத் தமிழ்ப் பேசும் மக்கள் ஏற்று நடக்க வேண்டும்.

தமிழ் மக்கள் இலங்கையில் பல பாகங்களிலும் சென்று குடியேறியிருக்கிறார்கள். வியாபார நோக்கமாகச் சென்று குடியேறியவர் பலர். உத்தியோக அலுவலாகச் சென்று வாழ்பவர் சிலர். இவர்கள் தமதுபணத்தைக் கொடுத்து நிலம் வாங்கி வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இன்று தமிழ் மக்கள் சென்று வாழாத பகுதியை ஈழத்தில் காண முடியாது. சிங்கள மக்களும் இவ்வாறே தமிழ்ப் பகுதிகளில் குடியேறியிருக்கிறார்கள். இக்குடியேற்றத்தைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை: அரசியல்வாதிகளும் அக்கறை காட்டவில்லை.

#### தடுக்க வேண்டிய குடியேற்றம்

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்கள் அரசியற் காரணங்களை முன்னிட்டு குடியேற்றப்பட்டு வருவதைத்தான் தமிழ் மக்கள் தடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். 1947ம் ஆண்டிலிருந்து திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தால் தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாக மாறும் காலம் அதிக தூரத்தில் இல்லையென அன்று தொட்டு இன்று வரை தமிழரசுக் கட்சியார் தமிழ் மக்களுக்கு இடித்துரைத்து வருகிறார்கள். சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியதும் தமிழ் மக்கள் தங்களை உணரத் தலைப்பட்டார்கள். தமிழ் மக்கள் மனதில் வெளியில் தெரிந்தும் தெரியாமலும் அடங்கிக் கிடந்த பீதி சிங்களம் மட்டும் சட்டத்தின்பின் விஸ்வரூப மெடுத்தது.

#### திட்டமிட்ட முதற் சதி

திரு. டி. எஸ். சேனநாயக்காவும் அவர் மந்திரி சபையினரும் திட்டமிட்டுத் தமிழ் மக்களுக்கிழைத்த சதிகளில் குடியேற்றத் திட்டம் முதலிடம் பெறுகிறது. தமிழர் வாழும் பிரதேசங்களிற் சிங்களவரைக் குடியேற்றி அவர்களை இலங்கை எங்கணும் பரந்து வாழ வைக்கவிழைந்தது யூ.என்.பி. அரசாங்கம். ஒரு காலத்தில் இலங்கையிலுள்ள தொகுதிகள் அத்தனையும் சிங்களப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை யூ. என். பி. வஞ்சகத் திட்டம் பிரதிபலித்தது. பதவி—பட்டம்—பணம் சம்பாதித்தல்—என்னும் மூன்று இலட்சியங்களையும் கொண்ட சில போலித் தமிழ்த் தலைவர்கள் யூ. என். பி. திட்டமிட்டுச் செய்த குடியேற்றத்தைத் தடுக்கத் திறனமயற்று வலியிழந்திருந்தார்கள். சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டு வரும்போதே தமிழ் தலைவர்கள் சிலர் யூ. என். பி. புகழ் பாடியும், டி. எஸ். பாதம் பூஜித்தும் மந்திரிகளாக மதிமயங்கிக் கிடந்தனர். அப்பொழுதே கல்லோயா— உகனை — கந்தளாய் — அல்லை முதலிய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களைப் பெருவாரியாகக் குடியேற்றியது யூ. என். பி. அரசாங்கம். இதன் பயனாக மேற்கூறிய இடங்களில் 45,000 சிங்களக் குடும்பங்கள்வரை குடியேறியிருக்கிறார்கள். வடமாகாணத்திலும்-வவுனியா தெற்கில்—சிங்களக் குடியேற்றம் சிறுகச்சிறுக நடைபெற்றது.

#### பதவி போனதும் புது ஞானம் உதயம்

இவற்றையெல்லாம் அரசாங்க சபையில் முழு மந்திரியாகவும் - அரை மந்திரியாகவும் பதவி வகித்தவர்கள்—இன்று பொறுக்க முடியாது இனிப் பொங்கி எழுந்து விட்டோமெனக் கூறும் தலைவர்கள்— சிறிதும் கவனிக்கவில்லை. அகப்பட்டதைச் சுருட்டித் தமது பெண்டு பிள்ளைகளுக்குத் தேடிவைப்பதிலேயே அவர்கள் நாட்டம் சென்றது. சுயநலத்தின் மாசுமறுவற்ற அசல் பிரதிநிதிகளாக அவர்கள் உல்லாச வாழ்க்கை நடாத்தினர்.

சிங்களத் தலைவர்களால் உதைபட்டபோதும், உதாசீனம் செய்யப்பட்ட போதும், அவர்கள் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு பதவிக்காகக் காவடி தூக்கினர். மந்திரிப் பதவிகள் பறிபோக இருந்த காலத்திற்றான் சிங்களவர் தமிழ்ப் பிரதேசங்களிற் குடியேறுகின்றார்கள் என்ற ஞானம் அவர்களுக்கு உதயமானது.

#### கனவு நனவாகியது

தமிழ் மக்களின் இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பின்றி உழைத்து வரும் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பத்து ஆண்டு காலமாகத் தமிழ்ப் பிரதேசங்களிற் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டுமென வற்புறுத்தினார்கள். பத்துஆண்டு காலமாக தமிழரசுக் கட்சியார் கண்ட கனவு 1957 ஜுலை 26ந் திகதி பிரதமர் - செல்வநாயகத்தின் ஒப்பந்தத்தின் பயனாக நனவாகியது.

சிங்களர் குடியேற்றத்தை வெறும் சட்டம் தடுத்துவிட முடியாது. தமிழ் மக்கள் தாமாக முன் வந்து குடியேறுவதிற்றான் சிங்களக் குடியேற்றத்தின் அஸ்தமனம் தங்கியிருக்கிறது. அரசியல் வாதிகள் அங்கு சென்று குடியேற முடியாது. மக்களுக்கு வேண்டிய வழிவகைகளை அவர்கள் வகுத்துத் தர முடியும்.

இக்கட்டுரையின் முக்கிய பகுதிக்கு வருமுன் குடியேற்றத் திட்டத்தின் பிறப்பையும் வளர்ச்சியையும் பற்றித் தெரிந்து கொள்வது நல்லது.

#### தரிசு நிலம்

மக்கள் குடியேறித் தமக்காக்கிய காணிகளைத் தவிர தரிசாகக் கிடந்த காணிகளைப் பண்டை அரசர்கள் புத்த கோவில்கள் கட்டவும் வறியவர்களுக்குக் குடியேறவும் கொடுத்து உதவினர். [illegible] முற்பகுதியில் பிரிட்டிஷார் இலங்கையைத் தம் தாட்சிக்குட்படுத்திய போது, மக்கள் உபயோகிக்காது காணிகள் முடிக்குரிய காணிகளாகப் பிரகடனப் படுத்தப் பட்டன. 1900 ஆண்டு அரசியல் முன்னேற்றமடைந்ததும் காணிகளை வெந்தீஸில் கொடுத்தார்கள். 1927ம் ஆண்டு ஆலோசனைச் சபைத் திட்டத்தின் படிதான் காணிகளைப் பகிர்ந்து கொடுககிறார்கள்.

#### குடியேற்றக் காணி நிபந்தனைகள்

1935ல்தான் குடியேற்றத் திட்டம் பற்றிய சட்டம் அமுலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் முதலாவது நோக்கம் அரசாங்கக் காணிகளை வெந்தீஸில் கொடுக்காது தடுப்பதும் அரசாங்கம் நினைத்தபடி கொடுக்காமற் செய்வது மாகும். காணிக் கச்சேரி மூலம் முடிக்குரிய காணிகளைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் முன் வந்தது. குடியேற்ற வாசிகளுக்கு அந்தச் சட்டத்தில் சிலநிபந்தனைகள் இருக்கின்றன. குடியேறியோர் குடியேற்றத் திட்டத்திலேயே வசிப்பது; குடியேறியிருக்கும் காணியை விற்காது பாதுகாப்பது; நிலத்தைப் பண்படுத்துவது வேறொரு வருக்குக காணியை மாற்றும் போது அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெறுவது; குடியேறியிருப்பவர் இறந்த பின் குறிப்பிட்ட ஒருவருக்கே நிலத்தைக் கொடுப்பது— இவை தான் அந் நிபந்தனைகளாகும்.

#### குடியேற்றத் திட்டத்தில் யாருக்கு முதலிடம்?

1955ம் ஆண்டுக் காணிச் சட்டத்தின் பின் முடிக்குரிய காணியில் மக்களைக் குடியேற்றும் போது காணியைச் சூழ்ந்து வாழும் மக்களுக்குத் தான் முதலிடம் கொடுக்க வேண்டும் எனக்கூறப்பட்டிருக்கிறது. முதலாவது விவசாயிகளுக்கும் அடுத்தாக நடுத்தர வகுப்பினர்களுக்கும்கொடுக்க வேண்டும். அதன் பின்னர் தான் பிற இடங்களிலிருந்து குடியேற விரும்புபவர்களுக்கு இடங் கொடுக்க வேண்டும். இந் நிபந்தனைகளை அரசாங்கம் அனுசரித்து நடக்கவில்லை. வகுப்பு வெறியும், ஏதேச் சாதிகாரமும் அவர்கள் கண்களை மறைத்தன. இப்பொழுது காணிக் கச்சேரியை நடாத்தும் அதிகாரம் பிரதேச சபைகளுக்குக் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகள் குடியேற்றத்தின் போது தமிழ் மக்களையே தெரிந்

(13-ம் பக்கம் பார்க்க)

---

## திரு சதாசிவம் காலமானார்

மட்டக்களப்பில் நீண்ட காலமாக 'சுதந்திரன்' விற்பனையாளராகவிருந்த திரு என். சதாசிவம் சென்ற சனிக்கிழமை இரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

மிகச் சிறிய வயதிலேயே பருத்தித்துறையிலிருந்து மட்டக்களப்பு வந்து சேர்ந்த திரு சதாசிவம் வியாபாரத்துறையிலீடுபட்டு மெல்ல மெல்ல தம் முயற்சியினால் முன்னுக்கு வந்தவராவர்.

ஐம்பத்தைந்து வயது வரை வாழ்ந்தவரான திரு சதாசிவம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்மீது நீங்காப் பற்றுடையவராகவும் கட்சியின் மத்திய செயற்குழுவில் ஒரு உறுப்பினராகவும் விளங்கினார். தமிழரசுக் கட்சி மேற்கொண்ட சகல இயக்கங்களிலும் முன்னணியில் நின்று உழைத்தவர் திரு சதாசிவம். சென்ற வருடம் காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் நடத்திய பொழுதும், திருமலைக் கால்நடை யாத்திரையின்போதும் தீவிரமாகப் பங்கெடுத்தார்.

திரு சதாசிவம்சிறந்த சீர்திருத்தக் கொள்கையுடையவர். அவர் ஒரு பகுத்தறிவுவாதி.

திரு சதாசிவத்தின் பிரிவு குறித்து நமது அனுதாபங்களை அன்னாரின் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவிக்கிறோம்.

—ஆசிரியர்

---

ஆங்கிலம்

ENGLISH

தொழில்களில் உயர்வு பெற ஆங்கிலம் என்றும் உதவும். ஆறு மாதங்களில் எழுத - வாசிக்க - பேச விரும்பினால் A. B. C. தொடங்கி B. A. வரை கற்பிக்கும் அற்லஸ் ஹோலில் சேருங்கள்.

இலவச விபரங்களுக்கு:

அற்லஸ்ஹோல்,

கொழும்பு.

த.பெ. 649 போன்: 9759.

உங்கள் நீடித்த எழிலுக்கு

எலைட்

என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

இன்றைய நவநாகரிக நங்கையரின் மேனியை மென்மையடையச் செய்வது

'எலைட்'

பினிஷ் ஜோர்ஜட்தான்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப் பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக்கூடியது

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்

லிமிட்டெட்,

கொழும்பு.

---

## திருக்குறட் புலவர் தேர்வு

### பட்டமும் பதக்கமும் வழங்கப்படும்

### அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் தேர்வு மன்றத் தலைவர்

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவின் கீழ் திருக்குறள் தேர்வு மன்றம் என்று ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ விசுவநாதம் அதன் தலைவராகவும், புலவர் வி. அ. பரிமேலழகர், புலவர் வீ. இளங்கண்ணனுர் ஆகியோர் அதன் செயலராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

இத் திருக்குறள் தேர்வு மன்றம் திருக்குறளில் ஒரு தேர்வுத் திட்டத்தை தயாரித்து வெளியிட்டுள்ளது. இதன் பிரகாரம் தேர்வு எழுதிச் சித்தி பெறுபவர்கள் இறுதியில் திருக்குறட் புலவர் என்ற பட்டத்தைப் பெறுவர். புலவர் தேர்தலுக்கு முன்னால் மழலைத் தேர்வு, முறைமைத் தேர்வு, இளமைத் தேர்வு, பொருண்மைத் தேர்வு என்று நான்கு படிவங்கள் உண்டு. விசேஷ திறமை காட்டுவோருக்கு தங்க, வெள்ளிப் பதக்கப் பரிசில்களும் உண்டு.

1958-ம் ஆண்டு பெப்ரவரி முற்பகுதியில் முதன் முறையாக திருக்குறள் தேர்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேர்வு சம்பந்தமான முழு விவரங்களையும் அறிய விரும்புபவர்கள்: துணை அமைச்சர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், 20, பிரிட்டோக் காலனி, திருச்சிராப்பள்ளி 2, என்ற விலாசத்தில் தெரிந்து கொள்ளலாம் என்று சுதந்திரனுக்கு அனுப்பப்பட்டுள்ள ஒரு அறிக்கை கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்கடந்து கண்டியில் கூடும் ஆசிரியர்சங்க ஆண்டுக் கூட்டம்

## இம்முறையேனும் தலைமைப் பதவி வடக்கிலிருந்து கிழக்கு நாடுமா ?

## மாற்றம் இன்றேல் சங்கம் சின்னு பின்னப் படுவது திண்ணம்

(ஆசிரியர் : 'சிவம்', யாழ்ப்பாணம்)

நீண்ட காலத் தாமதத்தின் பின் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இவ்வாரம் கண்டியில் நடைபெற ஏற்பாடாகிவிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைக்கும் ஆனி முப்பதுக்குமிடையில் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கூட வேண்டும் என்பது நியதி. இம்முறை இன்றுவரை அது கூடவில்லை. இப்போதுதான் எதிர்வரும் சனிக்கிழமை 26-10-57ல் கண்டியில் நல்லாயன் பாடசாலை மண்டபத்தில் கூடப் போவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. இத்தனை நாளும் ஏன் கூடவில்லை? தாமதத்திற்குக் காரணம் என்ன என்ற ஐயவினைக்கள் எங்கும் கிளப்பப்படுகின்றன.

### தலைவர் தெரிவு

இவ் வினைக்களுக்கு விடை காண வேண்டின் சென்ற வருடாந்தக் கூட்ட நிகழ்ச்சிகளை மனக் கண் முன்பு கொண்டுவர வேண்டும். சென்ற ஆண்டு வருடாந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் பாரதி பாஷிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் நிகழ்ந்த சச்சரவுகள், ஆசிரியர்களின் வெளியேற்றங்கள் ஆகிய சம்பவங்களை இதனுள் மறந்திருக்க முடியாது. இந்த சுந்தரகோளங்கள் தலைவர் தெரிவினுல் ஏற்பட்டவையே.

அவ்வமயம் இரண்டு பிரேரணைகள் கொண்டுவரப் பட்டன. ஒன்றில் இப்போது தலைவராகவிருக்கும் திரு நா. தம்பிரத்தினம் என்பவரைத் தலைவராக்க வேண்டும் என்றும், மற்றதில், திருகோணமலையைச் சேர்ந்த திரு கனகசபை என்பவரைத் தலைவராக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

தலைமைப் பதவியை என்றுமே வடமாகாணத்துள் வைத்திருக்கக்கூடாது; அது பண்புடைமையல்ல; அதனுல் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் அதிருப்தியடையவும், ஒத்துழையாமை நடத்தவும் ஏதுவாகும் என்று கருதிய—பரந்த கண்ணேட்டம் படைத்த—வடமாகாணத்து இளம் ஆசிரியர்கள் பலர் திரு கனகசபையை ஆதரித்து நின்றனர். ஆனுல் தோல்வி கண்டனர்.

### ஆசிரியர்கள் வெறுப்பு

தமிழ் ஆசிரியர்கள் வடமாகாணத்தில் அதிகப்படியாக உள்ளனர். இதனுல் எவ்வாண்டும் தலைமைப் பதவி வடமாகாணத்துள் மட்டுமே அமைந்து வருகிறது இப்படித் தொடர்ந்து நடந்துவந்தால் வடமாகாணத்துக்கு வெளியேயுள்ள ஆசிரியர்கள் சங்கத்தில் அக்கறை இழந்து விடுவர். இதைச் சுட்டிக் காட்டிச் சென்ற ஆண்டு திருத்தம் கொண்டுவர முயன்றும் பலன் கிட்டாமற் போயிற்று.

வாக்கெடுப்பின்படி திரு. தம்பிரத்தினம் நடப்பு வருடத் தலைவரானுர். வாக்குகளை அதிகம் பெற்று அவர் தலைமைப் பதவியைப் பெற்றது சரியானது. ஆனுல் தலைவரானபின் அதே கூட்டத்தில் அவர் நடந்துகொண்ட விதம் சகலருக்கும் அவர் மீது வெறுப்பைக் கொடுத்தது. அந்த நிகழ்ச்சிகளைத் திரும்பவும் இங்கு விபரித்து மறந்த அழுக்கைக் கிளறுவது அழகாகாது.

### சங்கத்தில் சுயநலமிகள்

சென்ற வருடாந்தக் கூட்ட நிகழ்ச்சிகள் ஆசிரியர் பலரது மனதை மாற்றிவிட்டன. வடமாகாணம் தவிர்த்த ஏனைய மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கே தலைமைப் பதவியை வழங்க வேண்டும் என்ற கருத்து இப்போது அதிகப்படியான ஆசிரியர்களின் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. ஆயினும் "எமது மாகாணத்தை விட்டுத் தலைமைப் பதவி போவதா?" என்று எண்ணும் பத்தாம் பசலிகள் சிலரும் இப்போதும் ஆசிரியர் சங்கத்தில் இருக்கவே செய்கிருர்கள். இவர்கள் மனதில் இடம் பெற்றிருப்பது மாகாணப் பற்று அல்ல; சுயநலமே இடம் பெற்றிருக்கிறது. தாங்கள் தாங்கள் தலைவராகி விடவேண்டும் என்று இவர்கள் அங்கலாய்க்கின்றனர். பாவம், காலம் போகிற வேகத்தை அறியாத இந்த மகானுபாவர்களுக்கு இந்த வருடமாவது புத்தி புகட்டப்படுமா?

ஆண்டுக் கூட்டத்தைக் கூட்டினுல் பதவி பறந்துவிடுமே என்ற பயத்தினுல் தற்போதைய நிர்வாகிகள் காலதாமதஞ் செய்தனர் என்று கூறுவதும் தவருகாது.

### பிளவு ஏற்படலாம்

இப்போது ஆண்டுக் கூட்டத்திற்கு எப்படியோ திகதி குறிப்பிடப்பட்டுவிட்டது. இந்தக் கூட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் நிர்வாகத்தில் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக் கூட்டமே அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் எதிர்கால வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயிக்கும் கூட்டமாக முடியப் போகிறது என்று ஓரளவு ஜோசியம் கூடச் சொல்லலாம். இவ்வாண்டுதானும் தலைவர் பதவி வட மாணத்துக்கு வெளியே போகாவிட்டால் சங்கம் பிளவு கண்டுவிடும். முக்கியமாகக் கிழக்கு மாகாணத்தின் ஒத்துழைப்பை அது ஒரு போதும் பெற முடியாது.

### சங்கம் சிர்குலையும்

எனவே சங்கத்தின் வாழ்வும் வளமும் வடமாகாணத்திலிருந்து கண்டிக்குச் செல்ல விருக்கும் ஆசிரியர்கள் கையில்தான் இருக்கிறது அவர்கள் தாராளத் தன்மையோடு பரந்த மனத்தோடு நடந்து கொள்ளாமல் குறுகிய பாதையில் மீண்டும் போவார்களேயானுல் ஆசிரியர் சங்கம் சீர்குலைந்து சின்னுபின்னப் பட்டு விடும் என்பது திண்ணம்.


G. C. E. ஜி. ஸி. ஈ.

- தமிழ் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகிவிட்டது.
- ஜூலை — டிஸம்பர் பரீட்சைகளுக்கு அற்லஸ் ஹோல் அளிக்கும் புதுப் பாடங்கள் தயாராய்விட்டன.
- எல்லாப் பாடங்களுக்கும் கடந்த கால பரீட்சைகளின் வினு விடைகள் உண்டு.
- அத்தோடு மாதிரி வினு விடைகளும்தனியாகஉண்டு
- தனித் தனிப் பாடத்துக்கு விலை ரூ. 3-00. தபால் செலவு சதம் 35.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

அற்லஸ்ஹோல், தபால் பெட்டி: 649.

போன்: 9759. கொழும்பு.


# மீசாலையில் பொன்னம்பலம் பொலிஸாருக்குப் பிரசங்கம்

## பேசிய பேச்சு முதன் முறையாக பத்திரிகையில் வெளியான விந்தை

(சுதந்திரன் நிருபர்)

சாவகச்சேரி—

**பொதுமக்கள் மத்தியிற் கூட்டம் நடத்திப் பேசும் வாய்ப்பை இழந்துவிட்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பொலிசாருக்குப் பிரசங்கம் செய்ய வேண்டிய நிர்க்கதிக்குள்ளானுர். நகைப்புக்கிடமான இச்சம்பவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் வீதியில் நடைபெற்றது.**

"பிரதமர்—தமிழரசுக் கட்சி" உடன்படிக்கையைக் கண்டிக்கும்முகமாக கூட்டங்கள் நடத்தி வந்த திரு பொன்னம்பலம் சந்தர்ப்ப நிலைவரங்களின் நிர்ப்பந்தம் காரணமாகத் திடீரென்று தமது சுருதியை மாற்றிக் கொண்டு "தமிழ்ப் பாஷையின் இன்றைய நிலை" பற்றி அங்கு பேசப்போவதாகக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

### பொலிஸாரிடம் பலமான ஏற்பாடுகள்

கூட்டத்தின்போது தக்க பாதுகாப்புத் தேடுவதற்காக அவரும் அவரது சகாக்களும் செய்த முன்னேற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை உண்டாக்கிவிட்டதாற் கூட்டத்துக்கு முதல்நாளிலிருந்தே பல வகையான பரபரப்பான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. ஆயுதந் தாங்கிய பொலிஸ் படையும் குண்டர்கள் பட்டாளமும் அங்கு வந்து அமளிப்படுத்தலாம் எனப் பேசிக்கொள்ளப்பட்டது. உயர்தர பொலிஸ் அதிகாரிகளிடம் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் செய்த ஏற்பாடுகள் வீண் போகவில்லை.

### பட்டாளத்துக்கு பகிரங்கக் கூட்டம்?

கூட்டத்தின்போது மைதானத்தில் சுமார் 200 பொது மக்களைத்தானும் காண்பது அரிதாயிருந்தது. ஆனுல் உயர்தர பொலீஸ் அதிகாரிகளும் மிகப் பெரிய பொலீஸ் படையொன்றும் வந்திருந்தது. அதுமட்டுமல்ல ஆயுதந்தாங்கிய ஆமிப் பொலிசாரும் அங்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மேடைக்கருகில் நிறுத்தப்பட்டிருந்த லொறியில் பதுங்கியிருந்த காட்சியைப் பலரும் வேடிக்கை பார்த்தார்கள்? பாதுகாப்பு ஏற்பாடுகள் இந்தமட்டில் நின்றுவிடவில்லை. ஸ்பெசல் பொலீஸ் ஊழியர்கள், தொண்டர் படையினர் ஆகியோரும் ஆனைப்பந்தியிலிருந்து என். ஓ. பி. பஸ் வண்டி இல: ஐ. ஸி. 2982மூலம் இறக்குமதி செய்யப்பட்ட குண்டர் படையினரும் அங்கே திரண்டிருந்தார்கள். இந்தக் குண்டர் படை மேடையைச் சுற்றி அரண் செய்து நின்றதோடு சனங்களுக்கிடையிலே புகுந்து இரகசியமாக உளவறியும் வேலையையும் செய்தது. பார்த்தவிடமெங்கும் நீக்கமற நிறைந்திருந்த இந்தப் பட்டாளத்தினருக்காகவே அங்கு அந்தப் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றதென்பது முற்றிலும் பொருத்தமானதாகும்.

### புதுமுறை

ஆனைப்பந்திக் குண்டர் படையினர் பயங்கரமான ஆயுதங்களுடன் அங்கு வந்திருக்கின்றனர் எனவும் பேசிக்கொண்டார்கள். பெயர்பெற்ற சில சண்டியர்கள் அங்கு அடிக்கடி தலை காட்டியது இந்தத் தகவலை உறுதிப்படுத்தியது. இம்மாதிரியான பயங்கர சூழ்நிலையில் பொலீஸ் பட்டாளத்தின் பாதுகாப்புடன் சமீப காலமாக யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற ஒரு கூட்டம் நடைபெற்றதேயில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)


786

பீடி அன்பர்களுக்கோர்

நல் அறிவிப்பு

"S. R. பீடி"

தேச பிரசித்திபெற்ற செய்யது பீடி கம்பெனியரால் தயார் செய்யப்படுகிறது.

பாவிப்பாளர் போற்றத்தக்க சிறந்த உயர்தர அக்கூள் புகையிலையால் உருவாக்கப்பெற்று அன்பர்கள் நல் ஆசி பெற வந்திருக்கிறது.

கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு குறைந்த விலையில் சிறந்த முறையில் உதயமாகி இருக்கிறது.

உண்மை விளங்க ஒருமுறை உபயோகித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறோம்.

STOCKIST

S. Abdul Cader

254, Messenger Street, COLOMBO.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழந்தமிழ் மன்னர்களின் வஞ்சினப் பாடல்கள் புலப்படுத்தும் உண்மைகள்

## குடியாட்சிக் காலத்துக்கு முடியாட்சிக் கருத்து உதவுமா?

## ஆள்வோருக்கு வேண்டிய தகுதிகள்—அவற்றை பெற்றிருந்த அரசர்களே சொல்லி வைத்திருக்கிறார்கள்

### தமிழ் வகுப்பில் புறநானூறு பற்றி கி. லக்ஷ்மணன் பேச்சு

"நெறி நின்று கோலோச்சிக் குடி காத்த பழந்தமிழ் நாட்டு சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாடிய செய்யுட்களும் புற நானூற்றில் இடம்பெற்றிருப்பதால் அன்றிருந்தஅரசியல் முறைகளை—அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகியவர்களின் தகைமைகளை நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

மன்னர்கள் வஞ்சினப் பாடல்களால் தம் நெஞ்சகத்தே இருந்தவற்றை ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டியிருப்பதால் அவர்களுக்கு அக்கால புலவர் பெருமக்களைக் காட்டிலும் மேலான புகழும் பெருமையும் சேர்வது ஒரு புறம். மறுபுறத்தில் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற நிலை வந்துள்ள இவ்வேளையில் நாம் அனைவரும் நம்மை 'மன்னர்' நிலைக்கு உயர்த்திக்கொள்ள—அதற்கான தகுதிகளைத் தேடிக்கொள்ள மன்னர்களது முயற்சி—அவர்கள் வஞ்சனப் பாடல்கள் மூலம் தாமாகவே வெளியிட்ட கருத்துக்கள் நமக்குப் பெரிதும் பயன் தருவனவாகும்."

இவ்வாறு கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெள்ளவத்தை 57 வது ஒழுங்கையில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தி வரும் தமிழ் வகுப்பில் புறநானூறு என்ற பொருள் பற்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ரோயல் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கி. லக்ஷ்மணன் தமது இரண்டாவது தொடர் உரையை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் வகுப்பு நடந்தது.

தலைவர் தமது முன்னுரை முடிவுரைகளில் பழந் தமிழர் வாழ்க்கை நெறியைப் பல சங்க நூற் சார்புகளுடன் அழகாக எடுத்து விளக்கினார் "ஒருவனுக்கு ஒருத்தி-ஒருத்திக்கு ஒருவன் அன்றி ஒருவனுக்கு பல பெண்கள்-ஒரு பெண்ணுக்கு பல ஆண்கள்" என்ற கொள்கையை பழந் தமிழர்கள் என்றுமே ஏற்று இருந்ததில்லையென்றும் அந்த ஒன்றே அவர்களின் பண்பட்ட உள்ளத்துக்கும் முற்பட்ட நாகரிகத்துக்கும் தகுந்த எடுத்துக் காட்டாகும் என்றும் அவர் கூறினார்.

திரு லக்ஷ்மணன் ஒரு மணி நேரம் நிகழ்த்திய தமது தொடர் உரையில் மேலும் சொன்னதாவது:—

#### தனிச்சிறப்பு

"சங்க இலக்கியங்களில் சிறந்ததொன்றான புறநானூற்றில் உள்ள மொத்தம் 400 செய்யுட்களில் பெரும்பாலானவை புலவர்களால் பாடப்பட்டவை; சில மன்னர்களால் பாடப்பட்டவை.

"புலவர்களின் பாடல்களில்பொருள்ஆழமும்சொல் அழகும் மிகுந்திருந்தபோதிலும் அவற்றைக் காட்டிலும் மன்னர்களின்பாடல்களுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. புலவர்களுக்கு பாடுவது தொழில். அவர்கள் திறம்படப் பாட வேண்டியது கடமை. அதை அவர்கள் சரிவரச் செய்யும்போது பாராட்டுக்குரியவர்களாகிறார்களே தவிர தனிப்பட்ட பெருமைக்கு உரியவர்களாகமாட்டார்கள்.

மன்னர்கள் பாடினார்களென்றால் அவர்கள் தமது துறையினின்று விலகித்தான் அதைச் செய்திருக்க வேண்டும். கொடி உயர்த்திக் கோலோச்சிக் குடிகாத்த மன்னர்கள் பழுதற மொழி கற்று, யாப்பு அறிந்து பாக்கள் புனைந்தனரென்றால் அதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி எவ்வளவாக இருக்கும். அது பாராட்டுக்கு உரியது மட்டுமல்லாமல் அவர்களுக்கு பெருமை அளிப்பதுமாகும் என்பது தப்பாகாது. சங்க இலக்கியங்களுள் அவர்கள் பாக்கள் இடம் பெற்றிருப்பது அவர்களுக்கு இன்னும் ஒருபடி பெருமையும் புகழும் சேர்ப்பதாகும்.

#### குடியாட்சிக் காலத்துக்கு முடியாட்சிக் கருத்து?

"புறநானூற்றிலுள்ளமன்னர் செய்யுட்கள் இன்று நமக்கு எந்த வகையில் பயன்படும் என்பதுதான் கேள்வி. மன்னர் ஆட்சி முறையைப்பற்றி அழகாகப் பாடியிருக்கலாம். முடியாட்சி முற்றும் முடிந்த கதையாகி குடியாட்சி முகிழ்த்துள்ள இக்காலத்துக்கு அவர்களின் அக்கால ஆட்சிமுறை கருத்துக்கள் எப்படி உபயோகமாகலாம் என்பது பிரச்னை.

"அன்றையமுடிஆட்சிக்கும் இன்றைய குடியாட்சிக்கும் நடைமுறையில் சில பேதங்கள் இருக்கலாம். என்றாலும் அடிப்படையில் இரண்டுக்கும் அவ்வளவு வித்தியாசமில்லை. அன்று ஆட்சி உரிமை குறிப்பிட்ட ஒருசிலருக்கு பரயபரை பரம்பரையாக இருந்துவந்தது. இன்று குடிகள் எல்லோருக்கும் அந்த உரிமை—வாய்ப்பு காலஎல்லை குறிப்பிட்டு வழங்கப்பட்டிருக்கிறது. மன்னன் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் பிரதம மந்திரி, மந்திரி, உபமந்திரி, பிரதிநிதி என்ற பெயரில் குடிகள் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்த சந்தர்ப்பம் உண்டு. அதற்கு தகுதி ஒன்றுதான் பெற்றாக வேண்டும். என்ன தகுதி உடையவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கலாம் என்பது புறநானூற்றில் உள்ள மன்னர்கள் பாடல்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது. தவிரவும், பழந்தமிழகத்தில் ஆட்சி உரிமை பிறப்புரிமையாக ஒருசிலருக்கு இருந்தபோதிலும் அவர்கள் எத்தகைய தகுதியோடு அதை ஏற்றுப் போற்றும்படியாகக் கொற்றம் செலுத்திக் குடிகாத்து வந்தார்கள் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.

#### வஞ்சினப் பாடல்களின் மேன்மை

"கோபம்மேலோங்கும்சமயத்தில்தான் மனிதன் தன் சுயரூபத்தைக் காட்டிக் கொள்கிறான். ஆத்திரம் ஏற்பட்டிருக்கும்போது ஒருவனிடமிருந்து வரும் வார்த்தைகள் அவனின் அடி உள்ளத்திலிருந்து (அதாவது எதுவித சிந்தனையுமில்லாத நிலையில் நிர்க்களமாக) அங்குஉள்ளதை உள்ளபடியே பிரதிபலிக்கும் [illegible]லுள்ள மன்னர்களின் பாடல்களும் அநேகமாக இந்த நிலையில் உருவானவையே. அதாவது மன்னர்களின் வஞ்சினம் பாடல்களாகப் பரிணமித்திருக்கின்றன. இதனாலும் அந்தப் பாடல்களின் உண்மையியல் குறித்தும் அவற்றிற்கு ஓர் உயர்வான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

#### பாண்டிய மன்னர் வஞ்சினம்

"மடங்கலில் சினையி...என்ற அடிகளோடு ஆரம்பமாகும் வஞ்சினப் பாடல் பாண்டிய மன்னன் நாடு காக்கும் நல்லெண்ணத்தில் மாற்றாரோடு போர் செய்யப் புறப்பட்டபோது பாடியது. இதில் அவன் கூறும் வஞ்சினம் என்ன? போரிலே நான் வெற்றி வாகை சூடவில்லையானால்: 1. என் இனிய தேவியை நாம் பிரிந்தவனாகுக. 2. அரச (அற) நெறி பிறழ்ந்தவனாகுக. 3. சிறந்த நண்பர்களுடைய கூட்டுறவு எனக்கு இல்லாது ஒழியட்டும். 4. பாண்டிய நாட்டை நான் மீண்டும் ஆளும் வாய்ப்பு இல்லாமல்போவது மட்டுமென்ன—இந்த மண்ணிலே நான் மீண்டும் பிறக்கும் பேறே எனக்குக் கிடையாது போகட்டும்.

"இந்தப் பாடலால் பாண்டிய மன்னனுடைய நாட்டுப் பற்றும் அரச (அற) நெறிச் சார்பும் எத்துணைச் சிறப்புடையன என்பது தெளிவாகிறது. நல்ல நண்பர்கள் உறவை மன்னர் நாடவேண்டியது எவ்வளவு அவசியம் என்பதும் கணவன் மனைவியர் என்றும் பிரியாது ஒற்றுமையாகக் கூடி வாழ வேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதும் புலனாகிறது.

"நகுதக்கெனரே........." என்ற அடிகளுடன் ஆரம்பமாகும் பாடல் பிறிதொரு பாண்டியமன்னன்வஞ்சினம் கூறிய செய்தியைக் குறிக்கிறது. இந்த மன்னனும் படை நடத்திப் போருக்குச் செல்லும்போது மூன்று வஞ்சினம் கூறுகிறான். நான் வெற்றிபெறத் தவறினால்: 1. என்னைக் கொடியோன் என்று குடிகள் எல்லாம் பழிக்கட்டும் 2. எந்நாட்டைப் புலவர்கள் பாடாது விடட்டும். 3. ஈவோருக்கு இல்லையென்னாது கொடுக்கும் வாய்ப்பு எனக்கு இல்லாது போகட்டும்.

"முன்னர் கூறிய மன்னனின் கருத்தை வலியுறுத்தினாற்போல் இந்த சோழ மன்னனும் நாட்டுப்பற்றையும் அரச (அற) நெறிச் சார்பையும் தன் வஞ்சினத்தில்வைரமாகச் சொல்லியதோடு தனக்கு ஈகை—கொடையின் மீது இருந்த பற்றையும் வெளிப்படுத்தியிருக்கிறான்.

#### சோழன் வஞ்சினம்

"மெல்ல வந்து......" என்று தொடங்கும் அடிகளையுடைய பாடலால் ஒரு சோழ மன்னன் கூறிய வஞ்சினத்தில் தான் போரில் தோற்றேனாகில், முறைகேடான தழுவுதலில் (கொண்ட மனைவியின்றிப் பிறிதொருத்தியோடு நெறி பிறழ்ந்து நடத்தும் கலவி) தன் மாலை குலைந்ததாகட்டும் என்று சொல்லி தன் குடும்ப நெறியைக் குறிப்பாக உணர்த்துகிறான்.

#### சேரன் வஞ்சினம்

"சேர மன்னன் கூறிய வஞ்சினம் ஒன்றையும் இங்கு கவனிப்பது நன்று. மாற்றார் சேர மன்னனைச் சிறைப்படுத்திவிட்டார்கள். அங்கு அவனுக்கு தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதை ஏற்க மறுக்கிறான் சேரன். அப்போது அவன் கூறிய வஞ்சினம் அவனது தன்மானத்தைத் தெரிவிப்பதாய் அமைந்திருக்கிறது. உங்கள் தண்ணீரைக் குடித்து இந்தச் சே...ன் மானமிழந்து வாழ்வதா என்று அவன் கூறியதாகப் பாடல் தெரிவிக்கிறது. 'குழவி இறப்பினும்...' என்ற அடிகளோடு அந்தப் பாடல் செல்கிறது.

"மேற்காட்டிய நாலுவஞ்சின சம்பவங்களும் பாண்டிய, சோழ, சேர மன்னரின் உள்ளக்கிடக்கையை நமக்குக் கிளறிக் காட்டுவதும் அப்படி அவர்களைப்போல நாமும் (மன்னர் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் வேறு பெயரில்) ஆட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டுமானால் நமக்கு வேண்டிய தகுதிகள் எவை எவை என்பதை விளக்குவதும் ஒரு புறம். மறுபுறத்தில் பழந்தமிழகத்தின் பெருமைக்குரிய நிலையும், பண்பாட்டுச் சிறப்பும் எந்த அளவில் இருந்தன என்பதையும் புறநானூற்றிலுள்ள மூவேந்தர் வஞ்சினப் பாடல்கள் நம் கண்முன் நிறுத்துகின்றன."

தமிழ் வகுப்பில் திரு லக்ஷ்மணனின் இரண்டாவது உரையைக் கேட்க அவரின் முதன் உரையைக் கேட்க வந்திருந்தவர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கானோர் கூடியிருந்தார்கள். இதில் இன்னொரு விசேஷம் பெண்களும் முதல் முறையாகக் கூடியிருந்ததாகும்.

உரை முடிவில் இலக்கியம் சம்பந்தமான சில கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றிற்கு தலைவரும் சொற்பொழிவாளரும் பதில் அளித்தார்கள்.

குறிப்பு:

திரு. கி. லக்ஷ்மணனின் புறநானூறு என்ற பொருள் பற்றிய மூன்றாவது தொடர் உரை 27-10-57 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5.30 மணிக்கு வெள்ளவத்தை 57வது ஒழுங்கையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

## "மல் 9000" வழக்கும் தீர்ப்பும்

"9000" என்ற இலக்கம் கொண்ட மல் துணி இலங்கையில் பிரசித்தமானது. இந்த ரகத் துணியை இலங்கையில் இறக்குமதி செய்யவும் விற்பனவு செய்யவும் ஆதிகாரம் பெற்ற ஏஜண்டுகளாக விளங்குபவர்கள் கொழும்பு ஏ. ஏ. சத்தார் அண்ட் கோ என்ற வர்த்தக ஸ்தாபனத்தார்.

'மல்9000' என்ற துணிக்கு அதிக கிராக்கியிருந்ததனால் இந்த சில் போட்ட துணி வியாபாரத்தில் மேலும் சில வர்த்தக ஸ்தாபனங்கள் முறை கேடாக ஈடுபடலாயின. எனவே சத்தார் கம்பனியார் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். வழக்கு இல: 40798/எம் என்பது.

இந்த வழக்கின் பிரகாரம் அளிக்கப்பட்ட ஒரு கோர்ட் தீர்ப்பில் இலங்கையில் 'மல் 9000' என்றதுணியை இறக்குமதி செய்யவும், விற்பனவு செய்யவும் அதிகாரம் பெற்றவர்கள் கொழும்பு ஏ. ஏ. சத்தார் அண்ட் கோ தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## காரைதீவில் சரஸ்வதி பூஜை

கலைத்திருநாளாகிய புரட்டாதி மாதம் 2-ம் திகதி காரைதீவு பழைய மாணவர் சங்கமும் சன சமூக நிலையங்களின் சமாசமும் ஒன்று சேர்ந்து இம்முறை காரைதீவில் சரஸ்வதி பூஜையை மிகவும் விமரிசையாக நடத்திவைத்தனர். தலைமை ஆசிரியர்: சீ. தங்கராசாவும், ஆசிரியர் திரு கார்த்திகேசுவும் கலையின் பெருமை என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

சின்வா ராணி

பெண்கள் பாத அணிகள்

நவீனமோஸ்தர்

மிகச் சிறந்த பாவனை

தரத்தில் உயர்ந்தது

விலை குறைந்தது

தயாரிப்பாளர்கள்:

சிலோன் மலாயன் ரப்பர் குட்ஸ் லிமிட்.,

தெஹிவளை.

ஷெல் மார்க் சுத்தமான அலுமினியம், பித்தளைப் பாத்திரங்களும், கோவில் பட்டுக் குடைகளும் அன்பளிப்புச் சாமான்களும் மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ளும் இடம்.

சி. வி. பாட்,

218 - 220, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:

டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளர்ச்சிக்கு தடை?

## தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கு எம். ஈ. பி. அரசாங்கம் செய்யும் துரோகம்

# பாரபட்சக் கல்விச் சட்டத்தால்

## தோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அநீதி

## இ. தொ. கா. பொதுக் காரியதரிசி அறிவிப்பு

"தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி அவர்களை என்றென்றும் அடிமைப்படுத்தி வைப்பது தான் எம். ஈ. பி. அரசாங்கத்தின் நோக்கமா? இல்லாவிட்டால் அவர்களுக்கு நாளொன்றுக்கு இரண்டரை மணித்தியாலக் கல்விக்கு மட்டும் ஒழுங்கு செய்திருப்பது ஏன்?"

இவ்வாறு சின்னக் கங்குவதையில் நடந்த தோட்டத் தொழிலாளர் கூட்டமொன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு வி. கே. வெள்ளையன் பேசுகையில் கூறினார்.

திரு வெள்ளையன் தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது:

"தோட்டப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு சுமார் ஐந்து மணித்தியாலம் கல்வி போதிக்கப்படுகிறது. ஆனால் தோட்டப் பாடசாலைகளில் பயிலும் குழந்தைகளுக்கோ சுமார் இரண்டரை மணி நேரக் கல்விதான் கிடைக்கிறது. கல்வி போதிப்பதிலும் கூடப் பாரபட்சம் காட்டும் விசித்திரம் மக்கள் அரசாங்கம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் எம். ஈ. பி. ஆட்சியில்தான் நடக்கிறது.

"இந்த அரசாங்கம் இழைக்கும் அநீதி தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தான் தீங்கு விளைவிக்கிறதென்பது அல்ல. அங்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களையும் வெகுவாகப் பாதிக்கிறது. தோட்டப் பாடசாலைகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் ஏனைய அரசாங்க, உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் ஏறக்குறைய சட்ட விதிகள் ஒன்றுதான். ஆனால் அடிப்படைச் சம்பள விஷயத்தில் மட்டும் பெரும் ஏற்றத் தாழ்வு காண்கிறது. இது ஏன்? தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் தரம் குறைந்தவர்களா? அரசாங்கம் அவர்களைப் பழி வாங்குவது எதற்காக?"

திரு வெள்ளையன் மேலும் பேசுகையில் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் அவர்களுக்குக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களும் அரசாங்கம் பாரபட்சமற்ற முறையில் நீதி வழங்க வற்புறுத்த வேண்டும் என்றும் வற்புறுத்தல் தக்க பலனளிக்காவிட்டால் போராட்டம் நடத்தத் தயராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நகைச் சுவை கட்டுரை

# சந்திரனுக்கு ஒரு டிக்கட்!

ரீ. பாக்கியநாயகம்

'சந்திரன் ஏயர்வேய்ஸ் புக்கிங் ஆபிஸ்' முன் அன்று ஒரே அல்லோலகல்லோலமாயிருந்தது. அங்கு நின்ற கியூ வரிசையின் கடைசியைக் காண பல கட்டடங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. சந்திரனுக்குப் பயணமாவதற்கான டிக்கெட்டை நான் இரண்டு மாதங்களுக்கு முன்னரே வாங்கிவிட்டபடியால் நேரே ஆபீஸுக்குள் நுழைந்து அடுத்த நாட்காலை புறப்படும் ராக்கெட்டுக்குள் பாவிப்பதற்கான உபகரணங்களைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். சந்திர மண்டலத்துக்கு என்னுடன் தன்னையும் அழைத்துச் செல்லுமாறு எனது மனைவி விடாப்பிடியாய்க் கேட்டு நின்றாலும், டிக்கெட் பெறுவதிலுள்ள சங்கடங்களால் அவளையும் கொண்டு செல்லச் சாத்தியப்படவில்லை. போதாக் குறைக்கு நிதி நிலைமையும் அவ்வளவு திருப்திகரமானதாயில்லை.

### சந்திரனை அடைந்தோம்

கியூ வரிசையில் நின்று டிக்கெட் பெற்ற அதிர்ஷ்டசாலிகளுடன் அடுத்த தினம் 'சந்திரன் ஏயர்வேய்ஸா'ரினது ஏயர் கான்டிஷன்ட் ராக்கெட்டுக்குள் ஏறி சந்திரனுக்குப் பயணமானேன். ஐம்புலன்களையும் நிலைகுலையச் செய்யும் பிரத்தியேக பிராண வாயுவடங்கிய உடைகள் எமக்கு ஆரம்பத்திலேயே அணிவிக்கப்பட்டன. சில மணித்தியாலப் பிரயாணத்தின் பின் சந்திரனை அடைந்தோம்.

### சகாக்கள் பழக்கப்பட்டவர்கள்

ராக்கெட் தளத்திலிருந்து எங்களை சந்திர மண்டலத் தலைநகருக்கு அழைத்துச் செல்ல பிரத்தியேக பஸ் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. புதியவோர் உலகத்துக்கு வந்துவிட்டோமென்ற பெருமிதத்துடன் சுற்றுமுற்றும் அடிக்கடி பார்த்தவண்ணமிருந்தேன் நான். எனது சகாப்பிரயாணிகளனைவரும் ஏற்கனவே சந்திரனுக்கு வந்தவர்கள்தாமென்றும் அவர்களிற் பலர் தினசரி வியாபார அலுவல்கள் நிமித்தம் இங்கு வந்து பூலோகத்துக்குத் திரும்புவதாகக் கேள்வியுற்றேன்.

### தலைநகரில்

பல்வேறு தேசங்கள் சந்திரனுக்குத் தினசரி ராக்கெட் போக்குவரத்துக்களை நடத்தி வருவதாயும், சந்திர மண்டலத்துக்கு வர விரும்பும் பிரயாணிகள் தொகை தினம் தினம் அதிகரித்துக்கொண்டே யிருப்பதாகவும் பஸ்ஸிலிருந்த ஒருவர் என்னிடம் தெரிவித்தார். "ஓகோ, அப்போது விரைவில் இங்கும் இட நெருக்கடி ஏற்படுவதில் எள்ளளவும் சந்தேகமில்லை" என்று அவரிடம் கூறிய வண்ணம் தலைநகருக்கு வந்து சேர்ந்தேன்.

### மூன் நியூஸ் பத்திரிகை

தலைநகரிலிருந்து வெளிவரும் 'மூன் நியூஸ்' என்னும் தினசரியைப்பார்க்க எனக்கு ஆவலேற்பட்டது. பத்திரிகை விற்கும் பையனொருவனிடம் அதை வாங்கிப் படிக்க வாரம்பித்தேன். கொட்டை எழுத்துக்களுடன் அங்கு பிரசுரமாயிருந்த முக்கிய செய்தி இதுதான்:


சந்திரனை முதலில்
அடைந்தவர்
எவர் என்னும் பிரச்னை
மீண்டும் எழுப்பப்பட்டு இரு
தேசத்தார் மோதல்
ராக்கெட் போக்குவரத்துக்களை
ஸ்தம்பிக்கச் சதி!

இந்தத் தலையங்கத்தின் கீழே சந்திர மண்டலத்துக்கு முதன் முதலாக வந்து சேர்ந்த தேசத்தார் எவர் என்னும் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை யென்றும், இது விஷயத்தில் பூலோகத்தைச் சேர்ந்த முக்கியமான இருதேசத்தார் தொடர்ந்து மோதிக் கொண்டிருக்கின்றனரென்றும், பூலோகத்திற்கும் சந்திரனுக்குமிடையே நடைபெறும் அன்றாட ராக்கெட் போக்குவரத்துக்களை ஸ்தம்பிக்கச் செய்யும் நாச வேலைகளில் இரு தரப்பாரும் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் செய்தி தரப்பட்டிருந்தது.

(11-ம் பக்கம் பார்க்க)

நோத் சிலோன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,
மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
இரும்புக் கட்டிடச் சாமான் வேண்டுமா?
மின்சார மோட்டார் உபஉறுப்புக்கள் வேண்டுமா?
வேறென்ன வேண்டும்?
North Ceylon Trading Co. Ltd.
11/3, Stanly Road, JAFFNA.
போன் :578. தந்தி:"யாழ்றேட்ஸ்"

மல்லர்ட் வானொலிப் பெட்டி



மொடல் இல: MUS/122 ஏ. ஸி. — டீ. ஸி.
ரூபாய் 150-00.
ஒவ்வொரு வீட்டிற்கும் மல்லர்ட் வானொலி பெட்டி அவசியம் தேவை
இலங்கை முழுவதிலுமுள்ள மல்லர்ட் விநியோகஸ்தர்களிடத்திலும் கிடைக்கும்
Mullard
ஸோல் ஏஜெண்டுகள்:-
கொழும்பு ஏஜென்சீஸ், லிமிட்டெட்
355 டீன்ஸ் ரேட், கொழும்பு.
தபால் பெட்டி 913
டெலிபோன்: 94211 தந்தி : கொலாக்

போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"
எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்
உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!
அழகு மிக்க தங்க ஆபரணங்கள் !!
யாவற்றிற்கும் சிறந்த இடம்
யாழ்ப்பாணம்
தங்கமாளிகை
★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!
பெற்று விளங்குபவை
எல். கே. எஸ். நகைகளே.
நிகரற்ற அழகுற்ற எல். கே. எஸ். நகைகளையே என்றென்றும் அணியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1957 அக்டோபர் மாதம் 27-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# அந்தவழி எந்தவழி?

"இலங்கையிலிருப்பது போல் பல மொழி பேசும் மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் ஆட்சி மொழி சம்பந்தமாக பல விதமான சங்கடங்களும் சிக்கல்களும் ஏற்படவே செய்கின்றன தேசம் முழுவதும் ஒரே மொழி கட்டாயமாகத் திணிக்கப்பட்டு அதன் மூலம் எழும் ஒரே சமுதாயத்தைக் கொண்ட அரசாங்கம் என்ற தத்துவம் இக் காலத்தில் வெறுத்துத் தள்ளப்பட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டின் மறந்து போன ஒரு தத்துவமாகக் கருதப்படுகிறது.

"இரண்டு மூன்று மொழிகள் பேசும் வேறுபட்ட இனங்களையும், வெவ்வேறு மதத்தவரையும் கொண்ட ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒரே நாட்டிற்கும், ஒரே அரசாங்கத்துக்கும் விசுவாசஞ் செலுத்தக் கூடியவாறு வலிமை மிக்க ஒரு அரசாங்கத்துக்கு வழி வகுப்பது என்பது இக் காலத்தில் சாத்தியமானதே யாகும் என்று அனுபவம் வாய்ந்த அரசியல் ஞானிகளும் ஒத்துக்கொள்ளுகின்றனர்"

மேற் கண்டவாறு கூறுவது யார்? இந்த நாட்டுக்கு ஏற்றது சமஷ்டி ஆட்சிதான் என்பதை எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிட்டவரான திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமா இப்படிக் கூறுகிறார்? அல்லது தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு கு. வன்னியசிங்கமா இவ்வாறு மொழிகிறார்? அன்றிச் சுதந்திரன் தான் இப்படி அபிப்பிராயம் கூறுகின்றதா? வாசகர்களுக்கு இன்னோரன்ன சந்தேகம் உதிக்கக்கூடும். திருவாளர்கள் செல்வநாயகம் அல்லது வன்னியசிங்கம் கூறிவிட்டால் சுதந்திரன் தான் இப்படிக் கூறுகிறது என்று அவர்கள் நிச்சயம் எண்ணுவார்கள்.

உண்மை அதுவல்ல: இவ்வாறு கூறுபவர் தமிழ் காங்கிரஸ் தலைவர் சாக்ஷாத் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான்! இந்த உண்மையைத் தெரிந்துகொண்டால் யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்? கடந்த வாரம் கொழும்பில் உள்ள அகில இலங்கை முஸ்லிம் வாலிப இயக்கத்தின் தலைமை நிலையத்தில் "மொழியும் சுதந்திரமும்" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவாற்றுகையில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் இத் தலையங்கத்தின் ஆரம்பத்தில் கண்டவாறு பேசியதாகத் தினப்பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது:

"இரண்டு மூன்று மொழிகள் பேசும் வேறுபட்ட இனங்களையும், வெவ்வேறு மதத்தவரையும் கொண்ட ஒரு நாட்டில் வாழும் மக்கள், ஒரே நாட்டிற்கும், ஒரே அரசாங்கத்துக்கும் விசுவாசம் செலுத்தக் கூடியவாறு ஒரு அரசாங்கத்துக்கு வழி வகுப்பது என்பது இக் காலத்தில் சாத்தியமானதுதான்" என்கிறார் திரு பொன்னம்பலம். ஆனால், 'அந்த வழி எந்த வழி?' என்பதைத் திரு பொன்னம்பலம் விளக்கமாக எடுத்துக் கூறாமல் மழுப்பி விட்டிருக்கிறார். 'அந்த வழி எந்த வழி?' என்பதைத் திரு பொன்னம்பலத்திடம் கேட்டறிய நாம் ஆசைப்படுகிறோம்.

திரு பொன்னம்பலம் காரணத்தோடுதான் மழுப்பியிருக்கிறார் என்பது வெளிப்படை. ஏனென்றால் அந்த வழி எந்த வழி யென்பதை அவர் ஆராயப் புகுந்தாரேயானால் அந்த வழி சமஷ்டி வழிதான் - அந்த வழி கூட்டாட்சி வழிதான்-என்ற ஒரே விடைதான் அவருக்கு கிடைக்கும் என்பதை அவர் நன்கறிவார். அவர் ஆராயாமல் விட்டபோதிலும் நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

முதலாவதாக அவர் விரும்பும் தனித் தமிழ் நாட்டை எடுத்துக்கொள்வோம். இலங்கை தனிச் சிங்கள நாடு—தனித் தமிழ் நாடு என்று இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டால், தொடர்பற்ற இரண்டு தனித் தனி அரசாங்கங்கள் அமைக்கப்பட்டால், அவர் கூறுகிறபடி "ஒரு நாட்டில் வாழும் மக்கள் ஒரே நாட்டிற்கும், ஒரே அரசாங்கத்துக்கும் விசுவாசம் செலுத்துவது" என்பது எப்படி நடக்கமுடியும்? எனவே தனித் தமிழ் நாடு என்ற வாதம் அடிபட்டுப் போகிறது.

இரண்டாவதாக ஒற்றையாட்சியை எடுத்துக்கொள்வோம். ஒற்றையாட்சியில் யார் பிரதமராக வருகிறார், அவருடைய விருப்பு வெறுப்புக்கள் யாவை, அவருக்குத் தமிழ் மக்கள்மீது உள்ள அனுதாபம் எப்படிப்பட்டது என்பதில் தான் தமிழ் மக்கள் கதி தங்கியிருக்கிறது. ஆரம்பத்தில் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா தமிழர்களுக்குப் பாதகமானவர் என்று அபிப்பிராயப்பட்டார் திரு பொன்னம்பலம் பின்னர் அவரே நல்லவர், அவரே மகான் என்று ஏற்றுக்கொண்டார். திரு டட்லி நல்லவர் என்றார். சேர் ஜோன் கொத்தலாவலை தமிழருக்குப் பாதகம் விளைவிக்கிறார் என்றார். இப்படி ஒரே பாங்கான ஒற்றையாட்சியின் கீழ், பிரதமருக்குத் தக்கவாறு திரு பொன்னம்பலத்தின் அபிப்பிராயமும் மாறுபட்டதுண்டு. அவர் மாறுபட்ட போதெல்லாம் தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரசாங்கத்தின்மீது விசுவாசம் வைப்பது சாத்தியமல்ல என்று கூறினார். களனி மகாநாடுவரை, சேர் ஜோன் கொத்தலாவலையின் ஆட்சியின்கீழ் தமிழ் மொழிக்கு 'சமஅந்தஸ்து' கொடுக்கப்பட்டுத்தானிருந்தது. அப்படியிருந்தும் கொத்தலாவலையின் அரசாங்கத்திற்கு திரு பொன்னம்பலம் விசுவாசம் செலுத்த முடியாதவராயிருந்தார். அப்படியே தமிழ் பேசும் மக்களும் இருந்து வருவதாகவும் பறைசாற்றினார் இந்த நிலையைப் பார்க்கும்போது ஒற்றையாட்சியின்கீழும், ஒரு நாட்டில் வாழும் வேறுபட்ட மொழிகளைப் பேசும் வேறுபட்ட இன மக்கள் ஒரே நாட்டிற்கும், ஒரே அரசாங்கத்துக்கும் விசுவாசமாய் இருக்க முடியாது என்பது பெறப்படுகிறது.

எனவே, மூன்றாவதாக உள்ள வழி கூட்டாட்சி வழி—சமஷ்டி ஆட்சி வழி—ஒன்றுதான். சமஷ்டி ஆட்சி முறை என்கிற கூட்டாட்சி வழியை மேற்கொண்டால்தான் திரு. பொன்னம்பலம் கூறுகிறபடி "இரண்டு மூன்று மொழிகள் பேசும் வேறுபட்ட இனங்களையும், வெவ்வேறு மதத்தவரையும்கொண்ட இலங்கை நாட்டில் வாழும் மக்கள், இலங்கை நாட்டிற்கும், இலங்கையின் ஒரே மத்திய அரசாங்கத்துக்கும் விசுவாசம் செலுத்தக்கூடியவாறு ஒரு வலிமை மிக்க அரசாங்கத்துக்கு வழிவகுக்கலாம்." அதே சமயத்தில் சிங்களவரும் தமிழ் பேசும் மக்களும் தங்களைத் தாங்களே ஆண்டுகொண்டு, தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொண்டு, சிங்களமும் தமிழும் நிரந்தரமான சமஅந்தஸ்தோடு இந்த நாட்டில் நிலவி வரத்தக்க ஸ்திரமான ஆட்சியை நிலைநாட்ட முடியும்.

இந்த வழியைத் திரு பொன்னம்பலம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் காலம் நெருங்கி வருகிறது என்பதையே அவருடைய முஸ்லிம் வாலிபர் இயக்க நிலையப் பேச்சு முன்னெடுப்பாக எடுத்துக்காட்டுகிறது என்பது நமது நம்பிக்கையாகும்.

# செனட் சபைத் தேர்தல்

# கொம்யூனிஸ்டுகள் சிருஷ்டித்த 'சிந்தெற்றிக் லீடர்' தோல்வி

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

இவ்வாரம் நடைபெற்ற செனட் சபைத் தேர்தலில் கொம்யூனிஸ்ட் கட்சியினர் தமிழரசுக் கட்சியுடன் போட்டியிட்டு மீண்டும் ஒரு முறை மூக்குடைபட்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு வேண்டியதே!

1955ம் ஆண்டிலிருந்தே தமிழரசுக் கட்சி சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைச் செனட் சபைப் பிரதிநிதியாக்கப் போவதாகச் சொல்லி வந்திருக்கின்றனர். இது விஷயத்தைத் திருமலை மகாநாட்டிலும், மட்டக்களப்பு மகாநாட்டிலும் அவர்கள் பிரஸ்தாபித்திருந்தனர். அதன் பிரகாரம் செனட் சபையில் ஸ்தானங்கள் காலியாகப் போகின்றன என்று அறிந்ததும் தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடி திரு ஜி. நல்லையா என்பவரை ஒரு செனட்டராகத் தேர்தலில் நிறுத்துவதென முடிவு செய்தது.

அதுகாலவரை செனட் சபைக்கு ஒரு சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியை அனுப்புவது என்ற விஷயத்தில் கொம்யூனிஸ்ட் கட்சி எவ்வித அக்கறையும்காட்டி வந்தது கிடையாது. தமிழரசுக் கட்சி, சொல்வதுபோல் செய்து முடிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் என்பதைப் பலரும் அறிந்திருந்தபோதிலும் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் 'அப்படியும் நடக்குமா?' என்ற ஆசங்கை கொம்யூனிஸ்டுகளுக்கு இருந்திருக்கக்கூடும். தமிழரசுக் கட்சி சிறுபான்மைத் தமிழர் ஒருவரைச் செனட் சபைக்கு அபேட்சகராக நிறுத்தத்தான் போகிறது என்ற செய்தி ஊர்ஜிதமானதும்—அத்தோடு அவர்களுக்கு வெற்றி கிடைப்பதற்கு வழியிருக்கிறது என்ற ஜோசியமும் அம்பலமானதும்—யாழ்ப்பாணம் கொம்யூனிஸ்டுகளின் வயிற்றில் புளி கரைக்க ஆரம்பித்துவிட்டது!

"ஆஹா, இந்தத் தமிழரசுக்காரர்கள் வெற்றியீட்டிவிட்டால், எங்கள் பாச்சா—எங்கள் பிரசாரம்—ஒன்றும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் பலிக்காமல் போய் விடப் போகிறதே, அப்புறம் வட பகுதியில் எங்கள் கட்சி என்னுவது?" என்ற கவலை அவர்களைக் கலக்கத் தொடங்கியது.

இதுகாலவரை தாழ்த்தப்பட்ட மக்களைப் போலிப் பிரசாரத்தினால் ஏமாற்றி அவர்களிடம் செல்வாக்குப் பெற்று வந்தவர்கள் கொம்யூனிஸ்டுகள். சிறுபான்மைத் தமிழர்களை பெரும்பான்மைத் தமிழர்களுடன் மோதவிட்டு, ஒருசாராருக்கு ஒருசாரார் எதிரித்தனத்தையும், குரோத விரோதங்களையும்வளர்த்து. இந்த அத்திவாரத்தின்மேல தங்கள் செல்வாக்கு மாளிகையை நிர்மாணித்து வந்தவர்கள் கொம்யூனிஸ்டுகள். இந்த நிலையைத் தமிழரசுக் கட்சி சமூகமாகவும், சமாதானமாகவும் மாற்றி தாழ்த்தப்பட்ட மக்களைக் கைகொடுத்துத் தூக்கி உயர்த்தப்பட்ட மக்களின் அந்தஸ்துக்குக் கொண்டுவர முயன்றபோது, கொம்யூனிஸ்டுகளுக்கு அது பொறுக்க முடியவில்லை. எனவே தமக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாகட்டும் என்ற துர் எண்ணத்தோடு திரு நல்லையாவுக்கு எதிராக திரு. எம். சி. சுப்பிரமணியம் என்ற இன்னொரு சிறுபான்மைத் தமிழரை இடையிட்டுக் கொண்டுவந்து திணித்து அனாவசியமான போட்டியை ஏற்படுத்தினார்கள்.

கொம்யூனிஸ்டுகளின் இந்தச் செய்கை எவ்வளவு கேவலமானது என்பதைத் தமிழ் பேசும் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த இழிவான காரியத்தைச் செய்த பொறுப்பைப் பருத்தித்துறைப் பிரதிநிதியான திரு. பொ. கந்தையா தான் ஏற்றுக் கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கு பதிலளித்தாக வேண்டும். இதர கொம்யூனிஸ்டுகளைப் பற்றி நமக்கு அக்கறை கிடையாது.

கொம்யூனிஸ்டுகள் கடைசிநேரத்தில் திரு. சுப்பிரமணியத்தைக் கொண்டு வந்து புகுத்தாவிட்டால் தேர்தல் இல்லாமலே செனட்டர்கள் நியமனம் பெற்றிருப்பார்கள். தேர்தல் ஒன்று ஏற்படுத்தப்பட்டதனால் தமிழனைப்பற்றி உலகத்திற்கு வெளியான கேவலமான விஷயம் என்ன என்பதைத் திரு. கந்தையா உணருவாரா?

ஐந்து சிங்களவருக்குப் போட்டியில்லை. ஆனால் ஒரு தமிழனுக்கு இன்னொரு தமிழன் போட்டி! தமிழனுக்குத் தமிழன் போட்டி இதுகாலவரை உயர்த்தப்பட்ட தமிழரிடையேதான் இருந்தது கண்டு தமிழ் இனம் கண்ணீர் வடித்துவந்தது. இப்போது இந்த பாழாய்ப்போன போட்டியைக்கொம்யூனிஸ்ட் கந்தையா தாழ்த்தப்பட்ட தமிழரிடையேயும் ஏவிவிடுவதில் வெற்றி கண்டுவிட்டார். என்னே கேவலம்!

சிறுபான்மைத் தமிழர்களின் இரட்சகராக கொம்யூனிஸ்டுகளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தச் செயற்கைத் தலைவர் — அதாவது சிந்தெற்றிக் லீடர் (Synthetic Leader) மகாகனம் எம். சி. சுப்பிரமணியம் யார் என்பதைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இவர் கொம்யூனிஸ்டுகளின் கை ஆயுதம். இன்றைய எம். ஈ. பி. அரசாங்கத்தின் வால் சிங்கள மந்திரிகள், அரை மந்திரிகள் எவரையும் அழைத்துக் கௌரவிப்பதில்லை யென்று தமிழ் பேசும் மக்கள் முடிவு செய்திருந்த காலையில் சில மாதங்களுக்கு முன்பு தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாயிருக்கும் திரு. எம். பி. டி. சொய்ஸா என்பவரை சிறுபான்மை மக்களின் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வெற்றிலை வைத்து அழைத்து பின்னர் நகர மண்டபத்தில் கூட்டம் நடத்த முடியாமல் திண்டாடிய மகானுபாவர் இந்தச் சுப்பிரமணியந்தான் என்பதைத் தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

இந்தத் துரோகச் செயல் புரிந்ததற்குக் கைமாருகவே அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சிலர் இவருக்கும் வாக்களிப்பதாக கொம்யூனிஸ்ட் கட்சியிடம் கூறினர்களாம். இந்தத் துணிவில் தான் கொம்யூனிஸ்டுகள் இவரைத் தேர்தலுக்கு நிறுத்தினர்.

திரு. சுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அவர் உண்மையில் பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்கோ, குறிப்பாகச் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கோ நன்மை புரியக்கூடிய ஒரு செனட்டராக இருந்திருக்க முடியாது. அரசாங்கத்தின் வாலாகத்தான் இயங்கியிருக்க முடியும். எப்படியென்று பார்ப்போம்.

தமிழரசுக் கட்சியினர் தங்கள் செனட்டரை எதிர்க் கட்சிகளின் உதவியோடு மட்டும் தேர்ந்தெடுத்தனர். அரசாங்கத்தின் உதவியை அவர்கள் அற்பமும் நாடவில்லை. எனவே அவர்களுடைய செனட்டர் துணிவாக அரசாங்கத்தை எதிர்த்து நின்று தமிழ் உரிமைக்காகவும், தமிழ் பேசும் மக்கள் நலனுக்காகவும் வாதாட முடியும். யாருக்கும் பணிந்து போகவேண்டிய அவசியமில்லை.

திரு சுப்பிரமணியத்தின் நிலையென்ன? கொம்யூனிஸ்டுகளுக்கு இருந்தது மூன்றே மூன்று வாக்குகள். உதிரிகளிடமிருந்து அவர்கள் திரட்டியது மேலும் மூன்று வாக்குகள். மொத்தம் அவர்களுக்குக் கிடைத்தவை ஆறு வாக்குகள். திரு சுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்படுவதனால் இன்னும் ஒன்பது வாக்குகள் தேவை. இந்த ஒன்பது வாக்குகளும் அரசாங்கக் கட்சியிடமிருந்து வந்திருந்தால் திரு சுப்பிரமணியத்தின் நிலையென்ன? அவர் சிறுபான்மைத் தமிழரின் பிரதிநிதியாக விளங்குவாரா? அன்றிக் கொம்யூனிஸ்டுகளின் பிரதிநிதியாவாரா? மூன்றுக்கும் மூன்றுக்கும் எதிராக ஒன்பது வாக்குகளைக் கொடுத்த அரசாங்கத்தின் பிரதிநிதியாவாரா? நிச்சயம் அவர் அரசாங்கத்தின்—அதாவது தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் இந்த நாட்டிலிருந்து அழிதொழிக்கத் திட்டமிடும் இன்றைய அரசாங்கத்தின் பிரதிநிதியாக—கைக்கூலி ஏஜண்டாகவே விளங்கியிருப்பார். இப்படியான ஒருவரைத் தமிழ் பேசும் மக்கள் செனட்டராகப் பெறுவதில் என்ன பயன்?

அடிக் குறிப்பு: திரு. எம். சி. சுப்பிரமணியம் செனட் தேர்தலின்போது கொழும்பில் ஓடித்திரிந்த மோட்டார் வண்டியின் இலக்கம் 1 ஸ்ரீ 3093 என்பது. இந்த மோட்டார் வண்டியின் சொந்தக்காரர் ஆரிய பத்திரண என்பவர் என்று தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கம்யூனிஸ்டுகளுக்கு ஆரயம்பதியில் 'சாட்டையடி'

## பாடசாலை தர உயர்வை எதிர்த்து அனுப்பிய தந்தியும் மகஜரும் தந்த தோல்வி

## செனட்டர் தேர்தலிலும் கடைசி நேரத்தில் குறுக்கே விழுந்து மூக்குடைபட்டார்கள்

### பாடசாலைத் திறப்பு விழாவில் மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை முழக்கம்!

"ஆரயம்பதி அரசினர் தமிழ்ப் பாடசாலையை சிரேஷ்ட ஆங்கில பாடசாலையாக உயர்த்தச் செய்யப்பட்ட நன் முயற்சிகளுக்கெல்லாம் முட்டுக் கட்டை போட்டு அதை முழு மூச்சாக எதிர்த்து நின்றவர்கள் மட்டக்களப்பிலுள்ள கம்யூனிஸ்டுகள் தான்.

"செனட் சபைத் தேர்தலிலும் கம்யூனிஸ்டுகள் கடைசி நேரத்தில் குறுக்கேவிழுந்து தமிழரசுக் கட்சி நிறுத்திய சிறுபான்மைத் தமிழர் அபேட்சகருக்கு எதிராக திடுதிப்பென்று இன்னொருவரைப் பிடித்து வைத்தார்கள்.

"இத்தகைய படுமோசமான துரோகச் செய்கைகளை அவர்களைத் தவிர வேறு யாரும் செய்ய முடியாது. அதற்கெல்லாம் பிரதி பலனாக அவர்கள் காண்பது தோல்வி-படுதோல்வி, அது ஒன்றேதான்."

இவ்வாறு மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை ஆரயம்பதி அரசினர் சிரேஷ்ட ஆங்கில பாடசாலைத் திறப்பு விழாவின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த 23-10-57 புதன்கிழமையன்று பிரஸ்தாப பாடசாலை கிழக்கு மாகாண வித்தியாதிகாரி திரு எஸ். தணிகாசலத்தால் திறந்து வைக்கப்பட்டது பாடசாலைத் திறப்பு விழாவுக்கு மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை தலைமை தாங்கினர்

திரு. செ. இராசதுரை தமது தலைமை உரையில் மேலும் சொன்னதாவது:-

"புதியஇப்பாடசாலை கிடைத்ததில் நீங்கள் அனைவரும் பூரிப்பாயிருக்கிறீர்கள். என்னைப்பொறுத்த மட்டில் மகிழ்ச்சி அவ்வளவாகவில்லை. ஏன்? இத்தனை ஆயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சிக்கு எதிராக ஒரு சிலர் போட்ட தடையினால் இப்பாடசாலை கிடைக்காது போயிருந்தால்............? இதை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

"நல்லதை நினை. நல்லதை செய் அது நிச்சயம் வெற்றியுறும்' என்று யாரோ ஒரு அறிஞன் சொன்னதுபோல் நல்லவற்றை நினைத்து செய்தால் நிச்சயம் முயற்சி வெற்றியடைந்தே தீரும்.

"கம்யூனிஸ்ட்டுகள் தங்களை முற்போக்குவாதிகளென்றும் நல்ல எக்காரியத்தையும் முன்னின்று நடத்தி முடிப்பவர்கள் என்றும் சொல்லிக்கொள்கிறார்கள். இலங்கையிலும், குறிப்பாக இங்குமுள்ள கம்யூனிஸ்ட்டுகளை நினைத்தால பெரும் சந்தேகம் தோன்றுகிறது. முற்போக்கு என்பதன் பொருள் என்னவென்று தெரியாமலே காரியமாற்றுகிறார்களா? அல்லது தெரிந்தும் வேண்டுமென்று நடக்க முற்படுகிறார்களா? யாமறியோம்.

#### கம்யூனிஸ்ட்டுகளின் துரோகம்

"இந்தப்பாடசாலை தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலை ஆங்கிலப்பாடசாலையின் அந்தஸ்தைப் பெறுகிறது. இலங்கை கல்விச் சரித்திரத்தில் இது முன்னொருபோதும் நடவாத சம்பவமென்று சொல்கிறார்கள். ஆங்கில உயர்தர பாடசாலையாக மாறியுள்ள இக் கல்லூரியில் பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள், பண்டிதர், சங்கீத ஆசிரியர் இப்படி திறமைவாய்ந்தவர்கள் கல்வி போதிக்கப் போகிறார்கள். மிகக்கூடிய விரைவில் ஒரு லட்ச ரூபாவுக்கு அதிகமான செலவில் இப்பாடசாலை இக் கிராமத்தில் அமையப் போகிறது. இக் கிராமத்திலும், சுற்று வட்டாரத்திலுமுள்ள நூற்றுக் கணக்கான மாணவர்கள் உயர்தரக் கல்வி பெற வசதியேற்படுகிறது. போற்றத் தகுந்த இந்த நன் முயற்சியை கட்சி மனத்தாங்கல்கள் அற்று வரவேற்பதா? அல்லது எதிர்ப்பதா? தந்திகள், மகஜர்கள், தூது கோஷ்டிகள் இவையெல்லாம் ஆங்கில உயர்தரக் கல்லூரியாக இப்பாடசாலையை மாற்ற மேற்கொண்ட முயற்சிக்கு எதிராக அனுப்பப்பட்டிருக்கின்றன. இதை செய்தவர்கள் மட்டக்களப்பிலுள்ள கம்யூனிஸ்ட்டுகள். வேதனையோடு இச் செய்தியை நான் வெளியிடுகின்றேன். இதற்குப் பெயர் கம்யூனிஸமா? இதைப் போன்ற மகா துரோகச் செயல் வேறென்ன இருக்க முடியும்?

#### செனட் சபைத் தேர்தல்

"சமீபத்தில் நடந்த செனட் சபைத் தேர்தல் தில்லு முல்லுகளை நாடு அறியும். இன்று நேற்றல்ல, சென்ற எட்டு வருடங்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட மக்களின் நலவுரிமைகளுக்காக போராடி வந்திருக்கின்றது. இது பலருமறிந்தஉண்மையாகும். தமிழரசுக் கட்சி எதிர்வரும் செனட் சபைத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட ஒரு அபேட்சகரை நியமிக்குமென்று திருமலை மாநாட்டிலிருந்து சொல்லி வந்திருக்கின்றது. மட்டக்களப்பில் ஜூலை மாதத்தில் நடைபெற்ற விசேஷ மாநாட்டிலும் இது மேலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

#### அவமானம்

"செனட் சபையில் சில இடங்கள் காலியானதும் தமிழரசுக் கட்சியின் செயற்குழுவும், மற்றும் சிறுபான்மையோர் சங்கங்களும் முடிவு செய்தபடி திரு. ஜி. நல்லையாவை ஒரு செனட்டராக நியமிப்பதென்று தீர்மானித்தோம். காலியாகும் செனட் ஸ்தானங்களில் அரசாங்கக் கட்சி மூன்றும், எதிர்க் கட்சி இரண்டுமாக ஐந்து செனட்டர்கள் இடம் பெற வாய்ப்பிருந்தது. கடைசிநேரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மற்றுமொரு அபேட்சகரை தேர்தலுக்கு நிறுத்தியது. இத் தேர்தல் தமிழ் சமூகம் முழுவதையுமே அவமானப்படுத்திய சம்பவமாகிவிட்டது.

#### பிரித்து வைக்கும் தந்திரம்

"மூன்று சிங்கள செனட்டர்கள் எம்.ஈ.பி. யினால் நியமனம் பெற்றார்கள். எம். ஈ. பி: பல கட்சிகள் கொண்ட கூட்டு அரசியல் கட்சி. அக் கட்சியிடமே செனட் தேர்தவில் போட்டியிருக்கவில்லை. அப்படியே சமசமாஜக் கட்சியும் ஒருவரை செனட்டராக நியமித்தது. ஆனால் தமிழ் சமூகத்திற்குள் ஒரே செனட் தேர்தலுக்கு இருவர். இருவரும் சிறுபான்மையோர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தப் பிரித்து அழிக்கும் தந்திரத்தை கம்யூனிஸ்ட் கட்சி செனட் தேர்தலில் கையாண்டது. சிறுபான்மையோருக்கு செனட் பதவி கொடுப்போமென்று கம்யூனிஸ்ட் கட்சி இன்றுவரை எந்த இடத்திலாவது கூறியது இல்லை. பின் ஏன் இந்த செனட் தேர்தலில் அபேட்சகரை நிறுத்தியது என்று கேட்கிறீர்களா? அதுதான் அரசியல் தந்திரம்.

#### கம்யூனிஸ்டுகளின் கோமாளிக் கூத்து

"தமிழரசுக் கட்சி சிறுபான்மையோருக்கு செனட் பதவி கொடுக்கப் போகிறது. அப்படியானால் எதிர்காலத்தில் சிறுபான்மையோரின் ஆதரவு பூராவும் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கும். சிறுபான்மையோரை வைத்து வேட்டையாடும் தேர்தல் வாக்குகள் எதிர்காலத்தில் நமக்கு கிடைக்காமல் போகும். தோற்றுப் போனாலும் நாம் ஒரு ஆளை நிறுத்தினால் நம் தலை தப்பிவிடும். தவிரவும், சிறுபான்மையோருக்குள் இருபகுதியை சிருஷ்டித்துவிடலாம். ஒரு பகுதி எப்போதும் நம்மோடு நிற்கும் என்கிற தந்திரம் தான் அது. நாங்களும் செனட்டராக சிறுபான்மையோர் ஒருவரை நியமித்தோம் என்று கூறுவதற்காக நடந்த கோமாளிக் கூத்தே கம்யூனிஸ்டுகளின் செனட் சபைத் தேர்தல் ஏற்பாடு.

#### ஆதரவு யார்?

"தங்கள் செனட் அபேட்சகருக்கு கம்யூனிஸ்ட்டுகள் யாருடைய ஆதரவை நாடினார்கள் தெரியுமா? தனிச் சிங்கள சட்டத்தை கொண்டுவந்த எம். ஈ. பி. அரசாங்கத்திடம்தான்; ஆமாம்! அவர்கள் தான் என்றோ அரசாங்கத்தை ஆதரிப்பதென்று முடிவு செய்துவிட்டார்களே! இரண்டாவது சர். ராசிக்பரீத். முஸ்லிம்களின் தாய்மொழி அரபு என்று கூறுபவர். மூன்றாவது வெலிமடைப் பிரதிநிதி திருமதி குசுமா ராஜரத்தின. தமிழுக்கும், தமிழருக்கும் சலுகைகள் தானும் கொடுக்கக் கூடாது என்று கூப்பாடு போடும் ராஜரத்னவின் மனைவியார்-கணவனுடைய கொள்கையையுடையவர்.

"மட்டக்களப்பில் பெட்டிசம் எழுதுவதிலும், பின்னுக்கு நின்று பேசுவதிலும் வீரராய் விளங்குபவர்கள் கம்யூனிஸ்டுகள். காரணம்...? இவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்பது ஒன்றுதான். கம்யூனிஸத் தத்துவம் தெரிந்திருந்தால் இவர்கள் இவ்வண்ணம் நடக்க மாட்டார்கள்.

#### நாம் என்ன செய்தோம்?

"என்ன செய்து விட்டீர்கள் என்று எம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள் இவர்கள். நாம் கடந்த தேர்தலுக்குப்பின் இலங்கை தமிழ் சமூகத்திற்கு செய்திருக்கும் நன்மையை நாடு அறியும்.

"மட்டக்களப்பில் என்ன நடைபெற்றிருக்கின்றதென்று கேட்கிறார்கள். உன்னிச்சை வலதுகால் வாய்க்கால் திட்டம் பதினொரு லட்சம் ரூபா செலவில் நடைபெறுகிறது. காவற்காடு ஆஸ்பத்திரிக்கு டெலிபோன் வசதி; புதுக்குடியிருப்புக்கு புதிய தபால் நிலையம்; இரான்குளம், அமிர்தகளி, ஆரப்பற்றை, காத்தான்குடி, புத்தூர் ஆகிய பகுதிகளில் நெசவு நிலையங்கள்; கன்னங்குடாவுக்கு ஆஸ்பத்திரி. இன்னும் பல இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.

"ஆனால் நாடறிந்த விஷயத்தை நாம் கம்யூனிஸ்டுகளுக்கு சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? தவிரவும் அவர்களே தங்களை சரிவர இன்னும் அறியவில்லை. இந்த நிலையில் மற்றவர்களை அவர்கள் அறிவதெப்படி?"

இவ்வாறு திரு. இராசதுரை பேசிமுடித்தார்.

## 'வெறும் வாய்ப் பேச்சல்ல...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சபைத் தேர்தலுக்கு நின்று வெற்றிகாண்பது துர்லபம். ஏனென்றால் இன்றையத் தேர்தல் தொகுதிகள் அதற்குத் தக்கவாறு பகுக்கப்படவில்லை. எந்த ஒரு தொகுதியிலும் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் குறிப்பிட்ட அளவு பெரும்பான்மையினராக அமையவில்லை. பெரும்பான்மை வகுப்பு மக்கள் சிறுபான்மை மக்களையும் தங்கள் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு நாட்டில் சீர்திருத்தக் கருத்துக்கள் இன்னும் பரவவில்லை என்பதை வெட்கத்தோடு நாம் ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இந்த நிலையைத் தோற்றுவிப்பதற்காகத் தமிழரசுக் கட்சி தொடர்ந்து பாடுபட்டு வரும். ஆனால் இன்றைய நிலையில் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சி மன்றத்துள் புகுவது சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சிரமசாத்தியமானதே."

#### வாக்குறுதி

தமிழரசுத் தலைவர்கள் மேற்கண்டவாறு விளக்கம் கூறிவிட்டு, சிறுபான்மைத் தமிழர் மகாசபைப் பிரதிநிதிகளுக்கு ஒரு வாக்குறுதியளித்தனர். அதாவது 'எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் போதிய அளவு தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் சிறுபான்மைத் தமிழர் சமூகத்திலிருந்து ஒரு தலைவரை செனட் சபைக்குத் தேர்ந்தனுப்ப தம்மாலான முழு முயற்சியையும் மேற்கொள்வார்கள்' என்பதே அந்த வாக்குறுதியாகும். [illegible] தமிழரசுக் கட்சியும் "சிறுபான்மைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான திரு ஜி. நல்லையாவை செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்க ஆவன செய்ததன் மூலம் இந்த வாக்குறுதியை, கிடைத்த முதல் தருணத்திலேயே பரிபூரணமாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றி வைத்தது பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சி மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதற்குத்தக்க நியாயம் இருக்கிறதல்லவா?" என்று டாக்டர் நாகநாதன் சுதந்திரன் நிருபரிடம் கேட்டார்.

#### நம்பிக்கைக்கு ஏற்றகட்சி

"அதுமட்டுமல்ல இந்த தேர்தலின்மூலம் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு பாத்திரமான ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான் என்பதும் நிரூபணமாகிவிட்டது" என்றார் அவர்.

#### வேறுவழி இருக்கவில்லை

மேலும் அவர் கூறினார்: ஆட்சி மன்றத்துக்குத் தங்கள் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யுமாறு அரசாங்கத்தின் ஆதரவையும் உதவியையும் யாசித்து நிற்பதை விட இதுகாலவரை சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை. இன்றைய ஒற்றை ஆட்சி அரசமைப்புத் திட்டத்தின்கீழ் எந்த சிங்கள அரசாங்கமும் தமிழ்மீதும், தமிழ் பேசும் இனத்தின மீதும் குரோதம் உடையதாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் சிறுபான்மைத் தமிழ் மக்களும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அற்ற ஒரு சமூகமாகவே வாழ வேண்டியிருந்தது.

#### நிமிர்ந்த தலையோடு...

"திரு நல்லையா தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைக் கெஞ்சாமலே சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியொருவர் நிமிர்ந்த தலையோடு ஆட்சிமன்றத்துள் நுழையும் வாய்ப்பைத் தமிழரசுக் கட்சி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அத்தோடு தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்தை, அரசாங்கம் தனது அரசியல் சூழ்ச்சிகள் மூலம் சிறுபான்மை, பெரும்பான்மை, தாழ்த்தப்பட்டோர், உயர்த்தப்பட்டோர் என்று பிரித்துச் சின்னாபின்னப்படுத்தி அழிக்க முடியாதபடி, ஒரு சிறந்த ஆக்கப் பணி செய்யப்பட்டிருக்கிறது." இவ்வாறு டாக்டர் நாகநாதன் கூறி முடித்தார்.

#### திரு. நல்லையா

செனட்டர் திரு ஜி. நல்லையாவின் தகைமைகளைப்பற்றிப் பிரஸ்தாபித்து டாக்டர் நாகநாதன் கூறியதாவது: "திரு நல்லையா தாழ்த்தப்பட்ட மக்களின் நலவுரிமைகளுக்காக எப்போதும் போராடி வருபவர். சிறுபான்மைத் தமிழர் சமூகம் மூன்று சிறு பிரிவுகளாக இன்று பிரிந்து நின்றபோதிலும் மூன்று பிரிவையும் சேர்ந்த பெரும்பான்மையோர் வட மாகாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் கூட திரு நல்லையாவை பெரிதும் மதிக்கின்றனர். திரு நல்லையா நீண்டகாலமாகத் தமிழரசுக் கட்சியில்சேர்ந்து தளராது உழைத்து வருகிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதா கேம்பிரிக்

★ புடவையில் புதுமையானது
★ தரத்தில் உயர்ந்தது
★ ரகத்தில் சிறந்தது
★ பாவனைக்கு உகந்தது
★ 40 கண்கவர் டிசைன்களில் கிடைக்கும்.

இன்றே உங்கள் பக்கத்திலுள்ள புடவை வியாபாரியிடம்

லதா கேம்பிரிக்

கைக் கேளுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ் லிமிட்.,

26, கெய்ஸர் வீதி — கொழும்பு.


சிறுகதை:

# நாணயம்

—கோவை மகேசன்

பங்குனி மாதத்துக் கடும் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. ரோட்டுத் தார் உருகித் தக தகவென்றிருந்தது. ஜனநடமாட்டம் அதிகமில்லை. ரோட்டுக் கரையில் நின்ற ஆலமரத்தின்கீழ், ஒட்டிய வயிறும், என்புகள் வெளியே தோன்றும் தோற்றமும் கொண்ட ஒரு உருவம் — அதுதான் வேலுச்சாமி நின்று கொண்டிருந்தான். வயது சுமார் அறுபதைத் தாண்டியிருக்கும். பசி, பட்டினி, வறுமை முதலியன அவனை ஆட்சிசெலுத்தின. அவனுக்குப் பக்கத்தில் அவனது அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழிவகுக்கும் 'ரிக்ஷா' பூமியைப் பார்த்துக் கவிந்தபடி கூனிக் கொண்டு கிடந்தது.

''ஏய் ரிக்ஷா...... ஏய் ரிக்ஷா'' என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது. வேலுச்சாமி உழைப்புக் கிடைத்ததே என்ற மகிழ்வுடன் திரும்பிப் பார்த்தான். ஜரிகை வேட்டி சால்வை தரித்த தொந்தி வயிற்று 'பெரியவர்' அவனை வரும்படி சைகை செய்தார். வேலுச்சாமி ரிக்ஷாவையும் இழுத்துக்கொண்டு அவர் நின்ற இடத்துக்கு ஓடினான். கொளுத்தும் வெயிலின் கொடூரத்துக்குப் பயந்து தனது 'தொழிலைக்' கைவிட முடியுமா? கைவிட்டால் அவன் வயிற்றுக்கு வழி......?

''சாமி, எவுடம் போவணும்?'' வேலுச்சாமி கேட்டான்.

''உறையூர் மட்டும் போக வேண்டும்'' என்றார் 'பெரியவர்'.

''சரி ஏறுங்க சாமி'' என்றான் வேலுச்சாமி.

ஒரு மாதிரியாகத் தொந்தியையும் தூக்கிக்கொண்டு ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்தார் அந்தப் பெரியவர். அடுத்த நிமிடம் உறையூரை நோக்கி ரிக்ஷா விரைந்து சென்று கொண்டிருந்தது. வேலுச்சாமி அந்த வெயிலில் பட்டபாடு! அப்பப்பா! துடித்துப் பதைத்தபடி 'தொந்தியை' இழுத்துச் சென்று கொண்டிருந்தான். அது அவன் ஊழ்வினை!


இதோ, ஒருவழியாக உறையூர் வந்து விட்டது. பெரியவரின் பங்களாவின் முன் ரிக்ஷாவை நிறுத்தினான் வேலுச்சாமி. பெரியவர் இறங்கினார். சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துழாவினார். சில்லறை அகப்பட்டது. ஒரு ஐம்பது சத நாணயத்தை எடுத்து வேலுச்சாமியிடம் நீட்டினார். வேலுச்சாமி அதைப் பெற்றுக்கொண்டே ''சாமீ, இன்னொரு ஐம்பது சதம் கொடுங்கோ, இந்த வெயிலிலே பட்ட கஷ்டத்துக்கு இது போதாதுங்க'' என்று இளைத்து இளைத்துப் பரிதாபமாகக் கேட்டான்.

''இனி ஒண்ணும் தர முடியாது போ'' என்று கூறியபடி உள்ளே சென்றார் பெரியவர்.

''சாமீ!'' என்றான் வேலுச்சாமி மறுபடியும்.

ஆனால் அது அந்தப் பெரியவருக்குக் கேட்டிராது. அவர்தான் அவ்விடத்தில் இல்லையே. இனி அங்கு நிற்பதில் பயனில்லை. எனவே தள்ளாடித் தள்ளாடி ரிக்ஷாவைத் தள்ளிக்கொண்டே மீண்டும் ஆலமரத்தடிக்கு போனான் அவன். இந்த வெயிலிலே வியர்க்க விறுவிறுக்க இழுத்ததற்கு ஐம்பது சதம்தானா? அவனுக்கு ஆத்திரம் வந்தது!

''கடவுளே உனக்குக் கண்ணில்லையா''? என்று கண் காணாத கடவுளைத் திட்டி அந்த ஏழை தன் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டான். அசந்துபோய் ரிக்ஷாவிலே சாய்ந்தபடியே இருந்த அவன் அப்படியே தூங்கி விட்டான். பசி, களைப்பு, வெயில் இவை யாவும் அவனைத் தூங்கச் செய்தன. அவன் கண் விழித்தபோது மணி ஐந்தாகி விட்டது. சோம்பல் முறித்தபடியே எழுந்த அவன், பக்கத்திலே இருந்த தேனீர்க் கடைக்குச் சென்று தேனீர் குடித்து விட்டு மீண்டும் ஆல மரத்தடிக்கு வந்தான். அவனது ஒரே 'தெய்வமாகிய' ரிக்ஷாவைத் துப்பரவு செய்ய எண்ணிச் 'சீட்'டைத் தூக்கினான். அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை; சீட்டின் கீழ் இருப்பது என்ன? கண்களைக் கசக்கி விட்டு மறுபடியும் பார்த்தான்: ஆம் அதில் சந்தேகமேயில்லை! அது ஒரு கனத்த



அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கம் யாழ்ப்பாணக் கிளையின் உறுப்பினர் கூட்டம் இயக்கத் தலைவர் திரு. ந. பொ. இராசதுரை தலைமையில் அனிமையில் நடந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் படத்தில் காணப்படுகிறார்கள்.

மணி பர்ஸ்! அது யாருடையதாக இருக்கும்? சற்று முன் ரிக்ஷாவில் சென்ற பெரியவருடையதாக இருக்குமா?

''யாருடையதாயிருந்தால் உனக்கென்ன? ஆண்டவன் உன்மீது இரக்கப்பட்டுத் தந்திருக்கிறான். எடுத்து மறைத்து வைத்துக்கொள்! ம்! தயங்காதே!

''சீ உன் எண்ணம் என்ன? என்ன அற்ப காரியம்செய்ய நினைக்கிறாய்! நீ ரிக்ஷா இழுத்தாலும் நாணயம் தவறாதவன். வறுமையால் வாடினாலும் நாணயம், சத்தியம் மாறாதவன். மணி பர்ஸை உரியவரிடம் சேர்ப்பித்து விடு!''

''நாணயம் உனக்குப் பயன்படாது. நீ சுகமாக வாழ வேண்டுமானால் மணி பர்ஸை எடுத்து மறைத்துக் கொள்! வலிய வந்த சீதேவியை உதைத்துத் தள்ளாதே!''

''சீ உன் மனச்சாட்சிக்கு மாறாக நடக்காதே! கடந்த அறுபது ஆண்டுகள் வாழ்ந்தும் நாணயம் தவறாதவன் நீ! இன்று மட்டும் தவறி விடாதே''

வேலுச்சாமியின் மனதில் நடந்த போராட்டம் இது. சுற்றில் மனச் சாட்சி வென்றது. மணிபார்ஸ் யாருடையதாக இருக்கும்? அது தெரியவில்லையே...... வேலுச்சாமி மூன்றும் வகுப்புவரை படித்தவன். தட்டுத் தடுமாறி வாசிக்கக் கூடியவன். மணி பர்ஸின் உள்ளே அதற்கு உரியவரின் விலாசம் இருக்கும் அல்லவா? இந்த எண்ணம் வேலுச்சாமிக்கு உண்டாகவே மணிபர்ஸை திறந்தான்.

''டேய், எப்ப தொடங்கி இந்தத் 'தொழில்' நடத்திவரே?'' என்றபடி அவனை ஒரு கரம் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. வேலுச்சாமி நிமிர்ந்து பார்த்தான். பொலீஸ் ஜவான்கள் இருவர் முறைத்துப்பார்த்தபடி நின்றனர்.

''என்னடா பேசாமல் நிக்கறே? எப்ப தொடங்கிப் 'பிக்பாக்கட்' அடிக்கறே?'' பொலீஸ்காரனின் குரலில் திருடனைப் பிடித்துவிட்ட பெருமிதம் மிதந்தது.

''நான் 'பிக்பாக்கட்' அடிக்கலீங்க! அது என் தொழிலுமில்லிங்க...'' என்றான் வேலுச்சாமி தயங்கித் தயங்கி.

''பிக்பாக்கட் அடிக்காட்டா உனக்கு எப்படிடா இந்தப் பர்ஸ்? கையும் களவுமாய்ப் பிடிபட்டுட்டு போக்கியம் வேறேயா? வாடா ஸ்டேஷனுக்கு'' என்று அவனை இழுத்துச் சென்றனர்.

★

மறுநாள்! காலை பத்து மணியிருக்கும்! பொலீஸ் ஸ்டேஷனில் 'லாக் அப்' பில் இருந்தான் வேலுச்சாமி.

''இன்ஸ்பெக்டர் ஸார்! எனது மணிபர்ஸ் கிடைத்ததா? என்று கேட்டுக் கொண்டே யாரோ ஒருவர் ஸ்டேசனுக்குள் நுழைந்தார். அவரது குரல் எங்கோ கேட்டமாதிரி இருந்தது வேலுச்சாமிக்கு. முதல்நாள் அவன் தனது ரிக்ஷாவில் ஏற்றிச் சென்ற அந்த மனிதரின் குரல்தான்! அதில் சந்தேகமேயில்லை. தனது ரிக்ஷாவில் கிடந்த பணம் அவருடையதாகத்தான் இருக்க வேண்டும். அந்த மணிபர்ஸ் உரியவரிடம் சேரப்போகின்றதென்பதில் மகிழ்ச்சியடைந்தான், வேலுச்சாமி. ஆனால் அவனுக்குத் திருட்டுப்பட்டம். சமூகத்தில் அவன் திருடன்! நாணயம் தவறாமல் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்க விரும்பிய அவன் 'பிக்பாக்கட்'; பெரியவர் தன்னைக் கண்டு கொண்டால் தான் நிரபராதி என்று உறுதிப்படுத்தி விடுவார் என்று அவன் மனதார நம்பினான். உள்ளே மீண்டும் பேச்சுக்குரல் கேட்டது. வேலுச்சாமி அவதானித்தான்!

''ஆமாம் ஸார், ஒரு 'பிக்பாக்கெட்' திருடன் நம்ப

(11-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சென்ற வாரத் தொடர்ச்சி

# பூமியின் பந்துக்கள் - மலைகளும் ஆறுகளும் தோன்றிய வரலாறு

## உள்ளடக்கியிருக்கும் முப்பகுதிகளில் நித்தநித்தம் நடக்கும் நிகழ்ச்சிகள்

### அவை அறிவுறுத்தும் சில உண்மைகள்

நான் என் கதையின் இரண்டாம் அத்தியாயத்தைக் கடந்த வாரம் சொன்னபோது நில நடுக்கத்தின் மூலம் நீங்கள் என்னைப்பற்றி அறியக்கூடிய இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டேன்.

நில நடுக்கத்தால் ஏற்படும் அலைகள் P, S, L என்ற மூன்றும் என்றும் அவற்றில் P, S அலைகள் உள்ளே சென்று வெளிவருகின்றன என்றும் L அலைகள் அதிகமாக உள்ளே செல்லுவதில்லை என்றும் இதனால் உட்பகுதிக்கும் வெளிப்பகுதிக்கும் (Crust) உள்ள வேறுபாடு மேற்போக்காக அறியப்படும் என்றும சொன்னேன்.

இன்று நில நடுக்கத்தால் ஆணித்தரமாக அறியக்கூடிய இன்னும் இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். அவையாவன:-

#### உட்பகுதி-வெளிப்பகுதி இடைப்பகுதி

(i) ஒவ்வொரு நில நடுக்கத்திலும் வட்டவடிவமான மறைவுப் பகுதி (Shadow Zone) தோன்றுகிறது. அதாவது இந்த மறைவுப் பகுதியில் P, S இரு அலைகளுமே பதிவு செய்யப்படுவதில்லை. இதன் காரணம் என் உள்ளே மையத்தில் உள்ள பகுதி மற்ற பகுதிகளைவிட அடர்த்தி அதிகமாக இருப்பதால் இப்பகுதி இரு அலைகளையும் சிறுதூரம் பின் தள்ளிவிடுகிறது. இதனாலேயே மறைவுப் பகுதி உண்டாகிறது. இது நில நடுக்கம் ஏற்படும் பகுதியிலிருந்து 120 டிகிரி தள்ளி உண்டாகிறது. இதனால் உட்பகுதி (Core) ஒரு உருண்டை வடிவமானதெனத் தெளிவாகிறது. மறைவுப் பகுதியின் அகலம் என் உட்பகுதி உருண்டை என்பதை இன்னும் நன்கு விளக்குவதோடு, அப்பகுதியின் குறுக்களவு பூமியின் குறுக்களவில் பாதி (3800 மைல்) என்றும் உணர்த்துகிறது. இப்பகுதிக்கு உட்பகுதி (Core) என்று பெயர்.

உட்பகுதிக்கும் (Core) வெளிப்பகுதிக்கும் (Crust) இடையிலுள்ள பகுதிக்கு இடைவெளிப்பகுதி (Intermediate layer) எனப் பெயர்.

#### உட்பகுதியின் திரவநிலை

(ii) நில நடுக்கம் ஏற்படும் பகுதியின் எதிர்பாகம் மறைவுப் பகுதிக்கு இடையிலுள்ள இடங்களில் P அலைகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. இது உட்பகுதி (Core) S அலைகளைக் கவர்ந்துகொள்வதின் மூலமே ஏற்படுகிறது. S அலைகள் நீள அலைகள் (Transversed waves). இவ்அலைகள் திரவ நிலையிலுள்ள (liquid condition) பொருள்களாலேயே கவர்ந்துகொள்ளப்படும். ஆகையால் உட்பகுதி (Core) திரவ நிலையிலுள்ளது என்பதும் தெளிவாகிறது. இவ்விதமாகப் பலவழிகளில் நில நடுக்கம் என்னை அறிந்துகொள்ள உதவுகிறது.

#### உட்பகுதியின் கனபரிமாணம்

என்னுடைய சராசரி கனபரிமாணம் (Density) 5.5 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது பௌதிக ஆராய்ச்சி வல்லுநர்களால். ஆனால் மேற்பரப்பில் காணப்படும் கனமான பாறைகளும், நடுப்பகுதியில் இருக்கும் பாறைகளும்—இவை எரிமலையின்மூலம் நடுப்பகுதியிலிருந்து வெளியே வருகின்றன. இந்தவகையில் எரிமலை உதவுகிறது—சேர்ந்து கணக்கிடப்படும்பொழுது சராசரி 3தான் வருகிறது. எனவே மீதியுள்ள சராசரி 8 நிலத்தின் உட்பகுதியின் மூலமே ஏற்படக்கூடும். எனவே வெளிப்பகுதியைவிட நடுப்பகுதியைவிட உட்பகுதியின் கனபரிமாணம் அதிகம் என்று ஊகிக்க முடிகிறது.

#### இரும்பு உலோகம்

என் மேல் பகுதியில், சாதாரணமாக எப்பொழுதும் எரிகற்கள் (Meteorites) விழுந்துகொண்டிருக்கின்றன. இந்த எரிகற்களைப் பரிசோதனை செய்தால் அவை பெரும் பகுதி இரும்பு உலோகத்தால் (metallic iron) ஆனவை என்று தெரியும். அவற்றில் சில முழுவதுமே இரும்பு உலோகத்தால் ஆனவை. இந்த எரிகற்கள் என்னுடன் சுற்றிக்கொண்டிருப்பவை. என்னுடைய ஆகர்ஷண சக்திக்குள் வரும்போது என்மீது விழுந்துவிடுகின்றன. எனவே அவற்றுக்கும் எனக்கும் சம்பந்தமுண்டு; அவ்வாறு நோக்குமிடத்து என் உடம்பிலும் இரும்பு உலோகம் பதிந்து இருக்க வேண்டும். ஆனால் என் வெளிப்பகுதியில் இரும்பு உலோகம் (metallic iron) காணப்படுவதில்லை. எனவே நான் என் உட்பகுதியில் இரும்பு உலோகத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இரும்பு உலோகம் அடர்த்தி அதிகமுள்ளது. இதுவே உட்பகுதி கனபரிமாணம் அதிகமாயிருப்பதற்கும் காரணமாயிருக்கலாம்.

மேற்கூறிய பல காரணங்களிலிருந்து நான் திரவ நிலையிலுள்ள பெரும்பாலும் உலோக இரும்பால் ஆக்கப்பட்ட, அதிகமான வெப்ப நிலையிலுள்ள குறு[illegible] சுமார் 3800 மைல் உள்ள, உட்பகுதியையும் அதைச் சுற்றி 1900 மைல் அகலம் உள்ள, கடினமான பகுதியான நடுப்பகுதியையும் எல்லாவற்றிற்கும் மேலாக இலேசான குளிர்ந்துபோன பகுதியான என்ற வெளிப்பகுதியையும்கொண்டு ஒரு ஆப்பிள் பழத்தை ஒத்த வடிவத்தோடு இருக்கிறேன் என்று நீங்கள் இப்பொழுது அறிந்துகொண்டிருப்பீர்களே!

#### பள்ளங்கள்

என் பிறப்பு வளர்ப்பைப் பற்றிக் கூறினேன். என் உடம்பிலுள்ளவை என்னென்னவென்று இயம்பினேன். என் சந்ததியாரைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டாமா? முதலில் மலைகளைப் பற்றியும் பிறகு ஆறுகளைப்பற்றியும் கூறுகிறேனே!

என் உடலின் மேற் பகுதியில் பல இடங்களில் வலு விழந்து காணப்படுகின்றேன். (1) நாளடைவில் அந்தப் பள்ளங்களில் என் பலம் முழுவதும் இழந்து நீண்ட வடிவில் பள்ளங்கள் தோன்றுகின்றன. இவற்றிற்கு 'ஜியோ சின்க்லைன்' என்று பெயர்.

#### தண்ணீரின் தன்மை

இவை கடலுடன் இணைந்திருந்தால் கடல் நீர் நிறைகிறது இப்பெரும் பள்ளங்களில். அல்லது ஓடும் நிரோமழை நீரோ நிரம்பி ஒரு கடல் போலவே காட்சியளிக்கும். (2) இதற்கு Geosynclinal sea என்று பெயர். ஆனால் இவற்றின் கரைப் பிரதேசங்கள் மிகவும் பலமுள்ளவையாக இருக்கும். இப்பள்ளங்களில் நிரம்பும் நீர்தான் மட்டும் வருவதில்லை; தன்னுடன் தரையில் ஓடிவரும்போது கண்டெடுக்கும் அடித்துப்பறிக்கும், இழுத்துக்கொண்டு வரும், மணல், கல், இறந்த பிராணிகள், இருக்கின்ற பிராணிகள், இலை, தழை முதலியவற்றையும் கொண்டுவந்து நிரப்புகிறது. தண்ணீருக்கு ஒரு தன்மை, தன்னுடன் கொண்டுவரும் பொருளை—அப்பொருள் எவ்வளவு விலையுயர்ந்ததாய் இருப்பினும் தான் நிலையாக நிற்க ஆரம்பிக்கும்போது, அவ்விடத்தில் அடியில் விட்டுவிடும்.

#### மலைகள்

ஆகவே நீருடன் வரும் பொருட்கள் அடியில் தங்க ஆரம்பிக்கின்றன. இவை நாளடைவில் அதிகமாகி மைல் கணக்கில் நீளங்களிலிருக்கின்றன. மேலே பொருள்கள் சேரச்சேர கீழே அழுத்தும் சக்தி (Pressure) அதிகமாகிறது. (3) இப்படியே இருக்கும்போது சில நேரங்களில், கரைப் பிரதேசங்கள் இரண்டும் ஒன்றை நோக்கி ஒன்று அழுத்த ஆரம்பிக்கின்றன. இப்பொழுது இடையே அகப்பட்டுக்கொண்ட பொருள்கள் நெரிக்கப்படுகின்றன. இதனால் அப்பள்ளம் அகலத்தில் குறைந்து நீளம் அதிகமாகிறது. கீழே உள்ள பொருள்கள் கீழ் நோக்கி அழுத்தப்படுகின்றன. மேலே உள்ளவை மடிப்புக்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. [4]. உங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றலாம், எவ்வாறு இருகரைப் பிரதேசங்களும் ஒன்றை ஒன்று நெருக்குகின்றன என்று. அது இன்னும் கண்டுபிடிக்கப்படாத ஒரு இருட்டுப் பிரதேசம்தான். இந்த நெருக்கப்படும் படலம் முடிந்தவுடன் கீழே அதிகமான அழுத்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கும் கீழ்ப் பகுதி மேல் நோக்கிக் கிளம்புகிறது. அப்பொழுது மடிப்புகளுடன் கூடிய மேற்பரப்பு மேலே—தரை மட்டத்திற்கு மேலே—வருகிறது. இதைத்தான் மலைகள் என்கிறீர்கள்.

#### மலைகள் மறையும் விதம்

இவ்விதம் உண்டாக்கப்பட்ட மலைகள் நாளடைவில் மழையாலும் காற்றாலும், மனிதனாலும் சிறிதுசிறிதாக மட்டம் குறைபட்டு தரையோடு தரையாக ஆக்கப்படுகின்றன.

நீரால் கொண்டுசேர்க்கப்படும் பொருள்களில் அந்தக் காலத்து மிருகங்கள், பிராணிகளின் ஓடுகளும், எலும்புகளும், இலை தழைகளும் நிரம்பியிருக்குமென முன்பே கூறினேன். அவற்றினுதவியால் மலை எப்பொழுது உருவாகியது என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகிடைக்கும்.

கரைப் பிரதேசங்களை ஒட்டியிருக்கும் பகுதியில் தான் மடிப்புகள் இருக்கும்; ஆகஇரு கரைப் பிரதேசங்களிலும் மடிப்பு மலைகளும், நடுவில் சம வெளியும் இருக்கும். இதை இமயமலையின் குறுக்குத் தோற்றத்தில் அறியலாம். இவ்வாறு மலைகள் உண்டாகி மறைகின்றன.

#### ஆறுகள்

ஆறுகள் நல்ல மழையுள்ள மலைப் பிரதேசங்களிலோ, சமவெளிகளிலோ ஆரம்பிக்கின்றன. கீழ்ப் பிரதேசங்களை நோக்கி ஓடும்போது சிறு சிறு வாய்க்கால்களும், கால்வாய்களும் தோன்றுகின்றன. இக்கால்வாய்களும் வாய்க்கால்களும் வரவரப் பெரிதாகி நாளடைவில் பூமிக்கடியிலிருக்கும் தண்ணீர் மட்டம் வரை மண்ணை அரித்துவிட்டுப் பிறகு தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றன.

(தொடரும்)

## நாணயம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜவான்களிடம் அகப்பட்டிட்டான். அவன், கையிலே உங்கள் மணிபர்லைத் திறந்து வைத்திருக்கும் போதே ஆளை அரெஸ்ட் பண்ணிட்டாங்க, இந்தாங்க உங்கள் மணிபர்ஸ்!'' என்று பெருமையுடன் கூறியபடி அவரிடம் மணிபர்ஸை நீட்டினார் இன்ஸ்பெக்டர். மணிபர்ஸை வாங்கிக்கொண்ட பெரியவர் பணத்தைச் சரியாக எண்ணிப்பார்த்துவிட்டு, மகிழ்ச்சியுடன் ''நன்றி ஸார். உண்மையில் உங்கள் பொலீஸ் ஜவான்கள் திறமைசாலிகள்தான்'' என்று கூறிவிட்டு மணிபர்ஸுடன் அங்கிருந்து அகன்றார். வேலுசாமி ''ஸார் ஸார்'' என்று அவரை அழைத்தான். அவருக்கு அதெல்லாம் காதில் விழுந்தாற்றானே! போன பணம் திரும்பிவிட்டது. அது எப்படி என்ற ஆராய்ச்சி அவருக்கு தேவைப்படவில்லை. கொடுத்து வைத்தவர்—கிடைத்ததோடு கப்சிப் என்று போய்விட்டார். கொடுத்தவனோ லாக் அப்பில், அதுவும் திருட்டுப்பட்டத்துடன்! அபராதம் அல்லது சிறைவாசம் அவனுக்கு பரிசாகக் கிடைக்கலாம். இதுவும் அவன் ஊழ்வினை!

வேலுச்சாமியின் முகத்தில் வரட்டுச் சிரிப்பு ஒன்று தோன்றி மறைந்தது. 'நாணயம்' அவனைப் பார்த்து நகைத்தது!

## சந்திரனுக்கு ஒரு டிக்கட்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

'போட்டியும் பூசலும் நிறைந்த பூலோகத்தை விட்டு நிம்மதி தேடிச் சந்திர உலகிற்கு வந்தால், இங்கு அதைவிடக் கடுமையாகவல்லவா இருக்கிறது பகைமை மனப்பான்மை' என்று மனச் சலிப்பு ஏற்பட்டது.

'சந்திரனிலும் பார்க்கப் பூலோகமே தேவலை போலிருக்கிறது. ஏனெனில் பூலோகத்தில் எனக்காக ஏங்கும் ஒரேயொரு ஆத்மாவாகிய என் மனைவியேனும் இருக்கிறாள்' என நினைத்த வண்ணம் அடுத்த ராக்கெட்டில் உடனடியாக உலகத்தை அடையவெண்ணி புக்கிங் ஆபீஸுக்கு விரைந்தேன். ஆபீஸின் வாயலில் ஓர் விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது.

### விளம்பரச் செய்தி

பூலோகத்துத் தேசத்தவர்கள் பலர் ராக்கெட் போக்குவரத்துக்களை ஸ்தம்பிக்கச் செய்ய முயல்வதால் நேற்றுடன் எமது போக்குவரத்துச் சேவைகளனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதென்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

மேற்கண்ட விளம்பரத்தைப் படித்ததும் அவ்விடத்திலேயே விழுந்து மூர்ச்சையடைந்தேன் நான். கண்ணை விழித்ததும் என்னருகில் மனைவி சூடான காப்பி சகிதம் நின்று கொண்டிருந்தாள்!

### கனவு

'செயற்கைச் சந்திரன்' [illegible] சந்திரன் ஆசிரிய தலையங்கத்தைப் படித்தபடியே தூங்கிவிட்டீர்களே. ஏன் சந்திர மண்டலத்துக்குச் சென்று வந்தீர்களோ?'' என்று கேட்டாள் எனது சகதர்மிணி.

கனவுலகில் கண்ட அனைத்தையும் ஆதியோடந்தமாக அவளிடம் கூறிவிட்டு ''நீ இல்லாதவிடத்தில் ஒரு கணமேனும் தங்கமாட்டேன் நான்'' என்றேன். ''அதுதான் தெரிகிறதே, என்னை விட்டு சந்திர மண்டலத்துக்குத் தனியாகக் கிளம்பியபோது'' என்று குறும்பாகப் பேசிவிட்டு மோகனப் பார்வையை அவள் என்மீது அள்ளி வீசினாள். கேசமென்னும் முகில்களுக்கிடையே அவளது நெற்றியென்னும் சந்திரன் தோன்றியவண்ணமிருந்தது. எனது கையிலிருந்த காப்பி குளிராகிக் கொண்டிருந்தது!

ஆசிரிய கலாசாலை
பிரவேசப் பரீட்சை 1958
அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் பயில்வதன்மூலம் மேற்படி பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்
ஒரு ஆசிரியராகலாம்!
எனவே காலந் தாழ்த்தாது உடனே சேருங்கள்
★ பரீட்சை விவரம்
★ பரீட்சைப் பெறுபேறு
★ புதிய பாடத் திட்டம்
வேண்டுவோர் விண்ணப்பித்தால் இலவசமாக அனுப்பப்படும்.
அற்லஸ்ஹோல், தபால் பெட்டி: 649.
போன்: 9759. கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட விமர்சனம்:

# யார் பையன்

காலஞ் சென்ற கலைவாணர் நடித்து கடைசியாக வெளிவந்த படம் யார் பையன். இதில் கலைவாணர் மட்டுமல்லாமல் பாத்திரமேற்று நடிக்கும் ஒவ்வொருவருமே சோடை சொல்ல முடியாதவாறு நடித்திருக்கிறார்கள். அவர்களின் நடிப்பை முதலாவது, இரண்டாவது மூன்றாவது என்று தரப்படுத்த வேண்டுமேயொழிய கூடாது என்று எவர் நடிப்பையும் தள்ளிவிட முடியாது.

திரையில் தோன்றுபவர்கள் மட்டுமல்லாமல் மறைவில் இருந்து படம் உருவாகப் பணியாற்றியவர்களும் பாராட்டுக்கு உரியவர்கள். கதையிலே புதுமையிருக்கிறது; உரையாடலிலே உயிர் இருக்கிறது; படப்பிடிப்பிலே பல நல்ல முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன; காட்சி ஜோடனைகள் கச்சிதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கருத்தமைந்த பாடல்கள் இனிய குரலில் தரப்பட்டிருக்கின்றன. சம்பவங்கள் அலுப்புச் சலிப்பின்றி நடைபெற வைக்கப்பட்டிருக்கின்றன. சஸ்பென்ஸ் சரிவரப் புகுத்தப்பட்டு கடைசி வரை காப்பாற்றப்பட்டிருக்கிறது; 'கிளைமாக்ஸ்' உரிய இடத்தில் இடம்பெற்றிருக்கிறது. இவற்றிற்குப் பொறுப்பான கலைஞர்கள் கண்டிப்பாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

'யார் பையன்?' படஆரம்பந் தொடங்கி முடியும்வரையும் படம் பார்க்கும் ரசிகர்களின் உள்ளத்தில் எழும் கேள்வி இது. இறுதியில்தான் விடை கிடைக்கிறது. இரு காதலர்களின் பருவத்தின் கோளாறினுல் பயிரான பிள்ளைதான் பூரி. இந்தப் பிள்ளைக்கோ தன் தாய் தந்தையரைத் தெரியாது. தன் தாத்தாவின் அரவணைப்பிலே வளருகிறது. தந்தை தாய்ப் பாசம் வழியபையன் தன் தாய் தந்தையருக்காகக் கதறுகிறன். பையனின் பிடிவாதத்தினுல், தாத்த பையனை ஒரு புது மனிதரிடம் அனுப்பிவைத்துவிட்டு மறைந்துவிடுகிறுர். புது மனிதரும் முதலில் பையனை அன்போடு அணைக்கிறுர். ஆனுல் பின்பு பையனின் தொல்லை பொறுக்கமுடியாமல் வெறுக்கவும் செய்கிறுர். அந்தப் பையனும் அந்தப் புதுக் காதல் ஜோடிக்கு வினைவிளைக்கவே செய்கிறுன். அதனுல் புதுக் காதல் ஜோடியின் தாய் தந்தையரிடம் சந்தேகம் குடிகொள்ளுகிறது. இறுதியில் பையனின் தாத்தாவின் தலையீட்டினுல் சந்தேகம் கலைக்கப்படுகிறது. எல்லோரும் கூடுகின்றனர். முடிவு மங்களம். இது கதை.

பையனுக'டெய்சி இரானி' என்ற வடநாட்டுப் பெண் குழந்தை நட்சத்திரம் நடித்திருக்கிறது. படத்தின் அதிகப்படியான கட்டங்களில் குழந்தை நடித்திருக்கிறது. குழந்தை தோன்றித் திறம்பட நடித்திருக்கிறது. தனக்கும் தன் காதலிக்கும் வினைவிளைவிக்க வந்திருக்கிருனே என்ற எண்ணத்தினுல், கதாநாயகன் அந்தப் பையனைக் கொலை செய்ய முனையும் கட்டத்தில் குழந்தையின் நடிப்புக் கதாநாயகனின் நடிப்பிலும் பார்க்க உத்தமம் என்றே சொல்லலாம். இன்னும், படத்தில் குழந்தை வரும் கட்டங்களில் எல்லாம் ரசிகர்களின் உள்ளத்தில் உற்சாகம் பிறக்கிறது. கண் வெட்டும் கைகால் ஆட்டும் பாவனைகள் கட்டங்களுக்கேற்ற விதம் சோபிக்கக் கூடியதாகக் குழந்தை நடித்திருக்கிறது.

கதாநாயகன் கதாநாயகியாக ஜெமினி கணேஷன், சாவித்திரி நடித்திருக்கிறுர்கள். இது காதல் கதை. அடிக்கடி சோக சம்பவங்கள் ஏற்படுகின்றன. சோகமும், காதலும் நிரம்பிய படமாதலால், சாவித்திரி கணேஷன் சோடியின் நடிப்புக்கு கேட்கவா வேண்டும்.

கதாநாயகன் தந்தையாக என். எஸ். கே, மதுரம் நடித்துள்ளார்கள். ''மகா கனந்தங்கிய ஸ்ரீமான் சுந்தரராஜன் என் அப்பா'' என்று பையன் முதல் தடவையாக சொன்னபோது என். எஸ். கே. கையை மேலே உயர்த்தி வாயைத் திறந்து நின்ற நிலையை எப்பொழுதுமே மறக்க முடியாது. என். எஸ் கே. மனைவிக்குத் தெரியாமல் பையனுக்கு உணவு கொடுக்கும் கட்டம் மற்றொன்று, பையன் யார் என்று சந்தேகப்பட்டு 'பையனின் பெற்றோர்யாராவது இருந்தால் வந்து பையனைப் பெற்றுக்கொள்ளலாம்' என்று விழம்பரப் படுத்துமாறு மதுரம் சொல்லும்போது 'எல்லோரும் குழந்தையைக்காண வில்லை என்று விளம்பரம் செய்வார்கள். ஆனுல் குழந்தையிருக்கு அப்பா அம்மா காணவில்லை' என்று யாராவது விளம்பரம் செய்வார்களா? என்று சொல்லிக் கேலி செய்யும் என். எஸ். கே. யையும் ரசிகர்கள் மறக்க முடியாது. அவர்களுக்குத் துணையாக டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி ஆகியோரும் நடித்துள்ளார்கள்.

கௌரவ நடிகர்களாக வி. நாகையா, வி. கே. ராமசாமி ஆகியோர் நடித்துள்ளார்கள்.

கதை வசனம்: ஸ்ரீதர். டைரக்‌ஷன்: டி. ஆர். சுந்தரம். டைரக்டரின் திறமையையும் இப்படத்தில் காணலாம். பையனும், கதாநாயகனும் இரவில் வரும் போது உண்மையாகவே இருட்டாகத்தான் இருக்கிறது. மற்றைய படங்களில் இருட்டும் பகலும் ஒன்ருகவே இருக்கும்.

காதுக்கினிய கீதங்களும் கண்கவர் நடனங்களும் அளவோடு இடம் பெற்றிருக்கின்றன. நேரம் போவதே தெரியாது சுமார் மூன்று மணி நேரம் இருந்து பார்த்து அனுபவிக்கக்கூடிய சிறந்த படம் யார் பையன். சம்பந்தப்பட்ட திரைப் படக் கலைஞர்கள் அத்தனை பேரின் ஒத்துழைப்பாலும் வெற்றிப்படமாகத் திகழ்கிறது. அவசியம் எல்லோரும் பார்க்க வேண்டியது. இப்பொழுது கொழும்பு எல்பின்ஸ்டன் தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது.

'சபா'

## தமிழ் அரசு வாலிப முன்னணி

''சந்திர, சூரியன் உள்ள வரையும் சிங்களம்தான் ராஜாங்க மொழியென்று அணிமையில் அம்பலாங்கொடையில் தபால் வானெலி மந்திரி ஜனுப் மரைக்காயர் பேசினராம். அப்படியானுல் சந்திர, சூரியன், உள்ளவரையும் தமிழரின் சமஉரிமைப் போராட்டம் ஓயாது என்று ஜனுப் மரைக்காயருக்கு அறுதியிட்டுக் கூறுகிறேன்'' இவ்வாறு துறைநீலாவணை தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு கந்தையா இங்கு நடந்த முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

பின்னர் திருவாளர்கள் கே. சரவணமுத்து, தில்லையம்பலம், த. கந்தையா, ஜனுப் சத்தார் முதலியோரும் பேசினர்கள்.

## மீசாலையில்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### 'பேசாத பேச்சு' எங்கே?

பேசுவதற்கு முன்னரே பிரசங்கத்தைப் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்பிப் பேசாத பேச்சை வெளியிடச் செய்யும் பொன்னம்பலம் மீசாலைக் கூட்டத்தில் மட்டும் அவ்வாறு செய்யாமற் பின்வாங்கியதேன்? கூட்டத்தின் மறுநாள் தினசரிகளில் அவரது பிரசங்கம் பிரசுரமாகாததைக் கண்ட வாசகர்கள் பலரும் இக் கேள்வியைக் கேட்டனர்.

### பத்திரிகாலயங்களுக்கு அவசர டெலிபோன் செய்தி

வழக்கம்போலவே பிரசங்கப் பிரதிகளை திரு பொன்னம்பலம் பத்திரிகைகளுக்கு அனுப்பி மறுநாள் வெளியிட ஏற்பாடு செய்துவிட்டே யாழ்ப்பாணம் வந்தாராம். ஆனுல் கூட்டத்திலன்று பகல் இருந்த பரபரப்பான நிலை அவருக்கும் அவரது சகாக்களுக்கும் பெரும் சந்தேகத்தைக் கொடுக்கவே கூட்டம் நடப்பது சந்தேகம் என அவர்கள் உணர்ந்தனராம். கூட்டம் நடவாமற் போனுல் மறுநாள் பிரசங்கம் வெளியாவது மேலும் அவமானத்தைத் தந்து மக்களிடம் அற்பமேனும் நம்பிக்கைக்கு இடமில்லாமற் செய்துவிடுமென எண்ணி அன்று பிற்பகல் தினப்பத்திரிகாலயங்களுக்கு அவசர டெலிபோன் தொடர்புகள் செய்யப்பட்டதாயும் அட்வான்ஸ் கொப்பியை (ஜீ. ஜீயின் பிரசங்கம்) அன்று பிரசுரிக்க வேண்டாமென்று தடுக்கப்பட்டதாயும் தெரிய வருகிறது கூட்டம் நடந்து முடிந்தபின் அன்றிரவு மீண்டும் பத்திரிகாலயங்களுக்குச் செய்தி பறந்ததாம். அதனைக் கண்ட பின்னரே செவ்வாய்க்கிழமை அந்தப் பிரசங்கம் வெளியிடப்பட்டதென்று தெரிகிறது.

# வளரும் கலைஞன்

இன்றைய நடனங்கள் சிலவற்றைப் பார்வையிடும்போது அவைவீதிச் சந்திகளில் வாகனங்களின் போக்கு வரத்தைக் கட்டுப்படுத்திக் கடமை பார்க்கும் பொலீஸ்காரர்களை நினைவூட்டுவதுண்டு. அந்தப் பொலீஸ்காரர் செய்யும் சைகைகளுக்கும் இந்தப் பரதநாட்டியம் ஆடும் சிலருக்கும் அதிகம் வித்தியாசம் காணப்படுவதில்லை. இவர்களுடைய நடனத்தைப் பரத நாட்டியம் என்று சொன்னுல் பொலீஸ்காரரின் சைகைகளையும் பரத நாட்டியம் என்று சொல்லி விடலாம். கையை வளைத்துக் காலைத் தூக்கி உடலை அசைத்து விட்டால் அது பரத நாட்டியம் ஆகிவிடாது. அபிநயம் பிடிக்கும் போது அதில் நளின எழில் சேரவேண்டும்—அது சேர அபிநயம் பிடிக்காவிட்டால் பரத நாட்டியம் உயிர்ப் பண்மை இழந்து விடுகிறது.



சிவதாண்டவ நடனத் தோற்றத்தில் செல்வன் ச. யோகநாதன்.

### முகபாவம் வேண்டும்

அதுபோலவே சிலர் பரத நாட்டியத்திற்கு நன்ருக அபிநயம் பிடித்த போதிலும் உணர்ச்சியோடு கருத்தை வெளிப் படுத்தும் முகபாவம் இல்லாததால் அது வெறும் பொம்மை ஆட்டமாக மாறிவிடுகிறது. இத்தகைய குறைபாடுகள் எதுவும் இல்லாமல் பூரண நிறைவுடன் உயிர்ப் பண்பும் நளின எழிலும் சேர்ந்து பரத நாட்டியத்திற்கே எடுத்துக் காட்டாக விளங்குகின்றது செல்வன் யோகநாதனின் நடனம்.

### யோகநாதன் நடனம்

சமீபத்தில் சரஸ்வதி மண்டபத்தில் நடந்த ஒரு இசை நாட்டியக் கச்சேரியில் செல்வன் சரவணமுத்து யோகநாதனின் ஆட்டத்தை பார்த்துப் பரவசப்பட்டுப் பாராட்டும் வாய்ப்பு கொழும்பில் உள்ளவர்களுக்குக் கிடைத்தது. அந்தச் சிறுவனுடைய அபார ஆட்டத்தைப் பார்த்து மகிழ்ச்சியுடன் பிரமித்திருந்தார்கள் சபையோர். பெண் பிள்ளைகள் பரத நாட்டியம் ஆடுவதைப் பார்த்திருக்கின்றேம்; ஆனுல் யோகநாதனைப் போன்று உயிர்ப் பண்போடு உணர்ச்சிகரமாய் ஆடியதைக் காணவில்லை என்றே சொல்ல வேண்டும்.

### நடனத்தில் நளின எழில்

யோகநாதன் அன்று ஆடிய மூன்று நடனங்களை இங்கு குறிப்பிடலாம்—கண்ணன் நடனம், சிவ தாண்டவம், மயில் நடனம். கண்ணன் நடனம் ஆடும்போது யோகநாதன் இளம் கண்ணனுக—குழந்தைக் கண்ணனுக மாறி விட்டார். குறும்பு செய்யும்போது அதற்கேற்ப அழகாக ஆடினர். சிவதாண்டவம் ஆடும்போதும் மிக அழகாக ஆடினர். குறிப்பாக ஒற்றைக்காலில் நின்று ஆடும் காட்சி அலாதி மகிழ்ச்சியைத் தந்தது. மயில் நடனம் ஆடும்போது தமது ஆற்றலை மிகுதியாக வெளிப்படுத்தினர். கால் எடுத்து வைத்து அங்கும் இங்கும் வெருண்டு பார்த்து மயில் நடப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டியதுபோல அபிநயத்தில் காட்டினர். மயில் காலை உயர்த்தி உளைவு எடுப்பதுபோன்ற அபிநயங்களைப் பிடிக்கும் கட்டங்களில் அவர் ஆட்டம் மிக நன்ருக இருந்தது. சிவ நடனம் கண்ணன் நடனம் ஆடும்போதெல்லாம் ஜதிகளுடன்—துரிதமான ஜதிகளுடன் மேடையில் முன்னுல் வந்ததும், பின் நடை போட்டு அசைந்து அசைந்து சென்றதும் நளின எழில் மிகுந்ததாய் இருந்தது. துரிதமான ஜதிகள், கருத்தமைந்த முகபாவம் அழகான அபிநயம்—இவை எல்லாம் சேர்ந்த உணர்ச்சி கலந்த கூட்டிசைவு நடனத்தில் நளின எழிலைக் கூட்டின.

### விழாக்களில் கச்சேரி

பல கல்லூரி விழாக்களிலும் பொது விழாக்களிலும் யோகநாதன் பாரத நாட்டியம் ஆடிப் பல கலாபிமானிகளின் அபிமானத்தையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளார். சமீபத்தில் பரமேஸ்வரக் கல்லூரியில் நடந்த ஆனந்தக் குமாரசாமிநினைவு விழாவில் சிவ தாண்டவம் ஆடி பல பிரமுகர்களின் பாராட்டுதலைப் பெற்றுர்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய பாரம்பர்யத்திற்கு மாருக ஒரு ஆண் குழந்தைக்கு நடனம் பயிற்று

(13-ம் பக்கம் பார்க்க)

## கூனுமோ தமிழன் வீரம்?

தூற்றினர் தமிழை என்னுந்
துடித்திடுஞ் சேதி கேட்டு
ஆற்றொணு நெஞ்சி னேடு
அங்கவர் மண்ணுக் கேகி
ஏற்றினன் சேரன் கல்லை
எதிரியின் சிரமீ தென்ற
கூற்றினைக் கேட்ட பின்னும்
கூனுமோ தமிழன் வீரம்-?

ஃ ஃ ஃ

பறித்திடத் தமிழர் மண்ணைப்
பரங்கியர் வந்த வேளை
தறித்தவர் தலைகள் கொய்து
தன்வலி காட்டி நின்ற
மறத் தமிழ்க் கட்ட பொம்மன்
மரபினில் வந்த நம்மோர்
துரத்துது குண்டென் றுலும்
துணிவிழந் தோடு வாரோ-?

ஃ ஃ ஃ

உற்றதன் வம்சந் தன்னை
ஒழித்திட முரசம் ஆர்த்த
துட்டகை முனுவின் கொட்டம்
தூளெனச் செய்வே னென்று
கட்டுடல் தளர்ந்த போதும்
கைதனில் வாள் பிடித்த
கொற்றவன் எல்லா ளன்தன்
கூட்டமோ அடிமையாகும்-?

ஃ ஃ ஃ

மொழி நிலம் வம்ச மென்ற
மூன்றையும் இன்னல் வந்து
தழுவிடும் போதில் இங்கு
தமிழகம் வீறு கொள்ளும்!
புலியொடு மீனும் வில்லும்
போரினுக் கேகும்! செத்த
எலிகளும் தமிழர் மண்ணில்
எழுந்து நின் றுரிமை காக்கும்!

—கா. சி. ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனிக்குளக் குடியேற்றத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தெடுப்பரென்பது வெள்ளிடைமலை. ஆனால், குடியேற்ற காலத்தில் தமிழ் மக்கள் குடியேற முன் வராவிடில் சிங்கள மக்களைத் தான் குடியேற்ற வேண்டியேற்படும் என்பதில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

### வவனிக்குளத் திட்டம்

வடமாகாண மக்கள் கிழக்கு மாகாணத்தில் சென்று குடியேறத் தயங்கக் கூடாது. வடமாகாணத்தைப் பொறுத்தவரை பூநகரியில் சில ஏக்கர் நிலமும் வவனிக் குளத் திட்டமும் தான் குடியேற்றத்திற்குரியனவாகஇருக்கின்றன. இவற்றுள் வவனிக் குளத் திட்டம் தான் முக்கியமானதும் கடைசித் திட்டமுமானதாக இருக்கின்றதென்ற உண்மை இதுவரை வடபகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இக் குடியேற்றத் திட்டத்தில் பொது மக்கள் உட்பட ஆங்கிலம், தமிழ் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து வேலையில்லாத் திண்டாட்டத்தில் மாட்டிக் கொண்டிருக்கும் வாலிபர்கள் அனைவரும் குடியேற முன் வருவது அவசியமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசாங்க குமாஸ்தா உத்தியோகம் இனி முயற் கொம்புதான் விவசாயத்தையும் கைத் தொழிலையும் தமிழ் மக்கள் கட்டிக் காத்து வளர்ப்பதில் தான் அவர்களது எதிர்காலந் தங்கியிருக்கிறது.

### பழம்பெருமைவாய்ந்த இடம்

11ம் நூற்றுண்டில் இராசஇராசசோழன் இலங்கையை ஆட்சிசெய்தபோது வவனிக்குளம் வளப்பம் வாய்ந்ததாக விளங்கியது. ஒருபெரும் பட்டினமாகவும் பொன் கொழிக்கும் பூமியாகவும் இந்த இடம் பண்டு பெருமை பெற்றது. சிறந்த சிவாலயம் இங்கு இருக்கிறது. சமீபத்தில் பெரிய சிவலிங்க மொன்றும் கண்டெடுக்கப்பட்டது. பண்டைய பெருமையை இன்று மீண்டும் பெறுவதற்குத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

### தமிழ் மக்களின் அக்கறையின்மை

வவனிக்குளத்தில் குடியேற்ற இருக்கும் காணிக்கச்சேரி பங்குனி மாதம் அல்லது சித்திரை மாதம் கூடும். இக் குடியேற்றத் திட்டத்தில் குடியேற விரும்பி, அநுரதபுரி—பொலநறுவை—மொறவாக்கை—வவுனியாதெற்கு முதலியஇடங்களிலுள்ள சிங்கள மக்கள், அரசாங்க அதிபருக்குக் காணிக் கச்சேரி எப்பொழுது நடைபெறும் எனக் கேட்டு எழுதியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆனால், தமிழ்ப் பகுதிகளிலிருந்து எவரும் இது பற்றி விசாரிக்கவுமில்லை ஒரு கடிதம் எழுதவுமில்லையென அறியப்படுகிறது. வடமாகாண மக்களுக்குள்ள ஒரே குடியேற்றத் திட்டம் சிங்களக் குடியேற்றத்திற்கு வழிகோலாது காப்பாற்றும் பொறுப்புத் தமிழ் மக்களுடையது. அங்கு சென்று குடியேறத் தமிழ் மக்கள் முந்திக் கொள்ள வேண்டும்.

### பிரசாரம் வேண்டும்

வட மாகாணத்தில் கிராமத்துக்கொரு கிராம முன்னேற்றச் சங்கம் இருக்கிறது. இச்சங்க மூலம் குடியேற விரும்புவோர் தொகை திரட்டப்பட வேண்டும் குடியேற்றம் பற்றித் தெரியாத மக்கள் பலர் குக்கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு, கிராம முன்னேற்றச் சங்கத் தொண்டர்கள்—பிரதிநிதிகள், வவனிக்குளக் குடியேற்றம் பற்றிக் கூறி அவர்களைத் தூண்ட வேண்டும்.

### தமிழரசுக் கட்சியின் பொறுப்பு

தமிழ் மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சி—சமசமாஜக் கட்சி—தமிழ்காங்கிரஸ்—கம்யூனிஸ்ட் கட்சி முதலியன செயலாற்றி வருகின்றன. தமிழரசுக் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளுக்குச் சிங்களக் குடியேற்றம் பற்றிச் சிறிதும் கவலையில்லையென்பதைப் பொது மக்கள் நன்கறிவர். எனவே தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்களைக் குடியேற்றும் விஷயத்தில் தமிழரசுக் கட்சியினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். வவனிக்குளத்திட்டத்தில் வடபகுதித் தமிழ் மக்களைக் குடியேற்ற இன்றே, இப்பொழுதே தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்ப்போமாக.

### பொது நல முன்னேற்றச் சங்கம்

மட்டக்களப்பு சென் மேரிஸ் றேமன் கத்தோலிக்கத் தமிழ் ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் சென்ற 26-9-57-ல் மேற்படி பாடசாலை மாணவர்களின் பொது நல முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் பாரதி விழா நடாத்தப்பட்டது. விழாவுக்கு மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு ஏ. எஸ். ரி. கனகசபை தலைமை வகித்து பாரதியாரின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்தார்.

பின்னர் "வள்ளுவனும் வரகவியும்" என்பது பற்றி திரு. க. கந்தசாமியும், "மக்கள் கவி" என்பதுபற்றி செல்வன் வி. த. குமாரசாமியும், "பாரதி கண்ட சமுதாயம்" என்பது பற்றி செல்வன் நா. சிறிகந்தனும் சொற்பொழிவாற்றினர். மாஸ்டர் இரா. சிவலிங்கம் நகைச்சுவை விருந்தளித்தார். செல்வர்கள் அ. ராதாகிருஷ்ணன், க. நடராசா, ஆகியோரும் சொற்பொழிவாற்றியபின் கூட்டம் முடிவெய்தியது.

### கொள்ளுப்பிட்டி இ. தி. மு. க. கிளை

இ. தி. மு. க. கொள்ளுப்பிட்டிக் கிளையின் செயற்குழு கூட்டம் கடந்த 12-10-57-ல் கழக பணிமனையில் தோழர் கா. பழநிநாதன் தலைமையில் நடைபெற்றது.

முதலாவதாக கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) கொள்ளுப்பிட்டி வட்டாரத்தில் ஓர் இராப் பாடசாலை ஆரம்பித்து ஏழை குழந்தைகளுக்கு இலவச படிப்பு வசதியளித்தல்.

(2) கடந்த சில காலமாக பொது மக்கள் மத்தியில் இ. தி. மு. கழகத்திற்குள் பூசல்களும்—பிளவுகளும் இருந்து வருவதாக ஓர் தப்பெண்ணம் நிலவி வருகிறது. இதனை நீடிக்க விடாது, தப்பெண்ணங்களுக்கு காரணம் என்ன என்பதை அறிய, பாரபட்சமற்ற கழக அனுதாபிகளை கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைத்து விளக்கமான அறிக்கை யொன்று வெளியிட்டுத் தரும்படி இலங்கை திராவிடர் முன்னேற்றக்கழகத்தின் செயற்குழுவையும், பொதுக் குழுவையும் கொள்ளுப்பிட்டிக் கிளை கேட்டுக் கொள்கிறது.

---

## வளரும்....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்க உரிய ஏற்பாடுகளைச் செய்த இவரது தந்தையாரும், அவரது நடனப் பயிற்சியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உற்சாகத்துடன் கவனஞ் செலுத்தும் அவர் அன்னையாரும் கலா அபிமானிகளின் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

யோகநாதன் யாழ்—மத்திய கலலூரி மாணவன்; வயசு 11. யாழ்ப்பாணம் கொம்மேஷல் பிரஸ் அதிபர் திரு. கே. வி. சரவணமுத்துவின் புதல்வர். வாழ்க அவர் கலைத் தொண்டு!

—ஆ. தே.

## வேலை நிறுத்தங்கள் நடைபெற...:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமாகக் குறுக்கிட்டு அவர்களை வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி செய்து தன் கைவரிசையைக் காட்டிக் கொள்வதாகவும் சொல்லப்படுகிறது. தான் ஒருவன் அரசாங்கக் கட்சியில் இல்லையானால் அரசாங்கத்தை எதுவித தடங்கலும் இல்லாமல் செம்மையாக நடத்த பிரதமர் பண்டார நாயகாவால் ஒருபோதும் முடியாது-தொழிலாளர்களைக் கட்டி மேய்க்க அவராலும் சரி வேறு அரசாங்கக் கட்சியில் உள்ள யாராலுமே முடியாது என்பதையெல்லாம் நிதர்சனம் காட்ட வேண்டுமென்பதே பிலிப்பின் அந்தரங்கம் என்று சொல்லப்படுகிறது. சந்தர்ப்பம் சரியாக அமைந்தால் எல்லோரையும் கலக்கியடித்து அரசாங்கத்தையே கவிழ்த்து தன் கையை ஓங்க வைத்து பிரதமர் பதவியைத் தனக்காக்கிக் கொள்ளலாம் என்பதற்காகவே இந்த ஆரம்ப நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் சில வட்டாரங்களில் செய்தி அடிபடுகிறது.

பிலிப்பின் நோக்கத்தைப் பிரதமர் ஓரளவு புரிந்து கொண்டார் என்பது சமீபத்தில் அவர் மந்திரி சபைக் கூட்டத்தில் தற்போது நடைபெற்று வரும் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் சம்பந்தமாகப் பேசியதிலிருந்து தெரியவருகிறது.

அரசியல் வாதிகள் தொழிற் சங்கங்களோடு தொடர்பு கொண்டு அவற்றில் ஆதிக்கம் செலுத்துவதை நிறுத்திக் கொண்டால் வேலை நிறுத்தம் போன்ற தகராறுகள் பெரும்பாலும் எழ மாட்டா என்று பிரதமர் கூறியது பிலிப்பை மனதில் வைத்துக்கொண்டுதான் என்று யூகிக்கப்படுகிறது.

இந்த யூகத்தை ஊர்ஜிதப் படுத்துவது போலப் பிரதமர் மந்திரி சபைக் கூட்டத்தில் பிலிப்போடு நடந்து கொண்டதாகத் தெரிகிறது.


இப்பொழுது அமோகமாகஓடிக்கொண்டிருக்கிறது

எல்பின்ஸ்டன் றொக்ஸி

ஆகிய திரைகளில்!

இப்பொழுது நகரமெங்கும் புகழ்ந்து பேசப்படும் திரை ஓவியம்

யார் பையன்

ஜெமினி கணேசன், சாவித்திரி, டெய்ஸிராணி,

காலஞ்சென்ற

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்

ஆகியோர் நடித்தது.



ஏராளமான ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இப்பொழுது திரையிடப்படுகிறது

சென்ட்ரல் (கொழும்பு)

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணி, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும், ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷ காட்சிகள்.

அன்னபூரணாவின்

எங்கள் வீட்டு மகாலெட்சுமி

நடிகர்கள்: ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி, பி. கண்ணும்பா,
எஸ். வி. ரங்காராவ், எம். என். நம்பியார், ராஜசுலோசனு, கே. ஏ. தங்கவேலு, சுந்தரிபாய், அங்கமுத்து, ஏழுமலை ஆகியோர்.

நடனங்கள்: ஈ. வி. சரோஜா, ஏ. சோப்ரா.

பின்னணி இசை: கண்டசாலா, சௌந்திரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, சுசிலா, டி. வி. ரத்னம் ஆகியோர்.

இத்திவகத்தில் மகத்தான 5வது வாரம்!

முருகன் (ஜிந்துப்பிட்டி)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கும், ஞாயிறு காலை 10 மணிக்கும் விசேஷ காட்சிகள்

ஜெமினி கணேசன், சாவித்திரி, கிரிஜா, நம்பியார், துரைராஜ் முதலியோர் நடித்த

இரு சகோதரிகள்

மற்றும் [illegible] (கண்டி) [illegible] (நாவலப்பிட்டி), சென்ட்ரல் (பருத்தித்துறை) கேதுமதி (மகாவெவ) ஆகிய திரைகளில்!


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# வாழும் இலக்கியம்

விலைமதிப்பற்ற அநேக பழந்தமிழ் இலக்கியங்கள் அழிந்தொழிந்து போய்விட்டன. சில இலக்கிய நூல்கள் மாத்திரம் தோன்றிய காலத்தில் மக்கள் சமுதாயத்தில் எத்தகைய வரவேற்பைப் பெற்றனவோ அதே வரவேற்பை இற்றைவரையும் பெற்று வாழும் இலக்கியங்களாக விளங்குகின்றன. இத்தகைய இலக்கியங்களில் திருக்குறள், சிலப்பதிகாரம் கம்பராமாயணம், காலதேவதையே வெற்றி கொண்டுள்ளன!

வாழ்க்கை என்பது வாழ்வதற்கு மட்டுமல்ல, நன்ருக வாழ்வதற்கு! இந்த நல் வாழ்விற்கு இலக்கியம் பயன்படுகிறது. எனவே வாழ்க்கை என்பது காலத்தை மாத்திரம் பொறுத்ததல்ல. சிந்தனையையும் செயலையும் பொறுத்தது. வளர்ந்து கொண்டு செல்லும் மக்கட் பண்பிற்கேற்பப், புதிய கருத்துக்களை உண்டாக்கும் இயல்பு இலக்கியங்களுக்கு வேண்டும்.

அன்று இளங்கோ கட்டிய கலைக்கோயிலும், கம்பன் கண்ட இலக்கியப் பூங்காவும் இன்றும் பழைய வடிவுடன்தான் காட்சியளிக்கின்றன. ஆனல் இன்றும் மக்கள் கருத்துக்கு ஏற்றவாறு இருக்கின்றன. கம்பராமாயணத்தைக் கொழுத்திச்சுட வேண்டும் என்று எத்தனை பேர் கம்பனுக்கும் கம்பராமாயணத்திற்கும் கொள்ளி வைக்கப் பார்த்த போதிலும், கம்பராமாயணம் என்றும் 'வாழும் இலக்கியம்' என சமுதாயம் உணர்ந்து கொண்டது. காலத்தால் அழிய முடியாதவன் கம்பன். காரணம் அவன் கவிஞன். அவனிடமுள்ள கருத்துக்கள் சமுதாயத்துக்கு என்றும் பயனுள்ளதாகிறது. அதனல் அவன் காவியமான 'கம்பராமாயணம்' ''வாழும் இலக்கியமா''கத் திகழ்கிறது.

திருக்குறள் போன்ற இலக்கியங்கள் தமிழ் நாட்டார் மட்டுமல்ல வேறு நாட்டாருமே போற்றத்தக்கதாக அமைந்துள்ளன. அவர்களுடைய நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் ஆகிய பாரம்பரியத்தையுந் தாண்டி அவர்கள் போற்றத்தக்க இலக்கியமாக விளங்குகிறது. இத்தகைய இலக்கியத்தான் ''வாழும் இலக்கியம்'' என்னும் பெயர்ப்பேறு பெற்றுள்ளது.

—'ஈயினி'

## புத்தியில்லாதவன்

கோபால் எல்லாமாணவர்களையும் விட புத்திக் கூர்மையும், சமயத்தில் தப்பிக் கொள்ளும் ஆற்றலும் உடையவன். ஒரு நாள் அவன் தன் நண்பனுடன் வகுப்பாசிரியர் சுந்தரம்பிள்ளையின் குறை நிறைகளைப் பேசிக்கொண்டிருந்தான். கடைசியாக அவன் தங்கள் வகுப்பாசிரியர் சுந்தரம்பிள்ளை, ''புத்தியில்லாதவன்'' என்ருன் எங்கிருந்தோ வந்த ஆசிரியர் சுந்தரம்பிள்ளையின் காதுகளில் கோபாலின் பேச்சு விழுந்தது. உடனே கோபாலை இழுத்துக் கொண்டு போய் தலைமை ஆசிரியர் முன்விட்டு விசயத்தை விளக்கினர். தலைமை ஆசிரியர் ''ஏன் அப்படிச் சொன்னுய்?'' என்று அதட்டிக் கேட்டார். அதற்குக் கோபால் ''சார் நான் இவரைப் 'புத்தியில்—ஆதவன்' என்றேன். அதில என்ன பிழை'' என்ருன். தலைமை ஆசிரியர் முகம் மலர்ந்தது. சுந்தரம்பிள்ளை ஆசிரியரின் முகம் கறுத்து வெட்கத்தினுல் தலை குனிந்தார்.

—செ. யோ. யோசேப்பு,
மானிப்பாய்.

## நடப்பதென்ன?

ஒரு மலையைச் சுற்றிப் பலர் கூடியிருந்தனர் எதையோ காண்பதற்காக. அந்த மலையிலிருந்து ஏதோ ஒருவகையான ஓசை கேட்டது. இதைக் கேட்டவர்கள் ஏதோ பெரிதாய் ஊர் மக்களுக்கு கூறவே, 'நடப்பதென்ன' என்பதை அறிய ஊரே மலையினருகே திரண்டு நின்றது. எல்லோரும் அந்த மலையை—சப்தம் வந்த இடத்தை ஆச்சரியக் கண்களோடு—திறந்த கண்களை மூடாதவாறு பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது.

ஓர் எலியை ஒரு முயல் துரத்திக் கொண்டு அடர்ந்த செடியினுள் ஓடியது. அதைக் கண்ட மக்களின் முகத்திலே அசடு வழிந்தது; அவசியமில்லா ஒரு சிறிய விஷயத்தைப் பெரிதாய்த் திரித்துக் கூறக் கூடாது.

—அ. அ. மஹ்ருமுது,
மாத்தளை.

## மின்மினி

இரவி நாகத்திடையே உறையும் நேரம். பிறை இன்னும் வானத்தில் பிறக்கவில்லை வெள்ளியும் பூத்து நிறையவில்லை. அடிவானத்தில் கதிரவனின் இரத்தக்கறை! மாலைக்கும் இரவுக்குமிடையே நிலவும் மந்தகாசநேரம்.

இவ் வேளையிலே முத்துச் சப்பறமாக, ஒவ்வொரு தருக்களின் இலை கொடிகளெல்லாம் மினுக்கி மினுக்கி சிரிக்கின்றன. இதேபோல் நிலத்திலும் பல முத்துக்கள் சிதறிப் பளிச்சிடுவது போன்ற ஒளி எழுகிறது. இவை யெல்லாம் என்ன? மின்சாரமோ? இல்லை. காட்டுப்புறத்திலேது மின்சாரம். பின்? மின்மினி!

ஆமாம், இயற்கை தந்த மின்சாரக் குஞ்சுகள். காட்டிற்கொளியூட்டும் கனக மணிகள் குடிசைகளுக்கு அணி செய்யும் தூண்டா மணிகள். மின்மினியின் தொழிலே மின்னி மின்னி வாழ்வதுதான். ஆகவே அது தவருமல் மின்னி மின்னி புன்னகை செய்கிறது. ஆனல் அந்தப் புன்னகையில் புகுந்திருக்கும் பொருள்? யார் அறிந்தார் என்று கேட்கிருன் ஒரு புதுயுகக் கவி.

''மின்னி மன்னி ஒளி வீசித்
திரிகின்ற
மின்மினி தாம் இப்
பூவுலகில்
புன்னகை யோடு தான்
போதிக்க வந்திட்ட
புத்திமதிகளை யார்
அறிவார்?''

மின்னி மின்னி மூடும் இந்த மின்மினியில், என்ன போதனையைக் கண்டுவிட்டானும் இக் கவிஞன்?- மனிதனின் சிந்தனை பற்ற மூளை செப்பிவிடும் இப்படி. அதே நேரத்தில் 'சாமி! மின்மினி புகட்டும் போதனைதான் என்ன!' என்கிறதே! கவிஞனின் உள்ளம். ஆமாம், புரிந்துவிட்டது.

இறப்பு-பிறப்பு-இன்பம்-துன்பம், ஏற்றம்-இறக்கம், வெற்றி-தோல்வி, காதல்-சாதல்! இவையனைத்தும் மனிதனின் வாழ்க்கைச் சக்கரத்தில் சுழல்வன என்று கூருமற் கூறுகின்றன வே் மின்மினிகள்! வஞ்சனையின் மூலம் யோகம் காண்போருக்கு, உன் எதிர்காலம் சோகம் என்று சோதிடம் சொல்கிறதே மின்மினி. பொய் சொல்லி இன்பங் க[illegible] உன் எதிர் காலம் துன்பம் என்று சுட்டிக் காட்டுகிறது மின்மினி.

இப்பொழுது புரிந்து விட்டது மின்மினியின் புன்னகை வாழ்க்கை.

—மு. பொன்னம்பலம்,
இரத்தினபுரி.

## சங்கீதம்

உலகிலே பல கலைகள் உண்டு. அவற்றுள் சங்கீதமும் ஒன்ருகும். செவிக்கு இன்பத்தைத்தரக் கூடிய கலையே சங்கீதமாகும். இதற்குக் 'காந்தர்வ வேதம்' என்றும் பெயருண்டு. சங்கீதம் உலகிலேயுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைக் கொடுக்கக்கூடியது. எல்லோரும் சங்கீதத்தைக் கேட்டு இன்புறுவரேயன்றி துன்புற மாட்டார்கள்.

சங்கீதத்தின் உதவியினலே அடக்க முடியாத உயிர்களையும் அடக்கலாம். உதாரணமாக கொடும் நஞ்சையுமிழ்கின்ற நாகப் பாம்பானது 'நாக வராளி' என்னும் இராகத்துக்கு அடங்கி தன்னையறியாமலே ஆடத் தொடங்கிவிடுகின்றது. சங்கீதத்தில் ஒருவன் லயித்துவிட்டானேயானல் அவனை அவ்வின்பத்திலிருந்து விடுவிப்பது அருமைதான்.

கல்விக்குத் தெய்வமான கலைமகளையும் கண்ணனையும் எடுத்துக்கொள்வோம். கலைமகளின் கையிலே வீணையும் ஏடுமே காட்சியளிக்கின்றன. கண்ணனின் கையில் புல்லாங்குழல் காட்சியளிக்கின்றது. இவை சங்கீதத்தின் பெருமையைச் சொல்லாமலே விளக்குகின்றன.

உத்தமமான சங்கீதத்தைக் கேட்பதால் எங்களுக்குத் தெய்வீக உணர்ச்சி உண்டாகின்றது. எந்தக் கோபமுடையவனையும் சங்கீதத்தால் அடக்கலாம். இனிய கானத்தை நாங்கள் கேட்குங்கால் எங்களை மறந்து தெய்வலோகத்தில் சஞ்சரிப்பவர்களாகி விடுகிருேம். எந்தக் கவலையுடையவனும் இனிய சங்கீதத்தைப் பாடுவதால் அல்லது கேட்பதால் தனது மனநோயைத் தீர்க்கலாம். இச் சக்தி சங்கீதத்திற்கே உண்டு என்று கூறலாம்.

ந. குணநாயகி,
மட்டக்களப்பு.

## கலைவாணர் இல்லாக் கலை

கல்லூரி செல்லாது உள்ளகலை அத்தனைக்கும்
நல்லாசா ஞனே நானிலத்தே—வல்லாரும்
போற்றிகழ லேந்தும் புகழ்சூழ்மெய்ப் புண்ணியனை
கூற்றங் கவர்ந்ததை யோ.

பாரி கிடைத்துவிட்டான் பஞ்சமது அஞ்சியோட
வாரி இறைப்பான்மென் மேலென்றே—கார்காண்
மயிலாய் மகிழ்ந்தாடி மக்கள் களிக்கையிலே
புயலாய் புகுந்ததையோ சாவு.

வள்ளுவன்போல் கம்பனைப்போல் பாரதி இளங்கோபோல்
எல்லாரும் கொண்டாடும் ஏற்றங்கொள்—நல்லானும்
என். எஸ். கே. தன்பெருமை ஓங்கி பரவுமெங்கும்
வண்டமிழ் விண்டபுகழ் போல்.

சுடுகாடு மேனி தழுவதருந் தென்றல்
தொடுவானில் தோன்றும் நிலவு—ஒடுக்கம்
விலை சொல்லும் பெண்டிர் நிலையான தேநம்
கலைவாணர் இல்லாக் கலை.

—'வில்லவன்'

## நிறைவேறுமா?

வளர்மதி மருமக்கள் வள்ளுவர் குறளையும், அவ்வை பாடலையும் தங்களிரு கண்களெனப் போற்றிக் கற்று அவ்வாறு ஒழுகி வர வேண்டும் என்பதே என் உள்ளக் கிடக்கை. இது நிறைவேறுமா?

—சோ. இராசேந்திரம்
கந்தகெதரை

வளர்மதி —சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்..................................................

பாடசாலை..................................................

விலாசம்..................................................

..................................................

.................................. பெற்ரேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்.

.................................. கையொப்பம்.

## வளர்மதி புதிய மருமக்கள்

1799 சா. ஜெயபாலன், மீசாலை
1800 அம்புரோஸ் யேக்கப் யாழ்ப்பாணம்
1801 எஸ். எச். றஹீமு உம்மா, பத்தாம்பிட்டி
1802 பெ. சின்னையா, மாயாவ, கண்டி
1803 க. எவற்றிற்ருர், மயிலிட்டி
1804 வை. ராசசிங்கம், கோண்டாவில்
1805 வ. இ. ஜெகராசசிங்கம், மல்லாகம்
1806 பா. சிவராமகிருஷ்ணன், சிலாபம்
1807 கா. சின்னையா, பொத்துவில்
1808 கா. யோகேந்திரராசா, மாத்தளை
1809 மா. கதிரொளிவேலவன். கிரிலப்பனை
1810 வெ. நிர்மேஸ்வரி, சிந்தங்கேணி
1811 ப. குமரேசு, ஓமந்தை.
1812 எஸ். மேரிகிறீஸ்வரசர்மா, காரைநகர்
1813 கே. சுப்பிரமணியம் வவுனியா
1814 த. சண்முகலிங்கம், நீராவியடி, யாழ்ப்பாணம்
1815 க. மோகனசுந்தரம் நமுனுகுல
1816 க. திருச்செல்வம், வேலணை
1817 து. தயானந்தமூர்த்தி, மட்டக்களப்பு
1818 சி. சடாட்சர சண்முகதாஸ், புங்குடுதீவு
1819 சி. ஏகாட்சரி, மட்டுவில், சாவகச்சேரி
1820 கரீமா சதகதுல்லா, யாழ்ப்பாணம்
1821 தி. செந்திவேல், கல்கிசை
1822 தி. பூபாலபிள்ளை, கஞதாவளை
1823 க. சிவானந்தன் கல்வயல், சாவகச்சேரி
1824 இ. சுகிர்த்தராஜா, பருத்தித்துறை
1825 கே. மகேந்திரன், யாழ்ப்பாணம்
1826 பொ. நல்லைநாதன், கொழும்பு-2.
1827 திற்ரு சுசந்தா ஒருட்றிகோ, கட்டுப்பொத்தை
1828 அற்புதமலர், கோப்பாய்.
1829 எஸ். பாலச்சந்திரன் நாவலப்பிட்டி
1830 சி. பொன்னம்பலம் கரவெட்டி

## மாமா பதில்

க. வேலாயுதம், லப்பந்துறை

உமது 'உண்மை நட்பு' என்ற கதையும், 'வாழ்க்கை' என்ற கட்டுரையும் பிரசுரிக்கத் தகுதியுடையவை. ஆனல் உம்மைப் போன்று பல மருமக்களும் எழுதியுள்ளார்கள். இவைகளை எப்படி ஒரே முறையில் வெளியிடுவது. ஒழுங்கின்படி வெகு விரைவில் உமது கதை பிரசுரிக்கப்படும்.

'தாமரைத்தீவான்', காலி-எலி

அத்தாட்சிப் பத்திரம் அச்சாகிறது. அச்சானதும் அனுப்பிவைக்கப்படும்.

பொ. ஆத்மானந்தன், யாழ்ப்பாணம்

மாமாவின் மருகனுவதற்கு தடையொன்றுமில்லை. ஆனல் மனுப்போடவேண்டும். அதற்கு வளர்மதி அங்கத்தவர் மனுப்பத்திரம் நிரப்பியனுப்பினுல் சரியாகப்போகுது.

இ. பொன்மலர், இணுவில்

உம்மைப் போன்ற பல மருக மருகிகளின் வேண்டுகோளின்படி இவ்வாரமே 'எமது அபிப்பிராயம்' என்ற புதுப் பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இரா. சந்திரா, மடுத்தறை

சித்திரங்கள் வரைந்து அனுப்பினுல் நல்லவையானுல் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# "வெள்ளையர் விட்டுச் சென்ற இடத்தில் இன்று சிங்களவர்

## கறையான் புற்றெடுக்க பாம்பு குடி கொண்ட கதையாகி விட்டது"

## அநுராதபுரத் தமிழ் விழாவில் தமிழர் நிலைபற்றிக் கலாநிதி வித்தியானந்தன்

"குமரி எல்லைக்கும் வடமாயவன் குன்றத்துக்கு மிடையே புகழ் மண்டிக்கிடக்கும் தமிழகத்தில் வாழ்ந்த தமிழர் சிங்களச் சீமையில் சிறுபான்மையினர் என்று தள்ளி வைக்கப்பட்டுள்ளனர். எந்தையும் தாயும் சேர்ந்து குலாவி வாழ்ந்த நாடும் இந்நாடே. இங்கே ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பிருந்தே வாழ்ந்துவரும் நாம் இரு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டோம். எனினும் வெள்ளையர் ஆட்சிபீடத்தில் இருந்து இறங்கியதும் நமக்கும் இடம் கிடைக்குமென நினைத்தோம். ஆனல் கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதையாயிற்று"

இவ்வாறு அநுராதபுரத் தமிழ்க் கழக ஆருவது ஆண்டு விழாவில் கலாநிதி சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறினர்.

அனுராதபுரம்தமிழ்க்கழக ஆருவது ஆண்டு நிறைவு விழா தமிழ் விழாவாக சென்ற 12-10-57ல் கொண்டாடப்பட்டது. நீண்டகாலமாக மழையின்றி இருந்த அனுராதபுரத்தில் விழா ஆரம்பமாவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் பெருமழை பொழிந்தது. தமிழுக்கு விழா எடுக்க விழைந்தமையே மழைக்குக் காரணமென மக்கள் வாயார வாழ்த்தினர்கள்.

வில், புலி, கயல், யாழ் பொறிக்கப்பட்ட கழகக் கொடியை முடிக்குரிய வழக்கறிஞர் திரு எஸ். நடராஜா ஏற்றி வைத்தார். விழாவை அனுராதபுர நீதிபதி திரு வே. க. கந்தசாமி திறந்து வைத்தார். வித்தியாதரிசி திரு ஆ. சிவகுரு வரவேற்புரை நிகழ்த்தினர்.

கலாநிதி வித்தியானந்தன் "வள்ளுவனும் பாரதியும்" என்ற தலைப்பில் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"தமிழன் உலகில் உயர்ந்தவன். வள்ளுவர் பிச்சை கேட்பது இழிவென்ருர். தமிழர்கள் உரிமையைக் கேட்டுப் பார்த்தார்கள். கிடைக்கவில்லை. கங்கணம் கட்டிய பின்னரே சிறிது மரியாதை கிடைத்தது. இதனுலேயே இரத்தல் இழிவென்ருர். எப்போது இரக்கின்ருேமோ அப்போது ஒன்றும் கிடையாது. சென்ற வருடம் ஆவணித் திங்கள் ஓர் நிலை தோன்றியது; சவால் விடப்பட்டது தமிழரால்; அதைக் கேட்டு வாளாவிருந்தனர் அரசினர். எட்டு மாதங்களின் பின் உணர்ந்தனர். தமிழர் வாயால் கேட்கமாட்டார்கள்; இனி தாமாகவே உரிமை பெறுவர் என அஞ்சினர். அதன் பயனே உடன்படிக்கை.

"கரும்புத் தோட்டத்தில் கண்ணீர் வடிக்கும் பெண்களைப் பார்த்துப் பெண் என்று கூறிடில் பேயும் இரங்கும் என்பர் என்ருர் பாரதியார். இன்று பாரதி இருந்திருந்தால்......? இல்லாவிடினும் நம்மவர் வடிக்கும் கண்ணீர் இந்த ஒற்றைஆட்சியை வேரோடறுக்கும் என்பது உண்மை"

பண்டிதர் மு. ஆறுமுகன் "வெல்வது வேண்டின் வெகுளி விடல்" என்னும் பொருள் பற்றி சொற்பெருக்காற்றினர்.

பின்னர் விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் திரு த. இராசையாவும இசைமணி செல்வி பூமணி வேலுப்பிள்ளையும் சிறந்த பக்கவாத்தியங்களுடன் இன்னிசை விருந்தளித்தார்கள்.

### பாலமுனையில் நபிவிழா

பாலமுனை இஸ்லாமிய நூல் நிலைய முற்றவெளியில் சென்ற 13-10-57-ல் மேற்படி நூல்நிலைய போஷகர் ஜனப் மஸாஹிர் சாஹிபு தலைமையின் கீழ் ஆரம்பமாயிற்று. அத்தருணம் ஜனுப்களான டி. ஏ. அஹமத் சாஹிபு, எம். கே. மீரான்சாஹிபு, மௌலவி எம். ஐ. முனீர்சாஹிபு, ஆகியோர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மகிமைகளைப் பற்றி பேசினுர்கள்.

### அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கம்

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கம் யாழ்ப்பாணக் கிளையின் உறுப்பினர் கூட்டம் சென்ற 29-9-57ல் இயக்கத் தலைவர் ந. பொ. இராசதுரை தலைமையில் 2ம் குறுக்குத் தெருவில் உள்ள செயலாளர் இல்லத்தில் நடைபெற்றது.

இயக்க வளர்ச்சி குறித்து த. வேலழகன், எஸ். வி. கண்ணன், சி. நாகராஜன், க. ந. இராசரத்தினம், ப. க. பாலசுப்பிரமணியம் முதலியோர் பேசினர்கள்.

பின் புதிய செயற்குழு உறுப்பினர்களாக கீழ்க்கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: ந. பொ. இராசதுரை, துணைத் தலைவர்: ம. கனகசபை, செயலாளர்: த. வேலழகன் துணைச் செயலாளர்: க. சேகர், பொருளாளர்: கி. வெ. கண்ணன்.

செயற்குழு உறுப்பினர்களாக க. ந. இராசரத்தினம், ப. க பாலசுப்பிரமணியம், சி. நாகராஜன், அ. த. கணேசன், எஸ். மகேஸ்வரன், சி. கனகசபாபதி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

எண் பார்வையாளராக இ. கந்தசாமி தெரிவுசெய்யப்பட்டார்.

அடுத்த தைத் திங்களில் தமிழர் திருநாளை பொங்கல் விழாவாகவும் தமிழ் விழாவாகவும் கொண்டாடுவதெனவும் அதற்கு தி. மு. க. பேச்சாளர்களை தாயகத்தில் இருந்து அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இந்த விழாக்களை சிறப்பாக நடத்த ரூ. 2000 பொதுமக்களிடம் நிதி திரட்ட செயற்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

### சாம்பற்றீவு கிராமச்சங்கம்

சாம்பற்றீவு கிராமச் சங்கக் கூட்டம் சென்ற 5-10-57-ல் தலைவர் திரு. வ. மயில்வாகனம் ஜே. பி. தலைமையில், கி. ச. அலுவலகத்தில் நடை பெற்றது.


சங்க அங்கத்தவர் திரு; வ. தா. தம்பிராசா பேசுகையில் சாம்பற்றீவில் உள்ள மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கல்விபயிலும் பிள்ளைகள் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் சைவ சமயப் பிள்ளைகளாக இருப்பதால், சைவப் பிள்ளைகட்கு சைவ சமயப் பாடமும் கிறிஸ்தவ பிள்ளைகட்கு கிறிஸ்தவ மத போதனையும் சமயபாடங்களாக படிப்பிக்க வேண்டும் என்றும், சாம்பற்றீவில் பிறந்து வளர்ந்த ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியரை ஆசிரியராக நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவ் வேண்டுகோளை மேற்படி பாடசாலை மனேஜருக்கு அனுப்பப்பட்டது.

### ஜாமி-உல் இஸ்லாம் சங்கம்

புதுக்கடை ஜாமிஉல் இஸ்லாம் சங்கத்தின் செயற்குழு கூட்டம் அணிமையில் மேற்படி மன்ற அலுவலகத்தில் கூடி மேற்படி சங்கத்தின் தலைவரும் அலுத்கடை வட்டார முனிசிப்பல் சபை அங்கத்தவருமான காலஞ்சென்ற எஸ். பி. ஏ. ஹமீத் மரணம் குறித்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும் சகோதரர்கட்கும் அனுதாபம் தெரிவிப்பதாக ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டது.

காலஞ்சென்ற ஜனுப் ஹமீத் அவர்கள் சங்கத்திற்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் சிறப்பாக புதுக்கடை வட்டார மக்களுக்கும் செய்த சேவையினை நன்றியுடன் கவனத்திற்கு கொண்டு வந்தது. அன்னரின் ஆத்மாசாந்தி அடையும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி கூட்ட முடிவில் பிரார்த்தனை நடைபெற்றது.


எவரி 5 அந்தர் மேசைத் திராசு



எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும்.

கே. என். அப்துல்காதர் ராவுத்தர் & கம்பெனி
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10

USHA



ஒவ்வொரு வீட்டிற்கும் உகந்தது அழகிய தோற்றத்துடன் விளங்கும் உஷா தையல் மெஷின்கள் எம்ராய்டரி மற்றும் தையல் வேலைகளை இன்பமயமாக்குகிறது.

எல்லா உஷா மாடல்களும் அதிநூதன தொல்லையற்ற சாதனங்களுடன் கூடியவை.

ஏக விநியோகஸ்தர்கள்:

ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு-12.

போன்: 6060

'ஷரீfபா' லிம்ப்ரிக்
(Regd. T. M. 16406)

'குமாரி' கேம்ப்ரிக்
(Regd. T. M. 17884)

'மொடென்டெக்ஸ்'

'ஷரீfபா' லிம்ப்ரிக், 'குமாரி' கேம்ப்ரிக், 'மொடென்டெக்ஸ்' கழுவக்கூடியவை, சுருங்காதவை, நிறம் மங்காதவை என்பதற்கு உத்தரவாதம் பெற்றுள்ளன.

புடவை ஓரங்களில் 'ஷரீfபா' 'குமாரி' அல்லது 'மொடென்டெக்ஸ்' என்ற வார்த்தைகள் காணப்படாவிடில் அவை அசல் புடவையல்ல என்பதாகும்.

ஏக இறக்குமதியாளர்கள்:

தி யூனைட்டெட் ட்ரேடிங் கம்பெனி,
(வர்த்தகர்கள்)
தந்தி: "MODERN" 206, கெய்ஸர் வீதி, கொழும்பு. போன்: 5888.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் 1ம் திகதி முதல் திரைகளில் காட்சியளிக்கிறுள்!


| கிங்ஸ்லி | பிளாஸா | வெலிங்டன் | விஜயா |
|---|---|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) | (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) |

ஆகிய திரைகளில்!

ஸ்வஸ்திக்சித்ராவின்

# மகுடம் காத்த மங்கை





நடிகர்கள்:

பத்மினி, ராகினி, ஆகா, அன்வர், குமார், ஹெலன், லீலா ஆகியோர் நடித்தது.

கேவா கலர் - நடனங்கள்

---


| கிங்ஸ்லி | பிளாஸா |
|---|---|
| (கொழும்பு) | (வெள்ளவத்தை) |
| வெலிங்டன் | விஜயா |
| (யாழ்ப்பாணம்) | (மட்டக்களப்பு) |

(ஆகிய திரைகளில் கடைசி வாரம்)

மற்றும் மொடர்ன் (பதுளை) கிருஷ்ண (திருகோணமலை)

ஆகிய திரைகளில்!





அன்னபூரணவின்

# திருட்டு ராமன்

ஏ. நாகேஸ்வரராவ், சாவித்திரி, ஜமுனு, ரேலங்கி

மற்றும் பலர் நடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் [illegible] ஜெநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 ஒக்டோபர் மாதம் 27-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது